பக்கங்கள்: 14

Registered as a Newspaper

PUMP
With
Standard Accessories
Select

NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

**அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி**

விலை
ரூ. 5-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்

நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 5 பிரமோதூத ஹூ சித்திரை மீ 12 உ சனிக்கிழமை ஹிஜ்ரி 1410 ஷவ்வால் பிறை 01 (26—05—1990) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 16

ஈரோஸ் தனிநபர் பிரேரணையாக கொண்டு வந்தால்

# ஆறாவது திருத்த நீக்கம் வர நான்கு மாதகாலம் எடுக்கும்

## நாடாளுமன்ற வட்டாரங்கள் தகவல்

கொழும்பு, மே 26

ஆறாவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்குவதற்கு அரசாங்கம் சட்டமூலம் கொண்டுவராமல் —

ஈரோஸ் எம். பிக்கள் அதனை தனிநபர் பிரேரணையாகக் கொண்டுவந்தால்—

நாடாளுமன்றத்தில் அது வாக்கெடுப்புக்கு வருவதற்கு சுமார் நான்கு மாத காலம் எடுக்கும்.

நடாளுமன்ற வட்டாரங்கள் இத்தகவலை வெளியிட்டன,

அரசமைப்புத் திருத்தம் ஒன்று நாட்டின் நலனுக்கு முக்கியமானதும் அவசரமானதும் என்று ஜனாதிபதி அல்லது அமைச்சரவை குறிப்பிட்டு சுட்டிக் காட்டினால் மட்டுமே அத்தகைய திருத்தம் அவசர அவசரமாக நாடாளுமன்றத்துக்குக் கொண்டுவர வாய்ப்பு ஏற்படும்.

இத்தகையதிருத்தம் ஜனாதிபதி அல்லது அமைச்சரவையினால் அவசரமாக நிறை

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுப நேரம்

26- 5 - 90

சனிக்கிழமை வைகாசி 12

சுபநேரம் ;
02.52 -40. 22

இராகுகாலம்
08 52 - 10.22

## 110 பேர் வரை இன்று விடுவிக்கப்படுவர்

யாழ்ப்பாணம், மே 26

விடுதலைப் புலிகளினால் தடுத்து வைக்கப்பட்டவர்களில் சுமார் 110 பேர் வரை நாளை ஞாயிறு காலை 11 மணியளவில் யாழ்ப்பாணம் பெருமாள் கோவிலடியில் வைத்து விடுவிக்கப்பட உள்ளனர். (இ-9)

# வடக்கில்தான் லஞ்சம் இல்லை அதற்கு புலிகளுக்குப் பாராட்டு!

## நாடாளுமன்றில் சுதந்திரக் கட்சி எம்.பி தெரிவித்தார்

கொழும்பு, மே 26

இலங்கையில் யாழ். குடாநாட்டில்தான் ஊழல்கள் ஏதும் இல்லை. அதற்குக் காரணம் விடுதலைப் புலிகள், அவர்களைப் பாராட்டுகிறேன்.

—இப்படிக் கூறினார் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி எம். பி. திரு. ஜோர்ஜ் பெர்ணாண்டோபுள்ளே. நேற்று நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அண்மையில் யாழ். குடாநாட்டில் தாம் ஐந்து நாட்கள் சுற்றுப்பிரயாணம் செய்ததாகவும் அவர் சொன்னார்.

இலங்கையில் வடக்கில்தான் அரச நிர்வாகம் ஒழுங்காக, அமைதியாக, சிறப்பாக நடைபெறுகிறது. அரச அதிபர்முதல் கிராமசேவையாளர்கள்வரை அனைவரும் ஒழுங்காகச் செயற்படுகிறார்கள். லஞ்சஊழல் ஏதும் அங்கு இல்லை.

இதற்குக் காரணம் விடுதலைப்புலிகள். அதற்காக நான் அவர்களைப் பாராட்டுகிறேன்.

ஏனைய மாவட்டங்களில் அரச நிர்வாகம் முழுவதிலும் லஞ்சம் தலைவிரித்தாடுகிறது.

உயர்நீதிமன்றம்முதல் மயானம்வரை எங்கு லஞ்சம்.

உயர்நீதிமன்றத்தில் ஒரு வழக்கின் பதிவுப் பிரதி எடுப்பதற்கும் லஞ்சம் கொடுக்க வேண்டும்; மயானத்தில் ஒரு

(4 ஆம் பக்கம் பார்க்க)

### மின்சாரம் துண்டிப்பு

யாழ்ப்பாணம், மே 26

சுன்னாகம் - யாழ்ப்பாணம் பாரிய மின் மார்க்கத்தில் அவசர, அவசிய திருத்த வேலைகள்மேற்கொள்ளப்பட வேண்டியிருப்பதால் நாளை (ஞாயிற்றுக்கிழமை) காலை 8மணி முதல் மாலை 5மணி வரை பின்வரும் பகுதிகளுக்கு மின்சாரம் தற்காலிகமாகத் துண்டிக்கப்படும் என்று இலங்கை மின்சார சபை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அராலி வீதி, கண்ணாபுரம், பண்ணை, குருநகர், யாழ். மடத்தடி, மண்டைதிவு, நல்லூர், அரியாலை, ஸ்ரான்லி கல்லூரிப்பகுதி, உப்புக்குளம், புங்கங்குளம், பாசையூர் ஆகிய பகுதிகளுச்கான மின்விநியோகமே துண்டிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டது. (உ)

# வெளிநாட்டு பணம் பெறுவோரின் உணவு முத்திரை நிறுத்த வேண்டும்

## கிராமசேவையாளர் கலந்துரையாடலில் டொமினிக்

யாழ்ப்பாணம், மே 26

வெளிநாட்டில் உழைப்பவர்களின் உதவியைப் பெற்றுக்கொண்டிருக்கும் குடும்பங்களுக்கு உணவு முத்திரை வழங்கப்பட்டிருந்தால் அவை உடனடியாக நிறுத்தப்பட வேண்டும்.

நேற்று யாழ். மனோகரா படமாளிகையில் கிராம சேவையாளர்களின் பிரச்சினைகள் குறித்து நடைபெற்ற கலந்துரையாடலில் பங்கு கொண்டு உரையாற்றிய விடுதலைப் புலிகளின் யாழ் மாவட்ட அரசியற்பொறுப்பாளர் திரு. டொமினிக் இவ்வாறு தெரிவித்தார்.

கலந்துரையாடலில் பல கிராம சேவையாளர்களும் பங்குகொண்டனர்.

திரு. டொமினிக் மேலும் தெரிவிக்கையில்:-

நடைமுறையிலே மக்களுடன் நெருங்கிய உறவுகளை வைத்திருப்பவர்கள் நாங்களும், நீங்களுமே.

அந்த நிலையில் இருந்துதான் ஒவ்வொரு மக்களின்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### தமிழ் தின போட்டி 2 ஆம் 3 ஆம் திகதிகளில்


யாழ்ப்பாணம், மே 26

வடக்கு - கிழக்கு மாகாண தமிழ் தினப்போட்டிகள் எதிர் வரும் 2 ஆம் 3ஆம் திகதிகளில் திருகோணமலையில் நடைபெற உள்ளன.

சகல கோட்டங்களிலிருந்தும்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### கருத்தோவியமும் கவிதையும்




ஆழக் கிணற்றினுளே நீளக் கயிறு விட்டு
அள்ளி வந்த வாளித் தண்ணீர்
கைக்கு வருமுன்னே கயிறு புரியாகி
கப்பிகொழுவி கேள்வியாய் ஆயினதே!

மலையகத் தமிழர் விவகாரம்:

# இலங்கைக் குடியுரிமை வழங்க தமிழகம் வற்புறுத்த வேண்டும்

## புலிகள் கருணாநிதியிடம் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 26

ஒரு லட்சம் மலையகத் தமிழர்களையும் நாடு கடத்துவதற்கு சிறிலங்கா அரசு எடுத்துவரும் முயற்சிக்குத் தமிழ்நாடும், தமிழக முதல் வரும் ஆதரவளிக்கக் கூடாது. அவர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்க வேண்டும் என்று இலங்கையிடம் வற்புறுத்த வேண்டும்.

இவ்வாறு விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி தமிழ்நாடு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதியையும், தமிழக மக்களையும் கேட்டுள்ளனர்.

இது சம்பந்தமாக வி. பு. ம. முன்னணி விடுத்த அறிக்கை ஒன்றிலேயே மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளது.

பிரஸ்தாப அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

21-5-90 அன்று தமிழீழம் எங்கும் மலையகம் வாழ்தமிழ் மக்களில் ஒரு லட்சம் பேரை நாடு கடத்த சிறிலங்கா அரசு முயல்வதை கண்டித்தும், மலையகத்தில் தமிழ் மக்கள் மீது நடத்தப்படும் அடக்குமுறைகள், கொலைகளைக் கண்டித்தும், பொது வேலை நிறுத்தம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

# தஞ்சம் கோரச் சென்ற 3 தமிழரை 'பிரிட்டிஷ் எயர்வேஸ்' கடத்தியது!

லண்டன், மே 26

பிரிட்டனில் அரசியல் தஞ்சம் கோரச் சென்ற மூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்களை ''பிரிட்டிஷ் எயர் வேய்ஸ்'' நிறுவனத்தினர் பிரிட்டிஷ் குடியகல்வு அதிகாரிகளுக்குத் தெரியாமல் மறைத்து வைத்திருந்து பின்னர் இலங்கைக்கு திருப்பி அனுப்பிய சம்பவம் ஒன்று பிரிட்டனில் பெரிய பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

**சம்பவம் பற்றிய முழு விவரம் நாளைய உதயனில்:**

இது ஒரு கடத்தல் சம்பவம் என்றே மண்டிக்கப்படுகிறது.

போலி பயண தஸ்தாவேஜுகளுடன் பயணஞ் செய்பவர்களை ஏற்றி வரும் விமான சேவை நிறுவனங்களுக்கு பிரிட்டிஷ் அரசு விதிக்கும் அபராதத் தண்டனையில் இருந்து தப்பும் ஓர் நடவடிக்கையாகவ ''பிரிட்டிஷ் எயர்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகள்-கனேடிய தூதர் நேற்று 3 மணி நேரம் பேச்சு

யாழ்ப்பாணம், மே 26

நேற்று விடுதலைப்புலிகள் பிரமுகர்களுடன் கனேடிய தூதுவர் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

பேச்சுக்களில் விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கமும் கனேடிய தூதரும், மற்றும் அவரது செயலாளரும் கலந்து கொண்டனர்.

பேச்சுக்கள் சுமார் 3 மணி நேரம் நீடித்தன. நாட்டின் அரசியல் நிலைமை பற்றி அளவளாவப்பட்டதாகச் சொல்லப்பட்டது. (உ-9)

## திங்கட்கிழமை முதல் மா, பாண் விலை அதிகரிப்பு

யாழ்ப்பாணம், மே 26

நாளை மறுநாள் திங்கட்கிழமையிலிருந்து மா மற்றும் பாணின் விலை அதிகரிக்கப் படவுள்ளது.

உணவு ஆணையாளரின் அறிவுறுத்தலின் பிரகாரம் ஒரு கிலோ மாவின் உணவுக் களஞ்சிய விலை 13 ரூபா 45 சதமாகவும் -

மொத்த விற்பனை விலை 13 ரூபா 80 சதமாகவும்-

சில்லறை விலை 14 ரூபா 25 சதமாகவும் -

ஒரு இறாத்தல் பாணின் விலை 5 ரூபா 30 சதமாகவும் இருக்கும் என யாழ். செயலகத்தின் உணவுக் கட்டுப்பாட்டுக் கிளை அறிவித்துள்ளது. (இ.7)



யாழ்ப்பாணம் ஆங்கில அக்கடமியின் சான்றிதழ் வழங்கும் வைபவம் நேற்று முன்தினம் மாலை சென். ஜோன்ஸ் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரிட்டிஷ் தூதுவர் திரு. டேவிட் கிளாட்ஸ்ரன் அங்கு உரையாற்றுவதை முதலாவது படத்தில் காணலாம். அடுத்த படங்களில் திருமதி ஏப்ரல் கிளாட்ஸ்ரன், யாழ். அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் ஆகியோர் உரையாற்றுவதைக் காணலாம். மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்கும் போது திருமதி கிளாட்ஸ்ரன் குசலம் விசாரிப்பதையும், அக்கடமியின் கல்விப்பகுதி இயக்குநர் திரு. கந்தையா நவரேந்திரன் அருகில் நிற்பதையும் கடைசிப் படத்தில் காணலாம். (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**புதுமையும் எழிலும் பொலிவும் பல்சுவை வார இதழ்**

# சின்னஞ்சிறு விளம்பரம்

## விற்பனைக்கு

ஒரு வருடம் பாவித்த 49 C. C. ஹொண்டா புத்தம் புதிய (Brand new) மோட்டார் சைக்கிள் உடன் விற்பனைக்கு உண்டு: தொடர்பு: 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3413)

புதிய Unitra Recorder, Amplitier, Speaker ஆகியனவும் புதிய Camaraக்களும் விற்பனைக்குண்டு. அத்துடன் பழைய England ரலி சைக்கிளும் (Size 26'') விற்பனைக்குண்டு. தொடர்பு: K. பிரதீபன் No: 7, சிவப்பிரகாசம் வீதி, யாழ்ப்பாணம். (3711)

அழகிய பல நிறங்களுடைய வளர்ப்பு மீன்களும் பெண்டம் கோழிக்குஞ்சுகளும், ஒரு சோடி பெரிய வான் கோழியும் அடைவைப்பதற்கு ஏற்ற முட்டைகளும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு K. அன்னலிங்கம், கலட்டி லேன், கோண்டாவில் மேற்கு. (13283)

நல்ல இன பம்பாய் வெங்காய விதை விற்பனைக்குண்டு. சிவஜங்கரன் விவசாய விற்பனை நிலையம், அராலி மேற்கு, வட்டுக்கோட்டை. (3707)

ரெலிவங்கன் T. V. 26 அங்.கலர், விற்பனைக்கு உண்டு. விலை ரூபா 15,000. ரேடியோ மனுவல், 131, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (3497)

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த [Crimson Globe] பீட்றூட் விதை, விவசாய ஆய்வுகூட அனுமதி பெற்றது. உர் விளைச்சல் தரவல்லது விற்பனைக்கு உண்டு பிள்ளையார், 259' காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (3490)

## தேவை

வவுனியாவில் புதிதாக ஆரம்பிக்கப்பட இருக்கும் தையல் நிலையத்திற்கு துணிகள் அளவெடுத்து வெட்டுவதற்கும், தைப்பதற்கும் ஆண்கள் தேவை. தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S. கமலானந்தன், நில்கந்தா, மானிப்பாய். (3706)

தச்சு வேலைக்கு நல்ல அனுபவமுள்ள இருவர் தேவை. சம்பளம் பேசித் தீர்மானிக்கப்படும். S. K. தச்சுத் தொழிற்சாலை நெத்தலி ஆறு, தர்மபுரம், சாப்பாடு இருப்பிடம் தரப்படும். (C/4588)

சிறு வீடு அல்லது அனெக்ஸ் வாடகைக்கு தேவை. சகல வசதிகளுடன் விரும்பத்தக்கது நல்ல வாடகையும் முற்பணமும் கொடுக்கப்படும். முழு விபரங்களையும் தெரிவிக்கவும் இல–131 மே/பா உதயன் யாழ்ப்பாணம். (13269)

விறகு கொத்துவதற்குஆட்கள் தேவை. கூலி அதிகரிக்கப்பட்டுள்ளது 3 நேரம் தேநீரும் வழங்கப்படும் தம்பிஐயா விறகுகாலை 46, பிரப்பங்குளம் ஒழுங்கை, வண்ணார்பண்ணை. (13230)

## கோழிக்குஞ்சுவிநியோகம்

ஒரு மாத Hylineவெள்ளை சிவப்பு, கறுப்பு, பேட்டுக் குஞ்சுகள் (தடுப்பூசி போடப்பட்டது) விற்பனைக்குண்டு சற்குணராஜா & பிறதர்ஸ், பிரம்படி, லேன். கொக்குவில் [3499]

## வாப் ஓடுபவர் தேவை

மின்தறி நெசவாலைக்கு வாப்ஓடுபவர் தேவை. 28/5/90 காலை 9 மணிக்கு நேரில் சமுகம் கொடுக்கவும் ஸ்ரீராஜ் இன்டஸ்றீஸ் வட்டு கிழக்கு, சித்தன்கேணி. (3701)

## ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சை

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆண்டு 5 புலமைப் பரிசில் முன்னோடிப் பரீட்சைகள் ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் மாலை 3 மணி முதல் 5 மணி வரை நடைபெறவுள்ளன. ஆரம்பம் 27-5-1990 விபரங்களுக்கு செல்வி எஸ். எஸ். ஐயர் 12, [36] வைமன் வீதி, நல்லூர். [13280]

## காணி விற்பனைக்கு

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குள் மீசாலை மத்திய வீதியில் நல்ல தண்ணீருடன் கூடிய 45 பரப்புக் காணி விற்பனைக்குண்டு. பிரித்தும் கொடுக்கப்படும். தொழிற்சாலை அமைப்பதற்கும் உகந்தது. தொடர்பு :- அ. உமா சங்கர், 19, நல்லூர் குறுக்குத்தெரு, நல்லூர், யாழ்ப்பாணம். (3712)

## வீடு தேவை

அரச சேவையினின்றும், இளைப்பாறிய ஒரு பிள்ளை மாத்திரம் கொண்ட ஒரு குடும்பஸ்தருக்கு தங்குவதற்கு யாழ். மாநகரசபை எல்லைக்குள் ஒரு தனி வீடு அல்லது பகுதி வீடுதேவை. தொடர்பு S. கந்தையா. 66/10, இந்து மகளிர் கல்லூரி ஒழுங்கை, கந்தர்மடம், யாழ்ப்பாணம். (3456)

## மணமகன் தேவை

யாழ் நகர் கல்லூரியில் ஆசிரியையாக பணிபுரியும் 28 வயதான யாழ் இந்து வேளாள குடும்பத்தைச் சேர்ந்த ஆசிரியைக்கு அரசாங்க உத்தியோக மணமகன் தேவை. 129, மே/பா, உதயன். [13256]

## திருமணஅழைப்பு கார்ட்டுகள்

புதிய அச்சடிக்கும் திருமணக்காட்டுகள் சகலடிசைன்களிலும் விற்பனையாகிறது. உங்கள் எண்ணம் போல் தெரிவு செய்ய, ஸ்ரீகாந்த்- புத்தகசாலை மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், யாழ்ப்பாணம். (C/5033)

## TYPEWRITERS

Typewriters வாங்கவும், விற்கவும், சிறந்த முறையில் திருத்திக்கொள்ளவும். நாடுங்கள் FUDO39/17. மின்சார நிலைய வீதி. 3 ஆம் ஒழுங்கை யாழ்ப்பாணம். (Shabra-Samy & Co அருகாமையில். (C4362)

## ரைப்பிங் சேவை

தமிழ், ஆங்கிலம், ரைப்பிங் மற்றும் Stencils cutting குறைந்த செலவில் ரைப்பிங் செய்து கொடுக்கப்படும். நாடுங்கள்: FUDO 39 / 17, மின்சார நிலைய வீதி. 3 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (C / 4361)

## A/L மாணவர்களே!

ஏப்ரல் மாத பொருளியல் நோக்கு (அரசியல் மற்றும் பொருளாதாரம்) வர்த்தக உலகம் சஞ்சிகைகள் விற்பனையாகிறது. ஸ்ரீகாந் புத்தகசாலை, மின்சார நிலைய வீதி, பஸ் நிலைய முன்புறம், No - 165, யாழ்ப்பாணம். (சி/4587)

## தொழில் கல்வி

Radio Officers (Ship) P.M G. Telex Operators (International) இருபாலாரும் Airconditioning And Refrigeration, Electronics. (City & Gulds) London வெளிநாடுகளில் பிரபல்யமானவை. சான்றிதழ் வழங்கப்படும். ஆரம்பம் 2-6-90 Nesta Technical Institute 59, Station Road, Jaffna. (13098)

## கல்வி

இளைப்பாறிய அரசாங்க உத்தியோகத்தரினால் நடத்தப்படும் ஆங்கில வகுப்புகள் மாணவ மாணவிகள் ஏற்கனவே கொண்டுள்ள அறிவின் அடிப்படையில் வெவ்வேறு வகுப்புகளாக பிரித்து நடத்தப்படும். விபரங்களுக்கு Sr ஜெயராஜா கல்யாணி ஆங்கில கல்வி நிலையம், 204, மானிப்பாய் றோட், ஒட்டுமடம், யாழ்ப்பாணம். (3270)

## தொழில் நுட்ப பயிற்சி வகுப்புகள்

றேடியோ, T.V Deck, எலக்றோனிக் மணிக்கூடு இருபாலாருக்கும் வயறிங். பிறிச் குளிரியல், A/C றிவைண்டிங், பிளம்பிங், வெல்டிங் ஆகிய புதிய வகுப்புக்கள் ஆரம்பம்– 05- 06- 90 முன்னிட்டு பதிவு செய்யவும் தொடர்பு:- Nesta Technical Institute, Station Road, Jaffna. (3710)

## வெளிவந்து விட்டது!

விரைவாக கணிப்பது எப்படி? How to Calculate Quickly; By Nagaratnam, B. Sc. (Cey) நாட்டின் சகல பிரபல புத்தகசாலைகளிலும் பெற்றுக் கொள்ளலாம். குறிப்பு: பாலர் முதல் பட்டதாரிகள் வரை அனைவருக்கும் பயன் தரும் அற்புதப் படைப்பு, எந்தத்துறையில் ஈடுபட்டுள்ளவருக்கும் இலகுவாக கணிப்பீடு செய்ய உதவும் நூல். (சி/4338)

## தவறி விட்டது

நடராசா குகுணதாசன் ஆகிய எனது அடையாள அட்டை (670081710 V) அளவெட்டிக்கும் சுன்னாகத்திற்கும் இடையில் தவறி விட்டது. கண்டெடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்திலோ அல்லது திருமகள் அச்சகம் சுன்னாகம் என்ற விலாசத்தில் ஒப்படைக்குமாறு கேட்டுக் கொள்கின்றேன். (13276)

S. விகனேஸ்வரன் ஆகிய எனது அடையாள அட்டையும் (510092007) சீமெந்து கூட்டுத்தாபன அடையாள அட்டையும் கொல்லங்கலட்டியில் தவறி விட்டது. எடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கும்படி தயவாக கேட்டுக் கொள்கின்றேன். (3709)

## EFFECTIVE ENGLISH WITH GRAMMAR

அனைவருக்கும் எளிதாக விளங்கக் கூடிய முறையில் ஆங்கில இலக்கணத்துடன் கூடிய **Effective English with Grammar** - 6 மாத கால பயிற்சி **G.C.E O/L** மாணவர் நலன் கருதி தபால் மூலம் நடத்தப்படுகிறது.

எமது பயிற்சியினை திறம்பட செய்யும் மாணவர்கள் **British Council** உடன் இணைந்து **University of Cambridge** நடத்தும் **First in English Certificate (London) or Proficiency in English Certificate (London)** எனும் பரீட்சைக்கு தயாரிக்கும் பயிற்சிகளையும் உள்ளடக்கிய தமிழ் விளக்கங்களுடன் கூடிய பாடத்திட்டமாகும்.

**G. C. E. (O/L)** மாணவர்கள் திறமை சித்தி பெற இப்பாடத்திட்டம் மிக மிக உறுதுணையானதாகும். ஆறுமாத கால மொத்தக் கட்டணம் ரூபா 450/- ஆகும்.

மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன், இடதுபக்க மூலையில் **Effective English** என எழுதி தொடர்பு கொள்க.

*Bright Training Centre*

**P. O. Box 162, Colombo.**

[சி-4576]

## 9 ஆவது ஆண்டு நினைவஞ்சலி



### திரு. கந்தையா கனகசுந்தரம்

பூவுலகில: 17 - 02 - 1932 பொன்னுலகில்; 04 - 06 - 1981

எங்கள் அன்புத் தெய்வமே! நீங்கள் எங்களை விட்டுப்பிரிந்து ஒன்பது ஆண்டுகள் மறைந்தாலும் நீங்கள் இல்லாத வெற்றிடத்தை நிரப்ப இயலாமல் எம் இதயங்கள் ஏங்குகின்றனவே, எமக்கு நல்லவழி காட்டிய குல விளக்கே. உங்கள் புன்சிரிப்பு என்றுமே எம் உள்ளத்தில் நிலைத்து விட்டதே.

இந்நினைவு நாளில் உங்கள் ஆத்ம சாந்திக்காக இறைவனை வேண்டுகின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள், சகோதரிகள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
நண்பர்கள்.

மீசாலை வடக்கு,
மீசாலை. (3627)

## 1ம் ஆண்டு நினைவஞ்சலி



### வீரவாகு பரமேஸ்வரன் முரளீதரன்

அண்ணலின் அளிப்பு: 22 – 03 – 1971 அன்னியன் அழிப்பு: 05 – 06 – 1989

திதி: 26 - 05 - 1990

ஆறாத துயரினிலே ஆறு இரண்டு திங்கள் சென்றதுவே
மாறாத நினைவுடனே மனதில் நிறுத்திவாழுகின்றோம்
நாளென்ன பொழுதென்ன வாழ்நாளெல்லாம்
உன் நினைவே
நாயகனை வேண்டுகின்றோம் நின் ஆன்மா சாந்திக்காக

அப்பா, அம்மா, சகோதரிகள், சகோதரன்,
அம்மம்மா, அப்பம்மா, மாமன்மார், மாமிமார்,
பெரியம்மாமார், சித்தப்பாமார், சித்திமார்,
உறவினர், நண்பர்கள்.

மானிப்பாய் மேற்கு,
மானிப்பாய். (3644)

## ஆண் உதவித் தாதியர் பயிற்சி நெறி

**Training for Nurses Aide (Male)**

ஆண்களுக்கான உதவித் தாதியர் பயிற்சி நெறி 10 - 06 - 1990 இல் ஆரம்பமாகவுள்ளன.

பதிவுகட்கு:
Dr. V. P. சுந்தரராஜன்

**சாயி மெடிக்கல் அக்கடமி**

NO- 10, பருத்தித்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

(சி/4590)

## 1 ஆம் வருட நினைவஞ்சலி



### திரு. S. சிவபாலன்

உதிர்வு:- 1947–08-07 மறைவு:- 1989–05–26

திதி:-1990-06-05

எங்கள் நெஞ்சத்தில் என்றென்றும் அணையாத சுடராக ஒளி வீசும் உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும்

அன்பு மனைவி, மகன்,
மகள்மார், உறவினர்கள்,
(திருகோணமலை, பருத்தித்துறை)

இல:- 5, லவந்தர் வீதி,
திருகோணமலை. (3623)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



செல்வன்

### திருநடராசா கிருபாகரன்

ஆண்டவனின் படைப்பு 1966– 2- 10 அரக்கனின் அழிப்பு 1989– 06 - 06

திதி:- 1990– 05– 26

அன்புச் செல்வமே அருமை மகனே கிரி
ஆண்டொன்று முடிந்ததையா
அழுது மனம் ஆறவில்லை
மின்னல் போல் 'மறைந்தாய் ஐயா
ஏங்கி மனம் தவிக்கின்றோம்
ஆறாத்துயரை ஆற்ற முடியவில்லை
எங்கள் அன்புக் கிரியே
எங்கள் இதயத்தை உன்
நீங்காத நினைவுகள் மறையாது செல்வம்
உன் ஆத்மா சாந்தியடைய
உணர்ச்சி இன்றி பிரார்த்திக்கின்றோம்

உன் பிரிவால் துயருறும்;
தந்தை, தாய், அத்தான், அக்கா,
மருமக்கள், உன் அன்புக்கினியவர்கள்
நண்பர்கள்

பத்திரகாளி கோயில் வீதி,
பருத்தித்துறை. (3628]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவனை வழிபடுவதே விரதத்தின் நோக்கமாகும்

## சிவத்தமிழ்ச் செல்வி உரை

காங்கேசன்துறை, மே. 26

நாம் விரதம் அனுஷ்டிப்பது உணவைக்குறைத்து உடலைப் பாதுகாத்து இறைவனை மனதார நினைத்து வழிபடுவதற்கு ஆகும்

சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி இவ்வாறு கூறினார்.

மாதகல் நுனசைமுருகமூர்த்தி தேவஸ்தானத்தில் நடைபெற்ற வித்துவான் கந்தசாமியின் கோயில் அமைப்பும் கிரியையும் வழிபாடும் என்னும் நூல் வெளியீட்டு விழாவில் நூலை வெளியிட்டுப் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தேவஸ்தான முகாமையாளர் திரு. க. பாலசுப்பிரமணியத்துக்கு முதல்பிரதியை வழங்கி அவர் மேலும் பேசுகையில் இன்றைய காலகட்டத்தில் பெரிய நூல்களைப் படிக்கக் கூடிய மனோநிலை எமக்கில்லை நூல்கள் சிறியதாக கருத்து செறிவாக அமைய வேண்டும். அப்போதுதான் அந்த நூல்களால் பயன் பெற முடியும். இதே வகையில் இந்த நூல் வெளிவந்துள்ளது, 'என்றார்

சிவஸ்ரீ நாராயணசர்மா ஆசி கூறினார். (க-68)

# நிரந்தர அமைதிக்காக இறுதிவரை போராடுவோம்

## தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் உரை

கைதடி. மே 26

''எமது நோக்கம் சிந்தனை அமைதியும் சமாதானமும் ஆகும். ஆனால் தற்போதைய அமைதி நிரந்தரமானதல்ல நிரந்தர அமைதிக்காக எந்த இலட்சியத்திற்காக போரை முன்னெடுத்தோமோ அந்த இலட்சியத்திற்காக, எமது தலைவரின் பாதையில் இறுதி மூச்சுவரை போராடுவோம்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா இயக்கச்சி அ. த. க. பாடசாலையில் ''ஒரு கிளி புலியாகிறது'' எனும் நாடகத்தின் 19 ஆவது அரங்கேற்றத்தின் போது மேற்கண்டவாறு கூறினார்.

பனைப் பொறுப்பாளர் திரு. செல்வராசா பேசுகையில் கடந்தகால நிகழ்வுகளைப் பிரதிபலிக்கும் வகையிலும், தமிழனின் தன்மான உணர்வுகளை வளர்க்கும் வகையிலும், போராட்டத் தெளிவை ஏற்படுதும் வகையிலும் எமது கலை கலாசாரம் அமைய வேண்டும்'' என்று குறிப்பிட்டார்.

தென்மராட்சி பொறுப்பாளர் திரு. தினேஸின் தகப்பனார் பொன் தில்லைனாயகமும் இக்கூட்டத்தில் உரை நிகழ்த்தினர். (க)

### தற்போது நிலவுவது

# புயலுக்கு முந்திய அமைதி

## கோப்பாய் பொறுப்பாளர் கூறுகிறார்

கோப்பாய், மே 26

தற்போது நிலவும் அமைதி புயலுக்கு முந்திய அமைதி ஆகும் நாம் எந்தவொரு சூழ்நிலையையும் எதிர் நோக்க தயாராக இருக்க வேண்டும்.

கோப்பாய்பகுதிவிடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் பாலன் கோப்பாய் அரசினர் வைத்தியசாலையின் அபிவிருத்தி சபையின் அங்குரார்ப்பண கூட்டத்தில் உரையாற்றும் போது மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் பேசியதாவது.

வைத்தியசாலை நலனில் கிராம மக்கள் அக்கறை காட்ட வேண்டும் இச்சபை இந்த விடயத்தில் மிகுந்த அவதானத்துடன் தொழிற்பட வேண்டும். 1987 ஆம் ஆண்டு போராட்ட காலபகுதியில் இவ்வைத்தியசாலை ஆற்றிய பங்களிப்பை நான் அறிவேன் இவ் வைத்தியசாலைக்கு எங்களால் இயன்ற பங்களிப்பை செய்வோம்.

1987 ஆம் ஆண்டுக்கு முன்பிருந்த நிலைக்கு இதனைக் கொண்டு வர வேண்டும்.

இப்படி அவர் கூறினார். (இ-72)

### உடுவில் மகளிர் கல்லூரி

# ஆங்கிலப் பேச்சுப் போட்டியில் சித்தி அடைந்தோர் விவரம்

மானிப்பாய் மே 26

உடுவில் மகளிர் கல்லூரித் தொடர் கல்வி நிறுவனத்தின் ஆங்கில பேச்சுப் போட்டியில் சித்தியடைந்தோர் விவரம் வருமாறு :-

**தொடக்க நிலை அதி விசேட சித்தி**

கு. விதரணி. ந. நர்மதா, இ. நிரோஷா, சி. கயல்விழி அ. அபரினா, சி. சைலந்தி, ச. மதுசூதன், ஜெ. நிசா, பா. சுஜனி, நி நிஷாந்தினி, சி மலர்விழி, செ. ஜீவப்பிரதாப், அ. அனுபபூலன், க. சினோபனா, நி. மயூரன், க. மதிலா, ச. அனுலா, வ. ஜனனி, ந. செசநீசன்,

**விசேட சித்தி**

கு. சுரநயனி, வ. கோகுலன், வ. விபிசாளினி, க. சஜரூபன், க. சுலக்சனா, ஜெ. நரேஷ், ந. மதிசூதனன், பு. சிவாகினி, த. சிறிபிரியா, த. கலாபன், சி. அனிதா, ச. சுஜனாத், நா. ராஜி, இ. இரவீனா, நா. சுவர்ணா, மு. மயூராஜ், பி. நர்த்தனன், பா. காவேரி ப. சுஜேந்திரா, பா. பிரபா சினி. த. காயத்திரி, ம. பிரசாந்தினி,

**ஆரம்ப நிலை அதி விசேட சித்தி**

நா. பூங்குழலி, வி. பிரயலேனுகா,

**விசேட சித்தி**

அ. கிறிஸ்ரா, நிஷாந்தினி, ச. அனுசாஞ்சலி, சி மலர்விழி

**பிரிவு I அதி விசேட சித்தி**

த. சேரலாதன், ச. துர்க்கா, நா. யசோதா, ப. கார்த்திகாயினி

**விசேட சித்தி**

ப. கஸ்தூரி, கா. பிரசாந்தினி

எண்பது மாணவிகள் கலந்து கொண்ட தொடக்க நிலை பேச்சு போட்டியில் 19 பேர் அதி திறமைச் சித்தியும், 22 பேர் விசேட சித்தியும், 15 பேர் சாதாரண சித்தியும், ஆரம்ப நிலைப் போட்டியில் தோற்றிய ஐந்து பேரில் இருவர் அதி விசேட சித்தியும், மூன்று பேர் விசேட சித்தியும் பெற்றனர் (க-90)

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணுலகில் 12 - 2 - 1904

விண்ணுலகில் 6 - 6 - 1989

திதி 26 - 5 - 1990

**திருமதி. நல்லம்மா கந்தையா**

''ஆறாத துயரினிலே ஓராண்டு கழிந்ததுவே
மாறாத நினைவுடனே மண்தனிலே வாழ்கின்றோம்''

எங்கள் குடும்பத்தின் ஒளி விளக்காய்த் திகழ்ந்த அன்புத் தெய்வத்தின் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

மாக்கற் லேன், மானிப்பாய்.

சகோதரர், மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

[3634]

# தியாகங்களை நினைவு கூருவது பிறந்த மண்ணுக்கு செய்யும் நன்றி

## நினைவுச் சின்ன திறப்பு விழாவில் உரை

கொடிகாமம் மே, 26

தாயக மீட்புக்காக உயிர்த்தியாகம் செய்த வேங்கைகளை நாம் என்றும் நினைவு கூற வேண்டும். இது தான் பிறந்த மண்ணுக்கு நாம் செய்யும் நன்றிக் கடனாகும்.

களப்பலியான லெப்டினன்ட் ரஞ்சித், நிதி, அலெக்ஸ், நிமல், அப்துல்லா ஆகிய வீர வேங்கைகளின் நினைவுச் சின்னத்திறப்பு விழாவில் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் பாப்பா இவ்வாறு கூறினார்.

வீரமரணமடைந்த பேராளிகளின் பெற்றோர்கள் இச்சின்னங்களைத் திறந்து வைத்தனர்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. பொ. கந்தையனார் தலைமையில் நடந்த இவ் வைபவத்தில் உரை நிகழ்த்திய பாப்பா மக்கள் எமக்குத் தரும் பேராதரவே எமக்குச் சிறந்த பாலமாகும் என மேலும் சொன்னார்.

தென்மராட்சி கிழக்கு பொறுப்பாளர் இராகுலன், தென்மராட்சி மாணவர் இயக்கப் பொறுப்பாளர் ரஞ்சன், திரு. வி. இராசநாயகம், திருமதி து. யோகராணி, கவிஞர் க. நாகேஸ்வரன் ஆகியோரும் உரையாற்றினர். (ப-75)

# மட்டக்களப்பில் காலைக்காட்சி இல்லை

மட்டக்களப்பு, மே 26

மட்டக்களப்பு மாவட்டப் படமாளிகைகளிலும் காலை 10.30 காட்சி இனிமேல் காண்பிக்கப்படமாட்டாது.

காலைக் காட்சிகளுக்கு பாடசாலை மாணவர்கள் அதிகமாக வருகை தருவதால் இதை தவிர்த்துக் கொள்ளுமாறு தமிழீழ விடுதலைப் புலிகள் படமாளிகை உரிமையாளரை கேட்டிருந்தனர். (இ-ரி)

# யாழ் நகரத்தின் நிலைமை எமக்கு கவலை தருகின்றது

## அமெரிக்க தூதரக அதிகாரி உரை

யாழ்ப்பாணம். மே 26

யாழ்நகரில் எரிந்த சேதமடைந்த பகுதிகளைப் பார்வையிட்டோம். எரிந்த நூலகம், மாநகரசபைக் கட்டடம் என்பன எம்மை மிகவும் கவலைக்குள்ளாக்கின. இவைகள் தொடர்பாக உரியவர்களிடம் பிரஸ்தாபிப்போம். நிவாரண புனரமைப்பு உதவிகளை வழங்குவோம்.

அமெரிக்கத் தூதரக முதல் அரசியல் செயலாளர் மேல்நொட் மேற்கண்டவாறு கூறினார்.

அமெரிக்க தூதரக அதிகாரிகளான மேல்நொட், செல்வி லுவ்திக், திரு. நோவ் ஆகியோருக்கு, யாழ் ஞானம்ஸ் ஹோட்டலில் இராப்போசன விருந்து ஒன்று வழங்கப்பட்டது.

யாழ். மாநகரசபை இந்த இராப்போசனத்தை ஏற்பாடு செய்திருந்தது.

அந்த வைபவத்தில் உரையாற்றும்போதே ஹோட் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்

வைபவத்தில் யாழ் மாநகர ஆணையாளர் வே. பொ. பாலசிங்கம் வடக்கு-கிழக்கு மாகண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. சடாச்சர சண்முகதாஸ் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

யாழ். மாநகர பகுதிகள் தேவைகள் பற்றியும் உதவித் திட்டங்கள் பற்றியும் பிரஸ்தாபிக்கப்பட்டது. (இ-9)

# வருடாந்த பொதுக்கூட்டம்

கொழும்புத்துறை, மே 26

வேலணை உதவி அரசாங்க அதிபர் பிரிவு சனசமூக நிலையங்களின் சமாச வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு வேலணை சரஸ்வதி வித்தியாலய மண்டபத்தில் வைத்திய கலாநிதி இ. சற்குருநாதன் தலைமையில் நடைபெறும். (இ-30)

# புலிகளுக்கு கலைஞர் ஆதரவு; தமிழகம் பஞ்சாப் ஆகும்!

## கம்யூனிஸ்ட் செயலர் எச்சரிக்கை

சென்னை. மே 25

தி.மு. கவும் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கமும் இணைந்து செயற்படுவது தேசத்திற்கு ஆபத்தானது.

இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சிப் பொதுச் செயலாளர் மொஹித் சென் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் முன்கண்டவாறுசொன்னார்.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கு பகிரங்கமாக கருணாநிதி ஆதரவளிக்கிறார். இதன்மூலம் தமிழ் நாட்டில் பஞ்சாப் மாதிரி நிலையை உருவாக்க கருணாநிதி முயற்சிக்கிறார்.

பிரிவினையை நோக்கிய ஒரு நடவடிக்கை இது.

இப்படி திரு. மொஹித் சென் சொன்னார். [உ-எ]

# விக்கிரமராஜசிங்கனுக்கு வேலூரில் முத்து மண்டபம்

சென்னை, மே 25

இலங்கையை ஆண்ட கடைசி மன்னன் விக்கிரமராஜசிங்கனுக்கு வேலூர் பாலாற்றங்கரையில் முத்து மண்டபம் அமைக்கப்பட்டு வருகிறது.

அதனை எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதலமைச்சர் கருணாநிதி திறந்து வைக்கிறார்

இந்தியப் பணத்தில் 21 லட்சம் ரூபா செலவில் இம்முத்து மண்டபம் கட்டப்பட்டு வருகிறது.

மன்னர் சமாதி, முத்துச்சிப்பிக்குள் இருக்கின்ற மாதிரி கட்டட அமைப்புடன் முத்து மண்டபம் எழுப்பப்படுகிறது.

சமாதி பழங்காலத்தைச் சேர்ந்ததாக இருப்பதால் பழமை கெடாமல் இது அமைக்கப்படுகிறது.

அருகில் பூங்கா, அருங்காட்சியகம் ஆகியனவும் அமைக்கப்படுகின்றன.

அருங்காட்சியகத்தில் விக்கிரமராஜசிங்கன் பயன்படுத்திய பொருட்கள் பொதுமக்கள் பார்வைக்கு வைக்கப்படும். [உ-எ]

# பகவான் சாயிபாபா உலகுக்களித்த மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டம்

இன்று விஞ்ஞானம் விண்ணைத் தொட்டு நிற்கின்றது. மனிதனின் நாளாந்த தேவைகள் எல்லாவற்றிலுமே அவனது வேலைப்பழுவைக் குறைக்க விஞ்ஞானம் பல துறைகளிலும் செல்வாக்கை செலுத்தி நிற்கின்றது. கல்வியின் தரமும் உயர்ந்து விட்டதாக கூறப்படுகின்றது. பல்கலைக்கழகங்கள், பாடசாலைக் கட்டடங்கள் விஞ்ஞான ஆய்வு கூடங்கள் எல்லாம் அதிகரித்து விட்டன.

மாணவர்களோ அதிகாலை தொடக்கம்இரவுவரை படிப்பு படிப்பு எனப் பாடசாலைக்கு வெளியே தனிப்பட்ட நிறுவனங்கள் எல்லாவற்றின் படிபடியாக ஏறிஇறங்குகிறார்கள் எனவே கல்வியின் முக்கியத்துவம் எல்லோராலும் இன்று உணரப்பட்டு விட்டது என்பது வெளிப்படை.

ஆனால் இன்றைய கல்வியின் நிலை என்ன? இவைகள் எல்லாம், தனியே உத்தியோகம் பெறுவதற்காக, வருமானத்தை பெருக்குவதற்காக, ஊட்டப்படும், கல்வியாக மட்டுமே உள்ளன. தனியே மூளைக்கு தகவல்களை, ஒன்றுக்கு மேல் ஒன்றாக திணிக்கும் கல்வியாகவே அமைகின்றன.

வாழ்க்கைக்கு வேண்டிய வருமானத்தைப் பெறுவதற்காக மட்டுமே கல்வி போதிக்கப்படுகிறது.

மனிதனின் மற்றொரு அம்சமான இதயத்திற்கு இன்றைய கல்வி [illegible] முக்கியத்துவம் வழங்கவில்லை அது முற்றாக [illegible]கப்படுகின்றது. எனவே தான் இன்று பாரிய கல்வி கற்றவர் கூட பெரும்வருமானத்தைப் பெறுபவர்கள் கூட வாழ்க்கையை, நிம்மதியாக செம்மையாக அமைத்துக் கொள்ள வேண்டியளவிற்கு தம் உணர்வுகளை ஒழுங்குபடுத்த, கட்டுப்படுத்த முடியாமல் மனநிம்மதி இழந்து தவிக்கிறார்கள்.

> இன்று 26 ஆம் திகதியும் நாளை 27 ஆம் திகதியும் திருகோணமலை ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் மனித மேம்பாட்டுக் கல்விப் பயிற்சி முகாம் ஒன்று நடைபெறுகின்றது. அதனை ஒட்டி இக்கட்டுரை விசேடமாக வெளியிடப்படுகின்றது.

இதற்குக் காரணம் இன்றைய கல்விமுறை, இதயத்தின் பச்சம் பார்க்காமலே அதை பூரணமாகப் புறக்கணித்தது தான் எனலாம்.

கல்வியின் இறுதிப் பெறுபேறு அவனது குணவியலே. ஒரு மனிதனின் குணவியலைத் தீர்மானிப்பதில் கல்வி முழுமையான பங்கைச் செலுத்துகிறது.

வாழ்க்கையின் வெற்றி அவனது மன அமைதியிலேயே தங்கியுள்ளது. வாழ்க்கையில் என்ன இருந்தும் மன அமைதி இல்லையேல் அவனது வாழ்க்கை தோல்வியேயாகும் இதற்குக் காரணம் சமநிலையற்ற இன்றைய கல்வி முறையேயாகும்.

மனித மேம்பாட்டுக் கல்வித் திட்டம் இச் சமநிலையற்ற தன்மையைச் சமப்படுத்த முயல்கின்றது. மாணவர்கள் [illegible] ஆளுமையின் [illegible] அம்சங்களையும் [illegible] சமமாக வளர்த்தெடுக்க முனைகின்றது. இதயத்தின் பண்படுத்தலுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவனது ஆளுமையை உருவாக்கும் குணவியலை நிர்ணயிப்பதில் அதிக அக்கறை செலுத்துகின்றது.

மனிதசமுதாயத்தை உய்விக்க பகவான் ஸ்ரீ சத்யசாயிபாபா இக்கல்வித்திட்டத்தை உலகுக்களித்தார்.

இன்று இந்தியாவில் மட்டுமன்றி அவுஸ்ரேலியா, தாய்லாந்து அமெரிக்கா, பிரான்சு கனடா முதலிய சுமார் 64 நாடுகளில் இக்கல்வித்திட்டம் மிக அக்கறையுடன் கற்பிக்கப்பட்டு வருகின்றது.

இன்றைய மனித சமுதாயத்தை அழிவிலிருந்து இக் கல்வித் திட்டம்மூலமே காப்பாற்றலாம் என உணர்ந்த பல்கலைக்கழகப் பேராசிரியர்கள் பலர் இக்கல்வித்திட்டம் பற்றிய நுணுக்கமான கருத்தரங்குகளை உலகின் பல பாகங்களிலும் சமீபகாலமாக ஒழுங்கு செய்து வருகின்றார்கள். லண்டனிலும், அவுஸ்ரேலியாவிலும் சமீபத்தில் இக் கல்வித்திட்டம் பற்றிய கருத்தரங்குகள் நடைபெற்றன. மேல் நாட்டார் இக் கல்வித் திட்டத்தின் முக்கியத்துவத்தையும் தேவையையும் உணர்ந்தளவு எமது நாடுகளில் இதுவரை பெரியளவில் உணரப்படவில்லை என்றே கூறவேண்டும்.

எனவே எமது நாட்டிலும் கலியுக அவதாரம் பகவான் ஸ்ரீ சத்ய சாயிபாபாவின் அருளால் பெறப்பட்ட இம் மனித மேம்பாட்டுக்கல்வித் திட்டத்தை பயன்படுத்த [illegible] முன்வரவேண்டும். ★

நா. புவனேந்திரன்
(திருகோணமலை)

# சுற்றறிக்கை வந்தும் பட்டதாரிச் சம்பளம் இல்லை

## கல்விச் செயலாளரிடம் புகார்

மட்டக்களப்பு மே 26

சேவையில் சேருமுன்பு பட்டதாரிப்பட்டம் பெற்ற ஆசிரியர்களுக்கு பட்டதாரிச் சம்பளம் வழங்கப்பட வேண்டும் என்ற கல்வி அமைச்சின் சுற்றறிக்கை மட்டக்களப்பு கல்வித் திணைக்களத்தில் அமுல் செய்யப்படுவதில்லை.

மேற்கண்டவாறு சேவையில் சேருமுன் பட்டம் பெற்ற ஆசிரியர் சங்கச் செயலாளர் ஜனாப். எம். எல். எ. கரீம், வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளரிடம் புகார் செய்துள்ளார். [உ-ரி]

# புனரமைப்பு நிதி இனி அரச அதிபர் ஊடாக

வடக்கு-கிழக்கு மாகாணங்களில் உள்ள அரச திணைக்களங்கள் கூட்டுத்தாபனங்களுக்கான புனரமைப்புநிதி அரசாங்க அதிபர்கள் ஊடாகவே இனி வழங்கப்படும்.

இதுவரை வடக்கு - கிழக்கு மாகாணசபை மூலமே நிதி வழங்கப்பட்டு வந்தது.

அரச அதிபர்கள் மூலம் நிதி வழங்கும் நடைமுறை எதிர் வரும் முதலாம் திகதிதொடக்கம் அமுலுக்கு வருகிறது.

நேற்று நடைபெற்ற மாவட்ட புனரமைப்பு குழுக் கூட்டத்தில் இதுபற்றி அறிவிக்கப்பட்டது.

நேற்று யாழ். செயலகத்தில் இந்தக் கூட்டம் நடைபெற்றது. யாழ். அரச அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் கூட்டத்துக்குத் தலைமை வகித்தார் ஈழவர் ஜனநாயக முன்னணி எம். பி. திரு. பரராஜசிங்கம் மற்றும் யாழ். மாவட்டத்தின் திணைக்களங்கள் கூட்டுதாபனங்கள் அனைத்தினதும் உயரதிகாரிகள்கூட்டத்தில்கலந்து கொண்டனர்.

பின்வரும் விடயங்கள் பற்றி கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

★ யாழ். வானிலை அவதானநிலையத்தின் கட்டடத்தில் பொதுமக்கள் சிலர் குடியேறி உள்ளனர் அவர்களை வெளியேற்றுவது.

★ வானிலை அவதான நிலையத்தை மீண்டும் இயங்கச் செய்ய தேவையான உபகரணங்களை பெற்றுக் கொள்வது.

★ யாழ். மாவட்ட நீதி மன்றங்களை புனரமைப்பதற்கான வரைபடங்கள்தயாரித்து அனுப்பப்படும் நடவடிக்கை எதுவும் இதுவரை எடுக்கப்படாதது

★ பருத்தித்துறை - மருதங்கேணி, மூளாய்- பருத்தித்துறை வீதிகளை தேவையான கல், மண் என்பன வழங்கப்படுமிடத்து 2 மாதத்தில் திருத்தி அமைத்தல்.

★ வ. பி. போக்குவரத்து சபைக்கு வழங்கப்பட இருந்த இரட்டைத்தட்டு பஸ்களுக்குப் பதிலாக ஒற்றைத்தட்டு பஸ்கள் வழங்கக் கோருதல்.

★ யாழ். போக்குவரத்து சபையின் பஸ் உதிரிப் பாகங்களுக்கு 9 லட்சம் ரூபாவை பெற்றுக் கொடுத்தல்.

★ யாழ். பிரதம தபால் நிலையத்தின் மீளமைப்புக்கென 58 லட்சம் ரூபாவை கோருதல். [இ-9]

# பதவி உயர்வு

திரு. க. பேரம்பலம் இம் மாதம் 15 ஆம் திகதி முதல் புங்குடுதீவு கொத்தணிப்பாடசாலைகளின் அதிபராக பதவி உயர்வு பெற்றுள்ளார்.

நெடுந்தீவைப் பிறப்பிடமாகக் கொண்ட திரு. பேரம்பலம் 1969 இல் கொக்குவில் இந்துக்கல்லூரியில் வர்த்தகப் பட்டதாரி ஆசிரியராகஆசிரியப் பணியை ஆரம்பித்தார்.

1988 ஆம் ஆண்டில் இணுவில் சைவ மகாஜன மகா வித்தியாலயத்தில் பெண்கள் சாரணிய பிரிவை முதல் தடவையாக உருவாக்கிய பெருமை இவரையே சாரும்.


# STRUCTURED BASIC COMPUTER PROGRAMMING

கொம்பியூட்டர் கலையை பயிலும் மாணவர்கள் தகுந்த கைநூல்கள் தமிழில் இல்லையே? என்ற கவலையை மாற்றும் நோக்குடனும், கொம்பியூட்டர் என்றால் என்ன? எவ்வாறான தொழில்பாடுகளை மேற்கொள்கிறது. எந்தெந்த வகையில் மனிதனுக்கு உதவி அளிக்கின்றது என்பவற்றுடன்.........

BASIC மொழியின் பூரண விளக்கங்களும் பயிற்சித் திட்டங்களும் அடங்கியதான தமிழ் மூலம் பயிற்சித் திட்டம். நீங்கள் எங்கு கொம்பியூட்டர் கல்வியை பயின்றாலும் எமது பாடத்திட்டம் உங்களுக்கு பயிற்சிக்கான முழு விளக்கங்களையும் தமிழில் தருவதால் நீங்கள் எளிதில் விளங்கிக்கொள்ளும் வல்லமை அளிக்கின்றது.

எமது பாடத்திட்டத்திற்கான காலம் மூன்று மாதமேயாகும். மூன்று மாதங்கட்கும் தபால் மூலம் போதனைகள் வழங்கப்படும். இதற்கான கட்டணம் ரூபா 150/- மாத்திரமேயாகும்.

மேலதிக விபரங்கட்கு தொடர்பு:-

S. B. C. P.

**Bright Training Centre**

P. O. Box 162, Colombo.

[சி-4570]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரு பிரதேச ஆத்மீக - கலாசார இணைப்பே இரட்டை மணிகள்

## மட்டுநகர் விழாவில் பேச்சு

மட்டக்களப்பு, மே 26

பண்டிதமணி, புலவர்மணி இவர்கள் இருவரும் இரு பிரதேசங்களின் ஆத்மீகம், கல்வி, கலாசாரம் என்ற துறைகள் ரீதியாக ஒன்றிணைந்தவர்கள். இவர்களது இணைப்பு, பிணைப்பு இதய பூர்வமானது!

மேற்கண்டவாறு மட்டக்களப்பு மாவட்ட கல்விப் பணிப்பாளர் திரு. கு. சோமசுந்தரம் கடந்த ஞாயிற்றுக்கிழமை மட்டக்களப்பு மாநகர மண்டபத்தில் புலவர்மணியின் 'விபுலானந்தர்மீட்சிப்பத்து' நூல் வெளியீடு; பண்டிதமணியின் 'பண்டிதமணியின் நினைவு மலர்', 'செந்தமிழ்க் களஞ்சியம்' நூல் அறிமுக விழா ஆகியவற்றில் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றுகையில் கூறினார்.

புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுப்பணி மன்றம் ஏற்பாடு செய்த இவ்விழாவுக்கு மகாவித்துவான் எப். எக்ஸ். சி. நடராசா தலைமை வகித்தார்.

திரு. சோமசுந்தரம்மேலும் பேசுகையில் 'அரசியல் விடுதலை பெறமுன்பு கலை, கலாச்சார பண்பாட்டுதுறைகளில் விடுதலை பெறவேண்டுமென்ற கருத்தை இருவரும் கொண்டிருந்தார்கள். இவர்கள் இருவரும் தமிழ் இனத்தின் இருகண்மணிகள் — என்றார்.

'விபுலானந்தர் மீட்சிப்பத்து' என்ற தலைப்பில் உரையாற்றிய திரு. ஆ. அரசரெட்னம் தமது பேச்சில் குறிப்பிட்டதாவது;

1944 ஆம் ஆண்டு விபுலானந்தர் நெருப்புக் காய்ச்சல் நோய் காரணமாக அரசினர் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அந்நேரத்தில் இச்செய்திகேட்டு அவர்நலம் பெற வேண்டுமென்று புலவர்மணி பாடிய பாடல்தான் 'விபுலானந்தர்மீட்சிப்பத்து'. இந்நூல் புலவர்மணியின் புலமை உணர்ச்சியின் உருக்கப் பிழிவு. இம்மீட்சிப்பத்து தனித்தெடுத்து விமர்சன உலகு விமர்சிக்கற்பாலது — என்றார்.

திரு. இரா. நாகலிங்கம் 'புலவர்மணி நூல்கள்' எனும் பொருளில் பேசுகையில் கூறியதாவது;

நாவலரும், விபுலானந்தரும் இரட்டையர்களாகத் தமிழுக்கும், சைவத்திற்கும் பணியாற்றியவர்கள். அதேபோல புலவர்மணியும், பண்டிதமணியும் இரட்டையர்களாக தமிழுக்கும், சைவத்திற்கும் பணியாற்றினர்.

இவ்வாறு இன்னும் ஒரு இரட்டையர்கள் ஈழநாட்டில் உருவாகுவதன் மூலம்தான் இவ்விழா நிறைவு பெறும்— என்றார்.

வித்துவான் க. சொக்கலிங்கம் (சொக்கன்) செந்தமிழ் களஞ்சியம் என்ற பொருளில் பேசினார். அவர் கூறியதாவது;

பண்டிதமணியின் இலக்கிய வழியில் இருந்து அவர் இலக்கியத்தை எப்படிக் காண்கிறார், இலக்கியத்தை எப்படி நயக்கிறார் என்பதற்கு தக்க உதாரணங்களை நாம் காணலாம். அகத்திணை, புறத்திணை பற்றி புதிய சிந்தனையை அவர் முன்வைத்துள்ளார். எமது அடித்தளம் எமக்குப் பாரமாக இருக்கிறது என்று கருதுபவர்களிடம் இருந்து பண்டிதமணி மாறுபட்டவர் — என்றார்.

கலாநிதி இ. பாலசுந்தரம் 'பண்டிதமணியின் நூல்கள்' எனும் தலைப்பில் பேசுகையில்—

1959 இல் இருந்து 1986ஆம் ஆண்டுவரை இவர் தமிழுக்கும் சைவத்திற்கும் அரும் பணி ஆற்றியவர். புலவர்மணியை நாம் பாரத கலாச்சாரத்தைக்கொண்டு அணுக வேண்டும்; பண்டிதமணியை நாம் கந்தபுராண கலாச்சாரத்துடன் அணுக வேண்டும்.

சிறப்பான வசனநடை, இலக்கிய பாரம்பரியம், தத்துவம், ரசனை இம்மூன்று விடயங்களுக்கும் நியமமாக மக்களுக்கு விளங்கக்கூடிய இலகுநடையில் நூல்களை எமக்கு இவர் ஆக்கித்தந்துள்ளார் என்றார்.

கலாநிதி சி. மௌனகுரு 'பண்டிதமணி நினைவுமலர்' குறித்துப் பேசுகையில் கூறியதாவது;

பண்டிதமணி ஆறுமுகநாவலர் பரம்பரையின் சின்னம். ஈழத்தமிழ் இலக்கியத்தை வற்புறுத்தியவர். இன்று தனித்துவமான பாதைதான் அவருக்கு ஒரு நிலையான இடத்தை எடுத்துக் கொடுத்தது.

சிறந்த இலக்கியவாதி, தத்துவஞானி. சிந்தனைவாதி, ஆராய்ச்சியாளர், ஈழத்து இலக்கிய உலகில் மூன்று விழாமலர்கள் வெளியிடப்பட்ட அறிஞர் இவர்தான்— என்று குறிப்பிட்டார்.

வடக்கு கிழக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் திரு. இ. ஜே. சற்குணராஜா, மட்டக்களப்பு அரசு அதிபர் திரு ஆர். யோகநாதன் ஆகியோரும் இவ் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

ஆசிரியமணி திரு. அ. பஞ்சாட்சரம் பதிலுரை ஆற்றுகையில் இது போன்ற ஒரு விழா யாழ்ப்பாணத்திலும் நடத்தப்படவேண்டும் என்று தெரிவித்தார். [அ-ரி]

### யாழ்ப்பாணத்துடன்

# பிரிட்டனின் வரலாற்று ரீதியான உறவு வலுவடையும்

## பிரிட்டிஷ் தூதுவர் நம்பிக்கை

யாழ்ப்பாணம், மே 26

''உங்கள் நாட்டில் சகஜ நிலைமை மீண்டும் ஏற்பட்டுக்கொண்டிருக்கும் இவ் வேளையில் யாழ்ப்பாணத்துடனான பிரிட்டனின் வரலாற்று ரீதியான உறவுகள் வலுவடையும் என்று நான் திடமாக நம்புகிறேன். யாழ்ப்பாணத்துக்கு நல்லதோர் எதிர்காலம் இருக்கிறது. கல்வி மூலம் மேலும் சிறப்பான, மேலும் பூரணமான வாழ்வை நீங்கள் பெறமுடியும்''

கடந்த 24 ஆம் திகதி வியாழக்கிழமை மாலை யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரியில் நடைபெற்ற யாழ்ப்பாணம் ஆங்கில அகடமியின் லண்டன் ஆங்கிலப் பரீட்சைகளில் சித்தி எய்தியவர்களுக்குச் சான்றிதழ்களை வழங்கும் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பிரிட்டிஷ் தூதர் திரு டேவிட் கிளாட்ஸ்ரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் ஆங்கில அகடமியின் பணிப்பாளரான திருமதி ஈற்றா மேதர் அவர்கள் தலைமை வகித்த இந்த வைபவத்திற்கு கிளாஸ்ரன் தம்பதிகள் மேளவாத்தியம் சகிதம் சென். ஜோன்ஸ் அம்புலன்ஸ் உறுப்பினர்களின் அணி வகுப்பின் மத்தியில் அழைத்துச் செல்லப்பட்டார்கள். யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட்டும் பாரியாரும் இதில் கலந்து கொண்டார்கள்.

பிரிட்டிஷ் தூதர் மேலும் பேசுகையில், ''ஆங்கில மொழியின் போதனைக்கு உதவி அளிப்பது ஸ்ரீலங்காவில் பிரிட்டிஷ் அரசாங்கத்தின் முன்னுரிமையான விஷயங்களில் ஒன்றாகும். யாழ்ப்பாண ஆங்கில அகடமி இந்த முயற்சியில் மதிப்புள்ளதோர் பங்கை ஆற்றி வருகின்றது. அது மிகவும் பாராட்டத்தக்கது. இந்த அகடமியைத் திறம்பட நடத்தி வரும் திரு. நவரேந்திரனின் சேவை மெச்சத்தக்கது'' என்று கூறினார்.

அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் உரையாற்றுகையில், ஆங்கிலத்தை நாம் சித்தியடைவது தொழில் வாய்ப்புகளைப், பெறுவதற்காக மட்டும் அல்ல. ஆங்கில மொழியின் வளமான இலக்கியத்தைப் படித்து அனுபவிக்கவும் கற்றுக் கொள்ள வேண்டும்'' என்று கூறினார்.

துணைக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. க. குலசேகரம் ஆங்கிலக் கல்வியின் முக்கியம் பற்றி விளக்கமாக எடுத்துக் கூறினார்.

பிரிட்டிஷ் தூதரின் பாரியார் திருமதி ஏப்ரல் கிளாட்ஸ்ரன்சான்றிதழ்களை வழங்கினார்.

வரவேற்புரையை திரு. சாந்திகுமார் அரியரத்தினம் நிகழ்த்தினார்.

வைபவத்தில் வின்சன்ட் குழுவினரின் பரதநாட்டிய நிகழ்ச்சியும் வீணை இசையும் அகடமி மாணவர்கள் நடித்த சிறிய ஆங்கில நாடகம் ஒன்றும் இடம் பெற்றன. (க)

## இன்று மெய்வல்லுநர் விழா

யாழ்ப்பாணம், மே. 26

மயிலணி சைவமகாவித்தியாலய இல்ல மெய்வல்லுநர் விழா இன்று சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்குப் பாடசாலை அதிபர் திரு. சு. துரைசிங்கம் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக மருதனாமடம் உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. இ. ச. குலசேகரனும், சிறப்பு விருந்தினர்களாக உடற்கல்வி அதிகாரி திரு. கே. நாகமணி, சுன்னாகம் கொத்தணி அதிபர் திரு. சே. இராஜவல்லன் ஆகியோரும் கலந்து கொள்வார்கள். (க - 7)

## முகாமைத்துவ பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், மே 26

பட்டதாரி பயிலுனர்களுக்கான முகாமைத்துவப் பயிற்சி நெறி நேற்று முடிவடைந்தது.

இவர்களுக்கான பயிற்சி நெறி கடந்த 3 நாட்களாக செயலகத்தில் நடைபெற்றது.

பயிற்சி பெற்றவர்களுக்கான சான்றிதழ்களை யாழ். அரச அதிபர் வழங்கினார். (இ-9)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம் மே 26

ஆஸ்பத்திரி வீதியில் அமைந்துள்ள தொடர்பகத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு ஜீவாண்ணன் (திரு. ம. ஜீவரட்ணம்) எழுதிய ''வந்துபாருங்கள்'' நூல் வெளியீட்டு வைபவம் நடைபெறும். (ப-8)

## தமிழ்த்தின . . .

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நாடகங்கள், பாடுதல், நடனம் என்பவற்றில் முதலிடம் பெற்றவர்கள் இதில் கலந்து கொள்ள உள்ளனர்.

கலந்து கொள்பவர்கள் பற்றிய விவரங்களை உடனடியாக சமர்பிக்கும்படி சகல கோட்டங்களுக்கும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவர்கள் திருமலை செல்வதற்காக யாழ். கல்வித்திணைக்களம் பிரத்தியேக பஸ் ஒழுங்குகளை செய்துள்ளது. (இ-9)

## வெளிநாட்டு- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

நிலைப்பாட்டையும் நாம் அறியவேண்டும். அதை வைத்துக்கொண்டு நாம் முடிவுகளை எடுக்கலாம்.

வெளிநாட்டில் இருந்து ஒருவர் உழைத்து அவரது உழைப்பிலே, அவரது குடும்பம் வசதியாக வாழுமானால் அவர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உணவு முத்திரைகள் வாபஸ் பெறப்படவேண்டும்.

வெளிநாட்டில் ஒருவர் இருந்தும் அவரது உழைப்பு அந்தக் குடும்பத்துக்கு கிடைக்காவிட்டால் அந்தக் குடும்பத்துக்கு உணவு முத்திரை வழங்கலாம்.

இந்தப் பிரச்சினைகளை கிராம சேவகர்கள் அந்தந்தப் பிரிவுகளில் அமர்ந்திருந்து அறிந்து, குடும்ப வருமானத்துக்கு ஏற்ப தீர்மானம் எடுக்க வேண்டும் -என்றார்.

இந்தக் கலந்துரையாடலின் போது விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் யாழ். மாவட்ட அமைப்பாளர் திரு. ராஜனும் கலந்துகொண்டார். (உ-10)

## வடக்கில்- - -

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சடலத்தை நேரத்துடன் புதைப்பதற்கும் உஞ்சம் ...டும்.

-- இவ்வாறு அவர் மேலும் சொன்னார். (உ-2)

## இலங்கை குடியுரிமை---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெற்றது.!

இவ்வேலை நிறுத்தம் முழுமையாக வெற்றியும் பெற்றது.

1948-ம் ஆண்டு மலையகம் வாழ் தமிழ் மக்களின் குடியுரிமை பறிபோவதை எதிர்த்ததோடுதான் தமிழ் பேசும் மக்களின் போராட்டம் தொடங்கியது.

அன்றில் இருந்து இன்று வரை மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் அவர்களோடு கலந்து பேசாமலேயே தீர்க்கப்படுகின்றன.

மனித உரிமைகள், மனிதத்தன்மைகள் என்பவற்றை மதியாது ஒப்பந்தங்கள் செய்யப்பட்டன. ஏதோ பொருள்களை வாங்கி, விற்பதுபோல் மலையகம் வாழ் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட்டன.

அந்த மக்களை பிரதிநிதித்துவப்படுத்திய துரோகத் தலைமைகள் தமக்குச் சலுகைகளைப் பெற பிரார்த்தனைகள் நடத்தினார்களே தவிர உரிமைகளுக்காகப் போராடியதில்லை.

சிங்கள அரசு தமிழ் பேசும் மக்களை இலங்கைத் தமிழர்கள், இந்தியத் தமிழர்கள், முஸ்லீம்கள் எனப் பிரித்தாள முயல்கின்றது. அதேபோல் மலையகம் வாழ் தமிழ் மக்களின் தலைவர்கள் எனச் சொல்லிக் கொள்பவர்கள் தமது சுயநலனுக்காக இத்தீவில் வாழும் தமிழர்களை இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் ]எனப் பிரித்துப் பேசுவதையும் பார்க்கிறோம்.

### பார்த்துக் கொண்டு இருக்க முடியாது

இத்தீவில் வாழும் தமிழர்களை அரசும் அரச கூலிகளும் பிரித்துப் பார்த்தாலும் எம்மைப் பொறுத்தவரை அவர்கள் தமிழர்கள். தமிழர்களை யாரும் பிரிக்க முடியாது. எந்தத் தமிழ் பேசும் ஒருவனையும் அரசு ஒடுக்குவதையோ கொலை செய்வதையோ நாம் பார்த்துக் கொண்டிருக்க முடியாது.

மலையகம் வாழ் தமிழ் மக்கள் இனப் படுகொலைக்கு உள்ளாக்கப்பட்டு இந்தியா செல்ல நிர்ப்பந்திக்கப்பட்டார்கள்.

அந்தச் சூழலில் ஒரு பகுதியினர் இந்திய கடவுச்சீட்டை பெற்றிருக்கலாம். இன்று அக்கடவுச்சீட்டை பெற்றவர்களோடு, அவர்களது பிள்ளைகளையும் நாடு கடத்த முயல்கின்றது சிங்கள இனவாத அரசு.

இவர்கள் எல்லோரும் இத்தீவின் குடிமக்கள். பிரச்சினைக் குரிய மக்களை கலந்து பேசாது செய்த - இன்று செத்துப் போன ஒப்பந்தங்களை மீள உயிர்கொடுக்க வேண்டிய தேவை இல்லை. இன்று நாம் கேட்பதெல்லாம் இம்மக்களை நாடு கடத்த கூடாது என்பதுதான்.

சிங்கள இனம் படுகொலையை எதிர்த்து தமிழகம் எப்போதும் எமக்கு ஆதரவு தந்து வந்தது.

அதேபோல மலையகம் வாழ் தமிழ் மக்களுக்கு எதிராக நடத்தப்படும் அடக்குமுறைகள், கொலைகள், நாடு கடத்தல் ஆகியவற்றிற்கு எதிரான போராட்டத்திற்கு தமிழக முதல்வரும், தமிழக மக்களும் முழுமையான ஆதரவைத் தரவேண்டும் -- என்று அறிக்கையில் கேட்கப்பட்டுள்ளது. (அ)

## திறப்பு விழா

தென்மராட்சி விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியினால் ஏற்பாடு செய்யப்பட்ட றஞ்சித் பனம் பொருள் விற்பனை நிலையம் திறப்பு விழா இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு நடைபெறும். நவீன சந்தைக் கட்டடத்தில் இந்த விற்பனை நிலையம் அமைந்துள்ளது. சாவகச்சேரி சிற்றூர் அவைத் தலைவர் திரு. சுப்பிரமணிய ஐயர் இவ் வைபவத்துக்குத் தலைமை வகிப்பார்.

வீர மரணம் அடைந்த றேகனின் தாயார் இதனைத் திறந்து வைப்பார். (இ-31)

## தஞ்சம்---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேய்ஸ் நிறுவனம்இந்தமூன்று இலங்கைத் தமிழ் இளைஞர்களைரும் 'கடத்திச்சென்று' வைத்து நாடு கடத்தியது என்று தெரிய வந்திருக்கிறது.

பிரிட்டிஷ் உள்துறை அமைச்சு இந்தச் சம்பவம் நடந்ததை ஊர்ஜிதம் செய்திருக்கிறது.

ஆனால் மூன்று தமிழர்களும் திருப்பி அனுப்பப்பட்ட பின்னர்தான் விஷயமே தமக்குத் தெரியவந்ததாக பிரஸ்தாப அமைச்சுப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

''பிரிட்டிஷ் எயர்வேஸின்'' இந்தக் கடத்தல் நடவடிக்கை அகதிகள் ஏஜன்சிகளுக்குஆத்திரத்தை ஏற்படுத்தி உள்ளது

''விமானச் சேவை'' நிறுவனத்தின் செயல் சட்ட விரோதமானது. இதுஒருகடத்தல் நடவடிக்கையாகும்.

''தனியார் நிறுவனம்ஒன்று ஆட்களைத் தடுத்து வைத்துப் பின்னர் விமானத்தில் ஏற்றி நிர்ப்பந்தமாக அனுப்புவதை அனுமதிக்க முடியாது என்று பிரிட்டிஷ் அகதிகள் கவுன்ஸில் பணிப்பாளர் திரு. அலப் டப்ஸ் சொன்னார். (அ-எ)

## ஆறாவது---

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

வேற்றப்படவேண்டும் என பரிந்துரைசெய்தால் மட்டுமே அந்தத் திருத்தத்தின்மீதான உயர்நீதிமன்ற விசாரணை அவசர அவசரமாக நடைபெறும். இல்லையேல் அத்தகைய திருத்தம்மீதான உயர்நீதிமன்ற விசாரணை நடைபெற்றுமுடிய சுமார் மூன்றுவார காலம்வரை எடுக்கலாம்.

தனிநபர் பிரேரணையாக இந்தத் திருத்தம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டால் --

அது நாடாளுமன்ற நிகழ்ச்சி நிரலில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கும் --

பின்னர் அது உயர்நீதிமன்றில் விசாரணைசெய்யப்பட்டு அந்த விசாரணையின் முடிவு சபாநாயகர், ஜனாதிபதிஆகியோருக்கு அறிவிக்கப்பட்டு அதன் பின்னர் அந்தப் பிரேரணை தொடர்பான விவாதம் நாடாளுமன்றத்தில் நடைபெறுவதற்கும்—

சுமார் நான்கு மாதம் வரை காலம் எடுக்கலாம் எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (உ)

---

உ

சிவமயம்

# திருமண அழைப்பிதழ்

அன்புடையீர்!

நிகழும் பிரமோதூத வருஷம் வைகாசித் திங்கள் 14 ஆம் நாள் (28 - 05 - 1990) திங்கட்கிழமை காலை 9 - 16 மணிமுதல் 10 - 10 மணி வரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்.

| | |
|---|---|
| எமது புதல்வன்<br>திருநிறைச் செல்வன்<br>**யூகராஜா**<br>(Director , Segar & Bros (Pte) Ltd. Colombo)<br>அவர்களுக்கும் | எமது புதல்வி<br>திருநிறைச் செல்வி<br>**சாந்தினி**<br>அவர்களுக்கும் |

திருவருள் துணைகொண்டு திவ்விய ஜீவன சங்க மண்டபத்தில் (சட்டநாதர் கோவிலடி, நல்லூர்) திருமணம் நடாத்தப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால், அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சமேதரராய் வருகைதந்து மணமக்களை ஆசீர்வதிக்குமாறு அன்புடன் அழைக்கிறோம்.

மணவாளக் கோலம் காலை 5 - 52 முதல் 6 - 52 வரை

இவ்வண்ணம் தங்கள் நல்வரவை நாடும்

| | |
|---|---|
| திரு. வீ. வேலுப்பிள்ளையும்<br>பாரியாரும்<br>'சக்தி அகம்'<br>புளியங்கூடல், ஊர்காவற்றுறை. | திரு. க. பஞ்சலிங்கமும்<br>பாரியாரும்<br>சங்கரத்தை,<br>வட்டுக்கோட்டை. |

(13285)

---

# ஷப்றா கிரிக்கெட் புதிர்ப் போட்டி

**கிரிக்கெட் ரசிகர்களே! விரையுங்கள்!! முந்துங்கள்!!!**

ஷப்றா கிண்ணத்துக்காக யாழ்ப்பாணம் ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் நடத்தும் 4 ஆவது கிரிக்கெட் சுற்றுப்போட்டியின் இறுதிபாட்டத்தின்போது நடக்கும் புதிர்ப்போட்டியில் கலந்து கொண்டு கவர்ச்சிகரமான பரிசுகளைப் பெறுங்கள்.

போட்டியில் கலந்து கொள்வது வெகு சுலபம்.

நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் புதிர் வினாக்களுக்குரிய விடைகளை நிரப்பி, கீழே உள்ள கூப்பனைக் கத்தரித்து 27 - 5 - 90 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பதாக இறுதி ஆட்டம் நடைபெறும் யாழ். இந்துக்கல்லூரி மைதானத்தில் இதற்கென வைத்துள்ள பெட்டிகளில் போடுவது தான்.

**குறிப்பு:** ஷப்றா, உதயன் நிறுவன ஊழியர்களோ, ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழக அங்கத்தினர்களோ அவர்களது குடும்ப உறுப்பினரோ புதிர்ப் போட்டியில் கலந்து கொள்ள முடியாது.
நடுவரின் தீர்ப்பே இறுதியானது.

(i) டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட்டுக்களை வீழ்த்தியவர்கள் வரிசையில் இரண்டாவது இடத்தைப் பெறுபவர் யார்? ..............................

(ii) தனது முதல் கிரிக்கெட் டெஸ்டின் இரண்டு இன்னிங்ஸிலும் 'சதம்' அடித்த வீரர் யார்? ..............................

(iii) டெஸ்ட் ஆட்டம் ஒன்றின் ஒருநாள் ஆட்ட வேளைகள் (Session) ஒவ்வொன்றிலும் நூறு ஓட்டங்களைப் பெற்றவர் யார்? ..............................

(iv) ஒரு நாள் சர்வதேச ஆட்டங்களில் இந்திய வீரர் சுனில் கவாஸ்கர் அடித்த செஞ்சரி கள் எத்தனை? ..............................

(v) டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிகூடிய நேரம் எடுத்து இரட்டைச் சதம் அடித்தவர் யார்?..............................

(vi) ஒரே டெஸ்ட் ஆட்டத்தின் இரு இன்னிங்ஸிலும் நூற்றி ஐம்பது ஓட்டங்களுக்கு மேல் எடுத்த துடுப்பாட்ட வீரர் யார்? ..............................

(vii) 'ஷப்றா' கிண்ணத்துக்கான கிரிக்கெட் போட்டியை முதலில் நடத்திய அமைப்பு எது? ..............................

(viii) இவ்வாண்டு தேசிய வீரர் தினத்தன்று ஜனாதிபதியால் கௌரவிக்கப்பட்ட முன்னாள் அகில இலங்கை கிரிக்கெட் அணித்தலைவர் யார்? ..............................

(ix) தற்போதைய டெஸ்ட் கிரிக்கெட் வீரர்களில் வயது குறைந்த வீரர் யார்? ..............................

(x) இவ்வாண்டு நடத்தப்பட்ட 'ஒஸ்ரலேசியா' கிரிக்கெட் போட்டியில் கௌரவிக்கப்பட்ட இலங்கை கிரிக்கெட் வீரர் யார்? ..............................

பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

கையொப்பம்:- ..............................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# O/L 1990

விஞ்ஞானம்

இரா. செல்வவடிவேல்

இலத்திரனியல்

ஆரம்பமாகிறது

(3642)



# பதவி வெற்றிடம்

புங்குடுதீவு - நயினாதீவு
பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் வ.து.

## பொது முகாமையாளர் தரம் 111

1. கல்வித் தகைமைகள்:
   அ. கூட்டுறவு வேலையாளரின் 8 ஆவது சம்பளத் திட்டத்தில் முகாமைத்துவ / மேற்பார்வையாளர் பதவியில் 3 வருடத்திற்கு குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவு வேலையாளர் 9 வது சம்பளத் திட்டப் பதவியில் 6 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

   அல்லது

   ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரி அல்லது சமமதிப்புள்ள தராதரமும் ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவமட்ட பதவியில் 2 வருடத்துக்கு குறையாத அனுபவம்.

   அல்லது

   இ. கூட்டுறவு பணியாளர் பயிற்சிநெறி(உயர்தரம்) தராதரப்பத்திரம் / க. பொ. த. (உயர்தரம்) தராதரப் பத்திரத்தில் 3 பாடங்களில் சித்தியும், ஒரு அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனத்தில் முகாமைத்துவமட்ட பதவியில் 4 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.
2. சம்பளத்திட்டம்: 1105—2170
   ...... ........... இதர படிகளும்
   60x4 — 75x11
3. வயதெல்லை 23 – 50
4. பிணை ரொக்கம் 3000/-ஆதனம் 5000/-உம்
5. விண்ணப்ப முடிவுத்திகதி: 15/06/1990.

விண்ணப்பங்கள் தலைவர், புங்குடுதீவு - நயினா தீவு பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், புங்குடுதீவு. என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைத்தல் வேண்டும்.

தலைவர்,
புங்குடுதீவு-நயினாதீவு, ப.நோ.கூ. சங்கம்,
புங்குடுதீவு.

(சி-4585)



# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

26 - 05 - 1990



அமரர்
வேலணை மேற்கு

## வேலாயுதம் பாலச்சந்திரன்

(விற்பனை முகாமையாளர் - தேசிய கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம் கொழும்பு)

அவர்களின் திதி இன்று

மலர்வு: 23 – 05 – 1938    உதிர்வு: 04 – 06 – 1989

ஊரெலாம் கூடி ஒலிக்க அழுதிட்டுப்
பேரினை நீக்கிப் பிணமென்று பேரிட்டுச்
சூரையன் காட்டிடைக் கொண்டு போய்ச்சுட்டிட்டு
நீரினுள் மூழ்கி நினைப்பொழிந்தார்களே.

உள்ளத்தால் நினைத்திடும் உங்கள்
ஆருயிர் மனைவி, அன்பு மக்கள்,
உற்றார், உறவினர்.

திருமதி பா. நாகேஸ்வரி,
'கஜமுக பவனம்'
வேலணை மேற்கு.

(13268)


# பங்கரின் 30 ஆண்டு காலப் பணி என்றும் நினைவு கூரத் தக்கது

## யாழ்ப்பாணக் கல்லூரி முன்னாள் அதிபர் உரை

யாழ்ப்பாணம், மே 26

''யாழ்ப்பாணக் கல்லூரியையும் வண. சிட்னி பங்கரையும் பிரித்துப் பார்க்க முடியாது. சுமார் 30 ஆண்டுகளாக அவர் யாழ்ப்பாணக் கல்லூரியின் தலைவராக இருந்து ஆற்றிய பணி என்றும் நினைவு கூரத்தக்கது.

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் கைலாசபதி அரங்கில் புதன்கிழமை மாலை நடைபெற்ற பங்கர் நினைவுச் சொற்பொழிவுகளுக்குத் தலைமை வகித்து உரையாற்றிய யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபர் திரு. ஏ. கதிர்காமர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் பேசுகையில், ''1969 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட பங்கர் நினைவுச் சொற்பொழிவுகள் 1983 முதல் நடைபெறவில்லை. இந்த ஆண்டு இச் சொற்பொழிவுகளை மீண்டும் ஆரம்பித்ததற்காக யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் திரு. எஸ். ஜெபநேசனை நாம் பராட்ட வேண்டும்'' என்று கூறினார்.

1990 ஆம் ஆண்டுக்ககான பங்கர் நினைவுச் சொற்பொழிவுகளை சென்னை கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் வண. டாக்டர் பிரான்சிஸ் சவுந்திரராஜ் நிகழ்த்தினார்.

ஆங்கில இலக்கியத்தைக் கற்பதற்கு பேச்சு ஆங்கிலத்தைத் தவறில்லாமல் கற்றுக் கொண்டிருக்க வேண்டும் என்று வண. சவுந்தரராஜ் கருத்துத்துத் தெரிவித்தார்.

இந்தப் பொருள் பற்றிய அவருடைய ஆங்கில மொழியிலான உரையின் முதற்பகுதி புதன்கிழமையும்இறுதிப்பகுதி வியாழக்கிழமையும்இடம்பெற்றன.

யாழ்ப்பாணக் கல்லூரி அதிபர் கலாநிதி எஸ். ஜெபநேசன் இந்த நினைவுச் சொற்பொழிவுகளின் போது திரு. ஏ. கதிர்காமருடன் உடன் இருந்தார்.

பல கல்விமான்களும் யாழ்ப்பாணக் கல்லூரி ஆசிரியர்களும் பங்கர் அபிமானிகளும் இச் சொற்பொழிவுகளின் போது பிரசன்னமாய் இருந்தார்கள். (க)

## கண் தானம்

கொழும்பு மே 26

தனது கண்களைத் தானம் செய்யப் போவதாக மல்வத்தை மகாநாயக்க தேரர் ரம்புக்வெல தர்மரக்ஷித விபாஸ விருப்பம் தெரிவித்துள்ளார்.

இலங்கைக் கண்தான சங்கத் தலைவர் டாக்டர் ஹட்ஸன் சில்வாவிடம் அவர் இந்த விருப்பத்தை தெரிவித்தார். (இ-எ)

# கிளிநொச்சி அபிவிருத்திக்கு மேலும் 25 லட்சம் ரூபா

யாழ்ப்பாணம் மே 26

கிளிநொச்சி மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைகளை துரிதப்படுத்துவதற்காக மேலும் 25 இலட்சம் ரூபா, பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியின் கீழ் வழங்கப்பட்ட உள்ளது.

இந்த நிதியை துரிதமாக பெற்று தருவதாக ஈழவர் ஜனநாயக விடுதலை முன்னணியின் யாழ்ப்பாண மாவட்ட உறுப்பினர் திரு. தில்லைநாதன் கிளிநொச்சி அரசாங்க அதிபர் திரு. கே. மாணிக்கவாசகரிடம் உறுதி அளித்துள்ளார். (இ-76)

## திரியாய் அம்மன் திருக்குளிர்ச்சி

திரியாய் அம்மன் ஆலயத்தின் வருடாந்தப் பொங்கல் திருக்குளிர்ச்சி விழா ஜூன் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நடைபெறும். (க)

## மகளிர் கருத்தரங்கு

யாழ்ப்பாணம்' மே 26

'சமுதாய அபிவிருத்தியில் பெண்களின் பங்கு' என்னும் தலைப்பில் மகளிர் அபிவிருத்தி நிலையம் நாளை சனிக்கிழமை பருத்தித்துறை காந்தியூர் கிராமத்தில் கருத்தரங்கு நடத்துகிறது.

கருத்தரங்கில் பங்கு பற்றுவதற்காக காந்தியூர், மற்றும் அண்மித்த ஊர்களிலிருந்து பெண்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மந்திகை ஆதார வைத்திய சாலையின் பிராந்திய அலுவலர் டாக்டர் எஸ். கதிரவேற்பிள்ளை கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார்.

யாழ். பல்கலைக்கழக புவியியல்துறைப் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை, சுண்டிக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை திருமதி ஏ. முருகதாஸ், திரு. எம். சிறீபதி, மேற்படி நிலைய இயக்குநர் திருமதி எஸ். சிவச்சந்திரன் ஆகியோர் கருத்தரங்கில் தமது கருத்துக்களை முன்வைப்பார்கள். (இ-7)

## விவசாய பொருட்காட்சி

கோப்பாய் மே 26

கோப்பாய் விவசாயிகள் சங்கம் இன்று 26 ஆம் திகதி சனிக்கிழமை கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாசாலையில் விவசாயப் பொருட்காட்சி ஒன்றை நடாத்தவுள்ளது. யாழ். மாவட்ட விவசாய உதவிப் பணிப்பாளர் திரு கே. குணரத்தினம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

மாலையில் பொதுக்கூட்டமும் அதனைத் தொடர்ந்து ''காலத்தின் கோலம்'' ''பொடியன்போனபோக்கு'' என்னும் இரு நாடகங்களும் இடம்பெறும். (இ-72)


வெளிவந்துவிட்டது    வாங்கிவிட்டீர்களா?

# ஞானக்கதிர்

அன்பு - அறநெறி - ஆன்மீகம்

[வைகாசி மாத இதழ்]

சாயிபாபா சொன்ன கதை
யானையை அடக்கிய சாது
அமெரிக்காவில் ஒரு சிவாலயம்
பிராரத்துவ வினை......
(புராணக் கதை)
திருவடி வணக்கம்
வேதாந்த மரபு......
(சமயத் தொடர் கட்டுரை)
நாளை முதல் குடிக்கமாட்டேன்......
(சமூகச் சிறுகதை)
திருமந்திரம்
நாமார்க்கும் குடியல்லோம்

ஈழத்துத் திருத்தலங்களான;
- சீரணி நாகம்மை
- புங்குடுதீவு கண்ணகியம்மன்
- வண்ணை நாச்சிமார் கோயில்

அற்புதங்களுடன், வரலாறுகளும்......

- ★ கலாநிதி சபா. ஜெயராசா
- ★ ஆத்மஜோதி நா. முத்தையா
- ★ கலாநிதி சுப்பிரமணியம்
- ★ அழகு அருணாசலம்
- ★ கலாநிதி வித்துவான் க. ந. வேலன்
- ★ வில்வம பசுபதி

ஆகியோரின் ஆக்கங்களுடன்
இன்னும் பல அம்சங்கள்.........

விலை ரூபா 7/- மட்டுமே!

— பிரதிகளுக்கு உங்கள் பகுதி உதயன் முகவர்களை நாடுங்கள் —

[சி-4531]



வெளிநாட்டில் உள்ள
# உங்கள் உறவினர்களுக்கு
அவசரமாக, விரைவாக, பாதுகாப்பாக

★ கடிதங்கள் ★ பார்சல்கள்
★ தஸ்தாவேஜுகள்

ஆகியவற்றை அனுப்ப உடன் தொடர்பு கொள்ளுங்கள்:

## DHL International Ltd.
## C/o Cosmos Marketing Services Ltd.

337, Kasturiar Road, Jaffna.

(சி/4530)



சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம்
[வ. உ]

## லொறிச் சுத்திகரிப்பாளருக்கான
[கிளீனர்]
விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

மேற்படி வெற்றிடத்திற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் தலைவர், சங்கானை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை ''என விலாசமிட்டு இடது பக்க மேல் பகுதியில்'' லொறி (கிளீனர்) சுத்திகரிப்பாளருக்கான விண்ணப்பம் என்று குறிப்பிட்டு அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரர் கீழ்க்காணும் தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி: 06 - 06 - 1990

1. தேவையான தகைமை:- கூட்டுறவுப் பணிப்பாளர் 15ஆவது சம்பளத்திட்டத்தில் ஒரு வருட அனுபவம்.

   அல்லது

   5ஆம் வகுப்புச் சித்தியும் சிறந்ததேகாரோக்கியமும்
2. வயது எல்லை:- 18 முதல் 45 வரை
3. அனுபவம்:- ஒரு வருடத்திற்கு மேலாக அனுபவம் விரும்பத்தக்கது.
4. நற்சான்றிதழ்:- அண்மையில் பெற்ற இரு நற்சாட்சிப பத்திரம் இணைக்கப்படல் வேண்டும்.
5. சம்பளம்:-
   ரூபா 700 — 950
   ........................ சகலபடிகளும் வழங்கப்படும்
   15 10 — 20 5

நிரந்தரமாக்கப்படும்வரை வேலை செய்யும் நாளிற்கு ரூபா 50/ வேதனம் வழங்கப்படும்.

—பொதுமுகாமையாளர்

24 - 05 - 1990    (சி/4536)



# 4ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. த. கதிரவேலு
(இளைப்பாறிய தலைமை ஆசிரியர்)

தோற்றம்: 11 – 02 – 1925    மறைவு: 10 – 06 – 1986

திதி:-26 - 05 - 1990

ஆண்டுகள் நான்கு
உருண்டோடிவிட்டாலும்
இன்னும் ஆண்டுகள் பல வந்திடினும்
நீங்குமா? நின் நினைவு
அன்புடன் அரவணைத்து
ஆளாக்கிய நின்
அன்பு முகம் நிழலாடும்
என்றுமே.


மனைவி, மக்கள்,
மருமக்கள்.

''ஆனந்தபவனம்''
திருவத்தம்பை,
ஊரிக்காடு,
வல்வெட்டித்துறை.

(3619)



# 3ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## திரு. சுப்பர் மகாலிங்கம்

ஆண்டவன் படைப்பு: 05 – 08 – 1954    மறைவு: 25 – 05 – 1987

உம்மை நினைவு கூரும்:
மனைவி, மகள், மகன், தாய்,
சகோதர, சகோதரிகள், மைத்துனர்கள்,
மைத்துனிகள், மருமக்கள், பெறாமக்கள்.

10, 3ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

[3643]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மில்க்வைற் மேலுறைகளுக்கு அரிய அன்பளிப்புகள்"

பெட்சீற், துவாய், கைலேஞ்சி, பாடசாலைப்பை, காந்தி இலை, நீதிக்குரங்கு, உண்டியல், அப்பியாசக் கொப்பி, நீதிநூல் இன்னும் பலபல.

மில்க்வைற் மேலுறைகளைச் சேகரியுங்கள்

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# சஞ்சீவி

26—05—1990 சனிக்கிழமை

மலிவுவிற்பனை! அன்பளிப்பு!

வற்றாத அருள்கொண்ட வற்றாப்பளை கண்ணகை

பொங்கல் தினத்தன்று ஆலயத்தில் மில்க்வைற் மேலுறைகளுக்குப் பெறுமதியான அன்பளிப்புகள்

இன்றே மேலுறைகளைச் சேகரியுங்கள்

மில்க்வைற் - யாழ்ப்பாணம்.

# யாழ்ப்பாண மக்கள் அனுபவித்த கஷ்டங்களை பிரிட்டிஷ் மக்கள் நன்கு அறிவர்

## மருத்துவ சங்க விழாவில் பிரிட்டிஷ் தூதர்

யாழ்ப்பாணம், மே 26

யாழ்ப்பாண மக்கள் அனுபவித்த கஷ்டங்களை பிரிட்டிஷ் மக்கள் நன்கு அறிவார்கள். உண்மையில் நான் மூன்று ஆண்டுகளுக்கு முன் யாழ்ப்பாணம் வந்து நேரடியாக விஷயங்களைப் பார்த்துச் சென்றேன்;

யாழ்ப்பாணம் மருத்துவ சங்கத்தின் 8 ஆவது வருடாந்த கூட்டத்தை நேற்று மாலை ஆரம்பித்து உரையாற்றிய போது இலங்கையில் உள்ள பிரிட்டிஷ் தூதர் திரு. டேவிட் கிளாட்ஸ்டன் மேற்கண்டவாறு கூறினார்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கைலாசபதி மண்டபத்தில் நடைபெற்ற இந்த விழாவுக்கு யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் தலைவர் டாக்டர் ஏ. விஜயரத்னம் தலைமை வகித்தார்.

பிரிட்டிஷ் தூதர் மேலும் பேசுகையில் கூறியதாவது-

மருத்துவ உலகம் பொதுவாகப் பெரிய நெருக்கடிகளை எதிர்நோக்குகிறது. யாழ்ப்பாண டாக்டர்கள் குறிப்பாக அண்மைக் காலத்தில், ஒரு சங்கட நிலைமையில் இருந்தார்கள். தமது உன்னத தொழிலின் புனித கோட்பாட்டுக்கு இணங்க கடமையைச் செய்வதா அல்லது அதிகாரத்தில் உள்ள சக்திகளுக்கு அடிபணிவதா என்பதே அவர்களைத் திண்டாடவைத்த பிரச்சினையாகும்.

யாழ்ப்பாண ஆஸ்பத்திரிக்காக பிரிட்டிஷ் அரசாங்கம் அனுப்பும் மருத்துவ உதவிகள் செப்டம்பர் மாதத்தில் இங்கு வந்து சேரும். யாழ்ப்பாண ஆஸ்பத்திரியுடன் பிரிட்டிஷாராகிய எமக்கு நல்ல உறவு நிலவுகிறது.

இப்படி அவர் கூறினார்.

திரு. கிளாட்ஸ்டனும் பாரியாரும் டாக்டர் விஜயரத்தினமும் மங்கல விளக்கேற்றி விழாவை ஆரம்பித்தார்கள்.

பிரிட்டிஷ் தூதரின் ஆரம்ப உரையை அடுத்து கலாசார நிகழ்ச்சி ஒன்றும் இடம் பெற்றது. (க)

# வருட வேலை நாட்களை அதிகரிக்க அரசுக்கு சிபாரிசு

கொழும்பு, மே 26

அரசுத் துறையில் ஓராண்டின் வேலை நாட்களை 30 தினங்களால் அதிகரிக்குபடி அரசுக்குச் சிபார்சு செய்யப்பட்டுள்ளது.

இப்போது ஓர் ஊழியர் 186 தினங்களே ஒரு வருடத்தில் பணிபுரிகிறார்.

இதனை 216 தினங்கள் வேலை செய்வதாக அதிகரிக்க வேண்டும்.

பொது விடுமுறை தினங்கள், முக்கிய சமயதின விடுமுறைகள் ஆகியவற்றை வெட்டாமல், ஏனைய விடுமுறை வசதிகளில் சில மாற்றங்களைச் செய்வதன் மூலம் வேலைத் தினங்களை அதிகரிக்க சிரேஷ்ட அரசு அதிகாரிகள் குழு ஒன்று சிபார்சு செய்துள்ளது.

அரசுத்துறையில் இப்போது வழங்கப்படும் சமயாசமய லீவு, மற்றும் லீவுகளாக ஒருவருக்கு 45 நாள் வழங்கப்படுகிறது.

இதனை 30 தினங்களாகக் குறைக்கவேண்டும்.

இந்த 30 தினங்களையும் எந்தரக லீவு என்று வரையறுக்காது பொதுவான லீவு என்று கருதப்பட வேண்டும் என்று ஆலோசனை கூறப்பட்டுள்ளது.

எடுக்காத லீவுகள் அனைத்தையும் மொத்தமாக எடுக்கவும் இடமளிக்க வேண்டும்.

தினசரி வேலை நேரத்தை 45 நிமிடங்களால் நீடிப்பதன் மூலம் ஓர் ஆண்டில் மேலும் 22 நாட்கள் வேலை செய்யும் நாட்களாகக் கிடைக்கின்றன என்றும் இந்தக் குழு ஆலோசனை தெரிவித்துள்ளது. (உ-எ)

# தமிழகத்தில் கார் விபத்து! ஈழத்தமிழ் இளைஞர் கைது!

விபத்து ஒன்றில் சிக்கிய அம்பாஸிடர்கார் ஒன்றை எடுத்துச் செல்ல முயற்சித்ததாகக் கூறப்படும் இலங்கைத் தமிழ்ப்போராளி என்று சந்தேகிக்கப்படும் ஒரு இளைஞரை பொலீஸார் கைது செய்தனர்.

இந்தக்கார் திருவிலங்காடு அருகில் குத்தாளம் என்னும் இடத்தில் விபத்துக்குள்ளானது.

போராளிகள் என்று கருதப்படும் மூன்று பேர் பயணஞ் செய்த இந்தக்கார் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒருவரை மோதியதாம்.

காரில் இருந்த மூவரும் தப்பிச்சென்று விட்டனர்.

அனாதரவாகக் கிடந்த காரை அடுத்த நாட்காலை சந்தேக நபர் களவாக எடுத்துச் செல்ல முயற்சித்த போதே பொலிஸாரினால் பிடிக்கப்பட்டார்.

அந்த இளைஞரை பொலீஸார் விசாரித்து வருகின்றனர். (உ-எ)

# சரணடைந்தோரில் ஒருவர் முன்னாள் சப் இன்ஸ்பெக்டர்

சுதந்திர சரணடைவுக்குழுவிடம் சரணடைந்தவர்களிடம் முன்னாள் பொலீஸ் சப் இன்ஸ்பெக்டரும் ஒருவர் என்று அறிவிக்கப்படுகிறது.

மிரிஸ்ஸையைச் சேர்ந்த இவரின் பெயர் டபிள்யூ.ஜி. கபிலகுமார மாத்தளை பொலீஸில் முன்னர் பணியாற்றினார்.

கொழும்பில் உள்ள சரணடைவுக்குழுத் தலைமைக்காரியாலயத்தில்இவர் சரணடைந்தார். (உ-எ)

# சகல ஈழப்போராளிகளுக்கும் சென்னையில் அலுவலகங்கள்

## கலைஞர் கருணாநிதி தகவல்

சென்னை மே 26

தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் உட்பட அனைத்துத் தமிழ்ப் போராளிக் குழுக்களுக்கும் சென்னையில் அலுவலகங்கள் உள்ளன; ஆனால் அவற்றின் பயிற்சி முகாம்கள் எதுவும் இங்கு கிடையாது.

முதலமைச்சர் கருணாநிதி முன் கண்டவாறு தெரிவித்தார்.

எம். ஜி. ஆர். ஆட்சி இருந்த போதும் ஆளுநர் ஆட்சி இருந்த போதும் தமிழ் நாட்டில் இருந்த பேராளிக் குழுக்களில் இருபத்தைந்து வீதம் கூட இப்போது கிடையாது.

திருவலங்காடு என்னுமிடத்தில் தமிழ் பேராளிகள் சம்பந்தப்பட்ட விபத்து சம்பந்தமாக விசாரணை நடத்தப்பட்டு வருகிறது. அந்த சம்பவத்திற்கு யார் பொறுப்பாக இருந்தாலும் அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்-

இப்படி திரு. கருணாநிதி மதுரையில் செய்தியாளர் மாநாட்டில் சொன்னார். (உ-எ)

### கார் இறக்குமதிக்கு ரூ. 1 கோடி 80 லட்சம்

கொழும்பு, மே 26

நீதிபதிகளுக்குத் தேவையான மாஸ்டா-323 ரக கார்களை இறக்குமதி செய்ய ஒரு கோடி 80 லட்சம் ரூபாவை ஒதுக்குவதற்கு அமைச்சரவை அங்கீகாரமளித்தது. (உ-எ)

# செந்தூரன் சிலை திறப்பு விழா

புதுக்குடியிருப்பு, மே 26

இந்திய இராணுவத்துடனான நேரடி மோதலில் வீரமரணம் அடைந்த கப்டன் செந்தூரனின் நினைவாக அவரது சிலை இன்று சனிக்கிழமை இரணைப்பாலை கிராமத்தில் திறந்து வைக்கப்படுகிறது.

இவ் விழாவில் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர்மாத்தையா, மற்றும் முன்னணி உறுப்பினர்கள் சந்திரன், திவாகர், கைலாஸ், ஜொனி, குணம் ஆகியோரும் உரையாற்ற உள்ளனர். (-126)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிக்கேஷன்(பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இலக்கத்தில் உள்ள அச்சகத்தில் 26-05-1990 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது

# கொக்குவில் இந்து பரிசளிப்பு விழா

கொக்குவில் இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழா எதிர்வரும் 29 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்.

பொறியியலாளர் திரு. கே. சுப்பிரமணியம் வைபவத்தில் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். கொக்குவில் இந்துக் கல்லூரி இளைப்பாறிய உப. அதிபர் திருமதி சுகிர்தலக்சுமி பரிசில்களை வழங்குவார். [இ]

## ஆரம்ப சுகாதார நிலையம்

புங்குடுதீவிலுள்ள ஊரதீவில் ஆரம்ப சுகாதார நிலையமொன்று அமைக்கப்படவுள்ளது. சுகாதாரத் திணைக்களம் இதற்கான நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது. (இ-ரி)

# மட்டக்களப்பு - அம்பாறை மாவட்ட தொலைபேசி சேவை சீரமைப்பு!

## டென்மார்க் நிபுணர் குழு ஆராய்வு

மட்டக்களப்பு, மே 26

மட்டக்களப்பு — அம்பாறை மாவட்ட தொலைத்தொடர்பு சேவை புனரமைப்பு, விஸ்தரிப்பு குறித்து ஆராய்வதற்காக டென்மார்க் நிபுணர் குழு அண்மையில் வருகை இங்கு தந்தது.

வாழைச்சேனை, ஏறாவூர், காத்தான்குடி, கல்முனை, சம்மாந்துறை',அம்பாறைகளு வாஞ்சிக்குடி ஆகியஇடங்களுக்குஇக்குழுவினர்சென்று பார்வையிட்டனர்.

வடக்கு-கிழக்கு மாகாண தொலைத்தொடர்பு பொறியலளர் திரு. எஸ். கனகசூரியர், மட்டக்களப்பு பிராந்தியத் தொலைத் தொடர்பு பொறியியலாளர். திரு. பி. இராஜேஸ்வரன் ஆகியோரும் நிபுணர் குழுவுடன் இப்பகுதிக்கு வந்திருந்தனர்.

காத்தான்குடி, களுவாஞ்சிக்குடி ஆகிய இடங்களில் இரு தொலைபேசி பரிவர்த்தனை நிலையங்களை அமைப்பதற்கான சாத்தியக் கூறுகள் பற்றி ஆராயப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-ரி)

# சட்டியிலிருந்து நெருப்பில் விழ இந்திய பிரஜைகள் விரும்புவரா?

## ரஞ்சன் விஜேரத்ன கேட்கிறார்

கொழும்பு, மே 26

ஒரு இலட்சம் இந்தியப் பிரசைகள் வடக்கு - கிழக்கில் குடியேற்றுவது மூலம் பொரிக்கும் சட்டியிலிருந்து நெருப்புக்குள் விழ விரும்புவார்களா?

வாராந்த செய்தியாளர் மாநாட்டில் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன மேற்கண்டவாறு கேட்டார்.

அமைச்சர் விஜேரத்ன நடத்திய வாராந்த செய்தியாளர் மாநாட்டில் இடம்பெற்ற சில கேள்வி - பதில்கள் வருமாறு;

கேள்வி : ஒரு லட்சம் மலையக இந்தியப் பிரசைகளை தாயகம் திருப்பி அனுப்புவதற்கு எதிராக விடுதலைப் புலிகள் ஹர்த்தால் நடத்தினார்களே !

பதில் : செய்தியாளர் மாநாடு ஒன்றில் நான் கூறிய கருத்து ஒன்றை வைத்து இப் பிரச்சினை பெரிதாக்கப்பட்டது. நான் கள்ளமின்றித் தெரிவித்த பதில் 'சம்பல்' ஆக இன்று மாற்றப்பட்டு உள்ளது.

கேள்வி : இந்தியப் பிரசைகளை தாயகம் திருப்பி அனுப்புவதற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் என்ன தொடர்பு உண்டு?

பதில்: அவர்கள் தங்கள் உறுப்பினர் எண்ணிக்கையை அதிகரிக்க விரும்புகிறார்கள் போல் உள்ளது. யார்தான் அதிக உறுப்பினர்கள் சேருவதை விரும்பமாட்டார்கள்?

கேள்வி : ஒரு லட்சம் இந்தியப் பிரசைகளையும் தங்கள் 'நாட்டில்' வந்து குடியமரும்படி விடுதலைப் புலிகள் அழைத்துள்ளனரே!

பதில்: அவர்கள் நாடா?

கேள்வி : ஆம். வடக்கு - கிழக்கு......

பதில் : ஸ்ரீலங்காவின் ஒரு பகுதி அது. எங்கு குடியமர்த்துவது என்பது பற்றி தீர்மானிக்கும் உரிமை எவருக்கும் இல்லை. பெருமளவில் மக்கள் இடம்பெயர்வது என்பது மடமைத்தனமான பேச்சாகும். மக்கள் குடியமர்தல் பற்றி அரசுதான் தீர்மானிக்கும். ஆனால் தனிநபர் தனிப்பட்ட முறையில் காணி வாங்கி குடி[illegible] எப்படியாயினும் அரசின் அங்கீகாரம் இன்றி [illegible]வில் குடியமர்தல் இடம்பெற முடியாது. இதெல்லாம் வெறும் பேச்சு.

பொரிக்கும் சட்டியில் இருந்து நெருப்புக்குள் விழுவதற்கு இந்தியப் பிரசைகள் முன்வருவார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

அழிவு காரணமாக வடக்கு-கிழக்கு மக்கள் வாழ்வதற்கே கஷ்டப்படுகிறார்கள்.

மலையக மக்கள் அங்கு சென்றால் காட்டு இலைகளைத்தான் சாப்பிட்டு வாழ வேண்டி வரும்.

வடக்கு-கிழக்கு மக்களுக்கு நிறையப் பிரச்சினைகள் உள்ளன. இந்த ஒரு லட்சம் பேரையும் அவர்கள் ஏற்றுக் கொள்வார்கள் என்று நீங்கள் எண்ணுகிறீர்களா?

கேள்வி: வரதராஜப்பெருமாள் இலங்கை திரும்பினால் மன்னிப்பு அளிக்கப்படுமா?

பதில்: அரசியலமைப்புக்கு விரோதமாக ஒருவர் நடந்தால் அதன் பலனை அவர் அனுபவித்தே ஆகவேண்டும். நாம் நாகரிக சமுதாயத்தில் வாழ்கிறோம் எவரும் எதையும் செய்துவிட்டுத் தப்பிவிட முடியாது. ஒரிஸ்ஸாவுக்கோ, வேறு எங்கோ பெருமாள் ஓடிவிட்டார்.

கேள்வி: விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் அரசுக்கும் இடையே நடைபெற்று வரும் பேச்சுக்கள்பற்றிய விவரங்கள் சர்வகட்சி மாநாட்டில் முன் வைக்கப்படுமா?

பதில்: அவை சர்வகட்சி மாநாட்டு வரையறைக்குள் வரவில்லை.

கேள்வி: விடுதலைப்புலிகள் இயக்கம் ரத்துச் செய்யக் கோரும் 6ஆவது அரசமைப்புச் சட்டத் திருத்தம் பற்றி என்ன சொல்லப்போகிறீர்கள்?

பதில்: சர்வகட்சி மாநாட்டுக்கு உரிய விஷயம் அல்ல அது. விஷயத்தைக் குழப்பாதீர்கள். சர்வகட்சி மாநாட்டில் விவாதிப்பதற்கு 20 விஷயங்கள் நிர்ணயிக்கப்பட்டு உள்ளன.

கேள்வி: அடுத்த கட்டப் [illegible] எல். எவ். இயக்கத்துடன் [illegible] நடந்தது?

பதில்: தேவையில்லை. நாம் மனம்விட்டுப் பேசிவிட்டோம். அவர்களின் கோரிக்கைகளுக்கு காது கொடுக்க வேண்டும் என்றால் சர்வகட்சி மாநாடு தான் உரிய இடம் என்று கூறிவிட்டோம். அவர்களும் சர்வகட்சி மாநாட்டுக்குப் போய்விட்டார்கள்.

கேள்வி: சர்வகட்சி மாநாட்டில் விடுதலைப்புலிகள் கலந்து கொள்ளவில்லையே!

திரு. பிராட்மன் வீரக்கூன்: மாநாட்டில் கலந்துகொள்ளப் போவதில்லை என்று அவர்கள் அறிவிக்கவில்லை. ஆனால் அவர்கள் மாநாட்டின் சனிக்கிழமைக் கூட்டத்தில் கலந்து கொள்ளவில்லை. முதலமைச்சர் கருணாநிதியிடம் சமர்ப்பித்த 19 கோரிக்கைகளையும் சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கும்படி ஈ. பி. ஆர். எல். எவ்வுக்கு நாம் கூறிவிட்டோம்.

கேள்வி: தனியாகப் பேச்சுக்கள் நடத்துவதை விட்டு விடுதலைப் புலிகளின் கோரிக்கைகளையம் சர்வகட்சி மாநாட்டில் சமர்ப்பிக்கும்படி விடுதலைப் புலிகளிடம் நீங்கள் ஏன் கூறவில்லை?

பதில்: சர்வகட்சி மாநாடு ஆரம்பமாவதற்கு முன்னர் விடுதலைப் புலிகள் — அரசு பேச்சு ஆரம்பமாகிவிட்டது. அவர்கள் வித்தியாசமானவர்கள். அவர்களை நாம் தான் பேச்சுக்கு அழைத்திருந்தோம். அந்த நேரம் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் ஈ. பி. ஆர். எல். எவ். நிர்வாகம் இருந்தது. ஈ.பி.ஆர்.எல் எவ்வுடனும் நாம் அந்த நேரம் பேச்சுக்கள் நடத்தினோம். பாரபட்சம் காட்டப்படவில்லை.

இப்படி அமைச்சர் ரஞ்சன் விஜேரத்தின சொன்னார்.

### கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு

மட்டக்களப்பு மே 26

மட்டக்களப்பு நகரப் பகுதியில் கட்டாக்காலி நாய்கள் ஒழிப்பு நடவடிக்கையில் மாநகர சபை ஊழியர்கள் தற்போது ஈடுபட்டுள்ளனர். (உ-ரி)

# ஆலயத்தில் ஆயுதங்கள்; சுரங்கஅறைக்குள் 'பிறிட்ஜ்'

## மதகுருவும் 3 யுவதிகளும் கைது!

கொழும்பு, மே 26

கதிர்காமம் பிரதேசத்தில் உள்ள வெலிகந்த பகுதியைச் சேர்ந்த ஆலயம் ஒன்றின் பிரதம குரு ஒருவரை பொலீஸார் கைதுசெய்தனர்.

ஆயுதங்கள் மற்றும் ரவைகள் வைத்திருந்தார் என்ற முறைப்பாட்டின் மீது இப் பிரதம குரு கைது செய்யப்பட்டார்.

சம்பளம் வழங்க மறுத்ததுடன் அப்படிக் கேட்டால் சுட்டு விடுவதாக அந்தப் பிரதம குரு பயமுறுத்தினார் என்று ஆலய ஊழியர் ஒருவர் செய்த முறைப்பாட்டைத் தொடர்ந்து கதிர்காமம் பொலீஸார் சம்பந்தப்பட்ட ஆலயத்தைச் சோதனையிட்டனர்.

அச்சமயம் லைசென்ஸ் இல்லாத நான்கு துப்பாக்கிகள் 30 தோட்டாக்கள், 3 லட்சத்து 97 ஆயிரம் ரூபா பணம், 3 அடையாளக் கார்ட்கள் ஆகியவற்றை ஆலயத்தில் இருந்து பொலீஸார் கைப்பற்றினர்.

ஆலயத்தின் அலுவலக அறை ஒன்றிலிருந்து நில அறை ஒன்றுக்குச் சுரங்கப் பாதை அமைக்கப்பட்டிருந்ததும் கண்டுபிடிக்கப்பட்டது.

அந்தச் சுரங்க அறையில் 12 குளிர்சாதனப்பெட்டிகள் 4 ''டீப் பிறிசர்கள்'' என்பன மறைத்து வைக்கப்பட்டிருந்தன.

ஆலயத்தில் பிரதம குருவுடன் அங்கு பணி புரிந்ததாகக் கூறப்படும் மூன்று யுவதிகளும் கைது செய்யப்பட்டனர்.

நெஞ்சுவலி என்று முறையிட்டதைத் தொடர்ந்து பிரதம குரு பலத்த பாதுகாப்புடன் அப்பகுதி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருக்கிறார். (அ-எ)

## வடபகுதிக்குத் தேவையான

# விதை உருளைக்கிழங்கு ஹோலந்திலிருந்து இறக்குமதி

யாழ். மாவட்டத்துக்குத் தேவையான விதை உருளைக் கிழங்கை ஹோலந்து நாட்டில் இருந்து இறக்குமதி செய்ய கமநல சேவைத் திணைக்களம் நடவடிக்கை எடுத்துவருகிறது.

யாழ் மாவட்டத்தில் அடுத்தபோக உருளைக்கிழங்குச் செய்கைக்கு 12 ஆயிரம் பெட்டி விதைஉருளைக் கிழங்கு தேவை என மதிப்பிடப்பட்டிருக்கிறது.

தேவையான விதை உருளைக்கிழங்கை கொழும்பில் உள்ள தனியார் நிறுவனம் ஒன்றின் மூலம் இறக்குமதி செய்ய கமநல சேவை நிலையத்தின் சிரேஷ்ட ஆணையாளர் நடவடிக்கை எடுத்துவருகிறார்.

சடந்தவருடம் இதேபோல ஹோலந்திலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதைஉருளைக்கிழங்கு அமோக விளைச்சலைப் பெற்றுக்கொடுத்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-10)

எமது இன்றைய புதிய வெளியீடுகள்

விஜயகாந் - அமலாவின்

★ புதுப்பாடகன் ★

[ஒறிஜினல்]

ராஜசேகர் - தீபிகாவின்

-மன்னிக்க வேண்டுகிறேன்-

[ஒறிஜினல்]

சீதா - செந்தாமரை - S. S. சந்திரனின்

★ சக்தி பராசக்தி ★

[ஒறிஜினல்]

நாளைய வெளியீடு

ரகுமான் - கனகா - கௌதாமியின்

★ சீதா ★

வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி, ஐந்துசந்தி, யாழ்ப்பாணம்.

(13155)



விற்பனையாகின்றது

'அத்வைதமும் சாயி அவதாரமும்' என்ற நூல் விலை ரூபா 22-00.

சாயி அவதாரத்தின் 50 வருடப் பணியை நினைவுகூருமுகமாக, நாவற்குழி சத்யசாயி வேதாந்த தபோவனத்தால் பிரசுரிக்கப்பட்டுள்ளது.

கிடைக்குமிடம்:- பூபாலசிங்கம் புத்தகசாலை யாழ்ப்பாணம். [13154]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாவலர்-சித்தன்கேணி

பௌதிகம் - திரு. க. கணேஷன்
இரசாயனம் - திரு. BAR
தாவரவியல் - திரு. பாலா
விலங்கியல் - திரு. ஞானம்

சஞ்சிகை

26 - 05 - 1990 சனிக்கிழமை

நாவலர்
பண்டத்தரிப்பு & சித்தன்கேணி
ஆண்டு 11
கணிதம்
திரு. ப. குணம்
"புள்ளிவிபரவியல்"

# நீர்த்தேக்கங்களால் பூகம்பம் புவியியலாளர்கள் எச்சரிக்கை

**1986** ஆம் ஆண்டு ஏப்ரல் 20 ஆம் திகதி அதிகாலை 3 மணியளவில்......

கந்தளாய்க் குளத்தின் பிரதான மடை (Sluice) க்கதவின் அருகே ஏதோ சத்தம் கேட்கிறது. தொடர்ந்து கந்தளாய்ப் பொலீஸுக்கு தகவல் அனுப்பப்படுகிறது.

பொலீஸார் ஜீப்பில் கந்தளாய்ப்புராணக் கிராமத்துக்கு பறந்துசென்று ஒலிபெருக்கி மூலம் எச்சரிக்கின்றனர்.

குளம் உடைக்கும் ஆபத்து ஏற்பட்டுள்ளது. உடனடியாக மேட்டுப் பகுதிகளுக்கு ஓடிச் செல்லுங்கள்.

இதுவே பொலீஸார் விடுத்த எச்சரிக்கை.

அதிகாலைத் தூக்கத்தில் அயர்ந்து இருந்த மக்கள் திடுக்கிட்டு எழுகின்றனர்.

அகப்பட்டதைக் கைகளில் எடுத்துக்கொண்டு, வைகறை இருளில் மக்கள் அங்கும் இங்குமாக ஓடுகின்றனர்.

எல்லாமே நிமிடக்கணக்கில்......அதற்குள் ஒரு பிரளயம் முடிந்துவிடுகிறது.

### நூற்றாண்டின் பேரழிவு

இலங்கை நீர்ப்பாசனத் துறை வரலாற்றில் இந்த நூற்றாண்டின் பேரழிவாக கந்தளாய் நீர்த்தேக்க உடைப்புச் சம்பவம் பதிவாகியுள்ளது.

நூற்றுக்கணக்கானோரின் உயிரிழப்புக்குக் காரணமான கந்தளாய் நீர்த்தேக்க உடைப்பு பற்றி 'வேர்ல்ட் வாட்டர்' என்ற உலக மாத சஞ்சிகையின் 1986 ஜுலை இதழ் விரிவான கட்டுரை ஒன்றைப் பிரசுரித்தது.

அதன் அட்டைப்படமாக உடைப்பெடுத்த பின்னர் எடுக்கப்பட்ட கந்தளாய் நீர்த்தேக்கத்தின் படம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

இந்த உடைப்புப்பற்றி விசாரிக்க, இலங்கை அரசின் அழைப்பின் பேரில் பிரிட்டிஷ் அரசு வெளிநாட்டு அபிவிருத்தி நிர்வாகத்தின் சார்பில் டாக்டர் போல் பாக், திரு. டெரெக் நைற் ஆகிய இரண்டு பொறியியலாளர்களை அனுப்பிவைத்தது.

அந்த இரண்டு பொறியியலாளர்களுக்கு கந்தளாய்க்கு நேரில் சென்று, இந்த அழிவை நேரில் பார்த்த 12 பேரின் சாட்சியங்களைப் பதிவு செய்தனர். தொழில் நுட்பத் தகவல்களை நீர்ப்பாசனத் திணைக்களத்திடம் இருந்து பெற்றனர்.

உடைந்த குளத்தின் பல பாகங்களையும் பார்வையிட்ட இவர்கள், சிலரைப் பேட்டி கண்டனர்; புகைப் படங்களும் எடுத்தனர்.

இறுதியில்— ''நீர்த்தேக்கத்தின் மடை (Sluice) யின் பொருத்துக்கள் உக்கிப் போனதால் இந்த பேரழிவு ஏற்பட்டது''– என்று அவர்கள் கூறினர்.

இன்னுமொரு கருத்தையும் அவர்கள் வெளியிட்டனர்.

1982-1983 ஆம் ஆண்டில் பிரதான மடையின் மேல் 41.1 மீற்றர் உயரத்தில் நிறுவப்பட்ட 'பம்ப்ஹவுஸ்' ஏற்படுத்திய அதிர்வுகளும் மடை அருகில் வெடிப்பை ஏற்படுத்த உதவியிருக்கலாம் என்ற சந்தேகமும் அவர்களின் அறிக்கை கூற்றில் இருந்து வெளியாகியது.

### பிரிட்டிஷ் நிபுணர்கள் கருத்து

பெரிய அளவிலாக அதிர்வை ஏற்படுத்தக்கூடிய 'பம்ப்ஹவுஸ்' ஒன்றை மடைமேல் நிறுவியது புத்திசாலித்தனமற்ற செயல் என்றும் பிரிட்டிஷ் பொறியியலாளர்கள் சுட்டிக்காட்டினர்.

அப்படியானால் – நில அதிர்வுகள், நடுக்கங்களும் நீர்த்தேக்கங்கள் உடைப்பெடுக்கக் காரணமாக அமைகின்றன என்ற உண்மை வெளியாகியுள்ளது.

பிரமாண்டமான நீர்த்தேக்கங்களில் நீரை நிரப்பிவைப்பதாலும் நில நடுக்கம் ஏற்படலாம் என்று இப்போது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மிகப்பெரிய அணைகளாலும், நீர்த்தேக்கங்களாலும் ஏற்படும் நன்மைகள் ஒருபுறமிருக்க, அவைகள் பூகம்பத்திற்குக் காரணமாக அமைகின்றன என்பதை புவியியல் நிபுணர்கள் ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## கந்தளாய்க்குள உடைப்புக்கு இதுவும் ஒரு காரணமா?

### பூகம்பத்தை வரவழைக்க...

''பூகம்பத்தை வரவழைக்க வேண்டுமா?

''மிகப் பெரிய அணையைக் கட்டி நீர்த்தேக்கத்தில் நீரை முழுவதும் நிரப்புங்கள்''—

இப்படி இருபது ஆண்டுகளுக்கு முன்பே உலகப்புகழ் பெற்ற பிரெஞ்சு நாட்டு புவியியல் நிபுணர் டாக்டர் ஜே. பி. ரோத் கூறினார்.

நீர்த்தேக்கத்தால் பூகம்பம் எப்படி ஏற்படுகிறது?

ஒரு பெரிய நீர்த்தேக்கத்தில் தண்ணீர் தொடர்ந்து நிரம்பியிருக்கும் பொழுது அந்த இடத்தை ஒட்டியுள்ள நிலப் பகுதியின் புவிசர்ப்புச் சமநிலை (Equilibrium) தடுமாறுகிறது.

பூமிப்பரப்பின் மேற்பகுதியில் சிறிய அளவிற்கு விரிசல்கள் ஏற்படுகின்றன.

அவற்றின் ஊடே தண்ணீர் சென்று நிலப்பரப்பைப் பாளம் பாளமாக அசைக்கிறது!

அணைப்பகுதிகளில் இந்த வித பூமி நடுக்கங்களை புவியியல் நிபுணர்கள் பதிவு செய்து பூகம்ப ஆபத்தைப் பற்றிச் சொல்லியுள்ளனர்.

இந்த வகை ஆபத்தினை Reservoir – Induced Seisimicity (RIS) என்று விஞ்ஞானிகள் குறிப்பிடுகின்றனர்.

நீர்த்தேக்கம் ஏற்படுத்திய பூகம்பம் என்று 1945 இல் அமெரிக்காவில் நிகழ்ந்த ஹூவர் அணை விபத்தைக் குறிப்பிடலாம்.

மற்ற பூகம்ப விபத்துக்களினால் பின் விளைவுகள் அதிகம் ஏற்படுகின்றது.

ஆனால் நீர்த்தேக்கங்களால் ஏற்படுத்தும் பூகம்ப விபத்துக்களால் முன்விளைவுகள், பின்விளைவுகள் ஒரே அளவிற்கு ஆபத்தானவை என்று புவியியல் நிபுணர்கள் கூறுகின்றனர்.

நீர்த்தேக்கம் தொடர்ந்து பல நாட்கள் நிரம்பியிருப்பதும்,

விரைவாக, வேகமாக அணைக்கு நீர் வந்து சேர்வதும் நில நடுக்கத்திற்குக் காரணமாக அமைகின்றன.

### நில அதிர்வுகள்

அமெரிக்கா, பிரான்ஸ், இத்தாலி, கிரேக்கம் ஆகிய நாடுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மிகப்பெரிய நீர்த்தேக்கங்கள் வேகமாக நிரம்பும்போது மோசமான நில அதிர்வுகளை ஏற்படுத்துகின்றன என்று தெரிவிக்கின்றன.

இந்தியாவில் மகராஷ்டிர மாநிலத்தின் 'கொய்னா' அணைக்கட்டில் இன்றுவரை சுமார் 400 சிறிய, பெரிய நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளன.

இந்த அணை 1963 இல் கட்டப்பட்டது. 1967 இல் கொய்னா அணை அருகே எற்பட்ட பூகம்பத்தில் 100 பேர்வரை மாண்டனர்.

1967 செப்டம்பர் முதல் 1968 ஜனவரி வரையிலான 5 மாத காலத்தில் இந்த அணை இரண்டு மிகப்பெரிய பூகம்பங்களுக்கு காரணமாக இருந்திருக்கிறது.

ஒரு பூகம்பத்தின் அதிர்வு ரிச்டர் அளவைப்படி 5.5 ஆகவும் மற்றொன்று 6.3 ஆகவும் இருந்தது.

அதன்பிறகு இந்த அணை எப்பொழுதும் முழுவதுமாக நிரப்ப அனுமதிக்கப்படவில்லை.

### புதிய திட்டங்களால் ஆபத்து

நீர்த்தேக்கங்களால் விளையும் நில அதிர்வுகளைக் கருத்திற்கொண்டே புதிய அணைகளைக் கட்டவேண்டாம் என்று விஞ்ஞானிகள் குரல்கொடுத்து வருகிறார்கள்.

ஆக்கமும் அழிவும் நீரினால் என்பது உண்மை தான்.

ஆக்கத்தை நிலைபெறச் செய்யமுடியாவிட்டாலும் அழிவையாவது தடுக்கலாம்.

இதற்காக ஏற்கனவே கட்டப்பட்டுள்ள அணைகளினால் ஏற்படும் நில அதிர்வுகளைக் கணித்துப் பூகம்ப சாத்தியக் கூறுகள் பற்றி முன்னெச்சரிக்கையாக அரசாங்கங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று விஞ்ஞானிகள் எதிர்பார்க்கிறார்கள். ★

**– தீபன்ராஜா –**

சுமார் ஆயிரத்து முந்நூறு ஆண்டுகளுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்டதாகக் கூறப்படும் கந்தளாய் நீர்த்தேக்கம் 1869 இல் பிரிட்டிஷ் ரோயல் பொறியியலாளர்களால் புனரமைக்கப்பட்டது.

ஆரம்பத்தில் இதன் அணைக்கட்டு 25 அடி உயரமாக இருந்தது. நாடு சுதந்திரமடைந்த பின்னர் அணைக்கட்டு படிப்படியாக உயர்த்தப்பட்டது.

மழைநீரினால் நிரம்பிவந்த இந்த நீர்த்தேக்கத்திற்கு பின்னர் கல்லோயா, யோதஎல மூலமாக நீர் கொண்டுவரப்பட்டது.

கடைசியாக மகாவலியும் இதற்குத் திசைதிருப்பி விடப்பட்டது.

1986 இல் இந்த நீர்த்தேக்கம் உடைப்பெடுத்த போது அதன் அணைக்கட்டின் உயரம் 50 அடிக்கு மேலாக இருந்தது.

இந்த நீர்த்தேக்கம் கடைசியாக 13 கோடி 56 லட்சத்து 85 ஆயிரம் கன மீற்றர் நீர் கொள்ளக்கூடியதாக அமைக்கப்பட்டிருந்தது.

உடைப்பெடுத்த சமயம் நீர்த்தேக்கத்தில் 47 அடி நீர் இருந்தது.

உடைப்பின் பின்னர் எடுக்கப்பட்ட படம் இது. பிரதான மடை (Sluice) புரண்டு கிடப்பதை கீழே உள்ள படத்தில் காணலாம்.



## கருத்துக் கலசம் — மயூரா

### சிறுவருக்கு நல்லொழுக்கம்

மனித வாழ்க்கையில் ஒழுக்கம் உயிரினும் ஓம்பப்படும் ஒன்றாக உயர்நிலை வகித்தது. நல்லொழுக்கமே மனிதப் பண்புகளில் சிறந்ததாகக் கருதப்பட்டது. ஆனால் இப்போது அந்த நிலை மாறி வருகிறது – மாறிவிட்டது.

நல்லொழுக்கம் நலிவுற்றுப் போனதால், சமுதாயக் கட்டமைப்பும், நெறிசீர் முறையும் உருக்குலைந்து போகின்றன. பொய்மை, பொறாமை, சூழ்ச்சி, களவு, காழ்ப்பு, கபடம், 'கழுத்தறுத்தல்' வஞ்சகம் செய்தல், வஞ்சம் தீர்த்தல், அதர்மம், நேர்மையின்மை என்று துர்க்குணங்களே சமுதாயத்தை சூழ்ந்து அதனைத் துவம்சம் செய்கின்றன.

மனித தர்மங்கள், சமூகப் பெறுமானங்கள், பண்பியல் நெறிகள் என்பன தூர்ந்து மறைந்து போனமைக்கு, நல்லொழுக்கம் குன்றியதே மூல காரணம். சரியாகச் சொல்வதானால் இரண்டு தலைமுறைகள் நல்லொழுக்கத்தின் விழுமியம் அறியாமல் சீரழிந்தன– சீரழிகின்றன.

இந்த ஆபத்துத் தொடராமல் தடுக்க வேண்டுமானால், அடுத்த தலைமுறையாவது ஒழுக்கமுள்ள, பண்புள்ள, சமூக நீதி, தர்மம் என்பன செறிந்த ஒன்றாக உருவாக்கப்பட வேண்டும். எனவே இன்றைய சிறுவர்களுக்கு – நாளைய பிரசைகளுக்கு – நல்லொழுக்கம் ஊட்டப்பட வேண்டியது அவசியமாகிறது.

குழந்தையும் தெய்வமும் குணத்தால் ஒருமித்தவர்கள். குழந்தைகளுக்கு கள்ளம் கபடம் இல்லாத வெள்ளை உள்ளம். பிஞ்சு மனம் ஈரலிப்பானது. அதில் தூவப்படும் நற்குண விதைகளைப் பொறுத்தே குழந்தை சிறுவனாகி, சிறுவன் இளைஞனாகி, இளைஞன் மனிதனாகி வளரும் போது ஒருவனின் நல்லொழுக்கம் சீரமைகிறது.

ஆகையால், நல்லொழுக்கங்கள் எவை, அவற்றின் சிறப்புகள் என்ன என்பதைச் சிறுவர்களுக்குப் புகட்ட வேண்டும். ஐந்தில் வளையாதது ஒருபோதும் ஐம்பதில் வளையாது. நல்லொழுக்கத்தையும், நற்பண்புகளையும் ஊட்டுவதற்கு உகந்த பருவம் சிறுபராயமே.

சிறுவர்களுக்கு நல்லொழுக்கம் ஊட்டும் பணியை முன்னரெல்லாம் பெற்றோரும், குருவும், வீட்டிலும், கல்விச்சாலையிலும் ஆற்றி வந்தார்கள். ஆனால் அதனை இப்போது எதிர்பார்க்க முடியவில்லையே.

வருங்கால சந்ததியினருக்கு நல்லொழுக்கம் ஊட்டும் பொறுப்பும் தகுதியும் மூத்த பரம்பரையினருக்கே உண்டு. ஆகையால் அவர்கள் இது விஷயத்தில் கரிசனை கொள்ள வேண்டும். இல்லையேல் மூன்றாவது தலைமுறையும் அதற்கடுத்த சந்ததிகளும் நல்லொழுக்கம் தெரியாத சமூகங்களாகவே நீண்டு வளரும்.

அறவழிப் போராட்டக் குழுவைப்போல, ஏனைய சமூகநல இயக்கங்களும் சிறுவர் நல்லொழுக்கக் கருத்தரங்குகளை நடத்த உடனடியாகச் செயலில் இறங்க வேண்டும்.

ஒழுக்கம் விழுப்பம்
தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும். ★

# கலை கலைக்காகவே என்பது அர்த்தமே இல்லாத கோஷம்!

கவிதை, கலை, என்பதெல்லாம் மக்கள் சார்ந்ததாக இருக்கவேண்டும் என்பதில் எனக்கும் உடன்பாடு தான்.

சமுதாய முன்னேற்றத்தில் அக்கறை கொண்ட மார்க்ஸிஸ்டுகள் கலை, கலைக்காக என்கிற கொள்கையை இழுத்து வைத்து அதைச் சாடி கலை, சமுதாயத்துக்காகத்தான் என்பதை ஸ்தாபித்துத் திருப்திப்பட்டுக் கொள்வது வழக்கம்.

கலை, தனிமனிதனுக்காக வேண்டுமானால் இருக்கலாம்; ஒரு குறிப்பிட்ட கோஷ்டியினருக்காக இருக்கலாம்; ஒரு சமுதாயத்துக்காக இருக்கலாம்; எதிர்காலத்துக்காக இருக்கலாம்; முடியுமானால் இந்தக் காலத்துக்காகவும் இருக்கலாம்.

ஆனால் எந்தக் கலையும் ''கலைக்காக'' என்று இருக்க முடியாது என்று என் நினைப்பு.

### இலக்கணம்

இலக்கணம் என்பது இலக்கியத்துக்காக இருக்கலாம்; இலக்கியம் எழுதுபவர்களுக்காக இருக்கலாம்; இலக்கியம் படிப்பவர்களுக்காகலாம்.

இலக்கணம் இலக்கணத்துக்காக மட்டும் இருக்கமுடியுமா?

இதே போலத்தான் கலை விஷயமும்.

கலைஞர்களுக்காக ஒரு கலை இருக்கலாம். கலைஞர்கள் அல்லாத பாமரர்களுக்காக இருக்கலாம்; கலையைப் பற்றி நன்கு அறிந்த, கலை வாசனை உள்ள ஜனங்களுக்காக இருககலாம்.

''கலைக்காக'' இருக்கிற கலை இனிமேல்தான் சிருஷ்டியாக வேண்டும்.

ஓரளவு இந்த வாக்கியத்துக்கு அர்த்தமேயில்லை என்று கூடச் சொல்லலாம்,

### இங்கிலாந்தில்

Art for Arts Sake என்பதன் மொழிபெயர்ப்பு என்று இதை வைத்துக்கொண்டால், இந்தமாதிரி ஒரு இயக்கம்– அது ஒரு இயக்கமாக எப்போதாவது செயற்பட்டிருந்தால் இங்கிலாந்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசி இருபது, இருபத்தைந்து ஆண்டுகளில் எழுந்த Pre-Raphaelite இயக்கத்தின் கோஷமாக அதை இயக்க உபயோகிக்கப்பட்டது என்று வேண்டுமானால் சொல்லலாம்.

இந்த இயக்கத்தினர், நாங்கள் கலைஞர்கள், சமுதாய நியதிகள் எங்களைப் பாதிக்காது; நாங்கள் சமுதாயத்துக்குக் கட்டுப்பட்டவர்கள் அல்ல' என்று ஒரு அரைப் புரட்சிசெய்ய முயன்றார்கள்.

புது லக்ஷிய சமுதாயம் ஒன்றை தங்கள் கலைக்கு உகந்ததான ஒரு இலட்சிய பூமியைச் சிருஷ்டிக்கவும் முயன்றார்கள்.

ஆனாலும் அவர்களும் சமுதாயத் தாக்கத்தைத் தங்கள் கலா சிருஷ்டிகளில் காட்டினார்கள், தப்ப இயலவில்லை என்று சொல்லவேண்டும்.

''கலை கலைக்காகவே'' என்று சொல்லுவது ஏதோ மகத்தான பைபிள் வாக்கியம், உபநிஷத சாரம் போலத் தோன்றினாலும் அதற்கு எதுவும் அர்த்தம் இருப்பதாகத் தெரியவில்லை.

கலைஞன் ஒருவன் கலையைச் சிருஷ்டிக்கிறான். அக்கலை கலைஞர்களுக்காக வேண்டுமானால் இருக்கலாம். கலைக்காக எப்படி இருக்கமுடியும்?

ஒரு படத்துக்குத் தன்னையே ரசித்துக்கொள்ளும் திறமையுண்டா?

ஒரு நூலுக்கு தன்னைத் தானே படித்துக்கொள்ளும் திறமை உண்டா? இலக்கியம் இலக்கியத்துக்காக என்றால், முன்னால் எழுதிய இலக்கிய ஆசிரியர்களின் தரத்தை எட்டுவதற்கு என்று அர்த்தப்படுத்தலாம். அல்லது வரப்போகிற மேதைகளுக்கு என்று அர்த்தப்படலாம்.

இலக்கியம் இலக்கியத்துக்காகவே எப்படி இருக்கமுடியும்?

கலையை எந்தச் சமுதாயமும் சிருஷ்டிப்பதில்லை. கலைஞன் என்கிற தனிப்பட்ட மனிதன் சிருஷ்டிக்கிறான்.

எந்தக் கலையிலுமே அந்தக் காலகட்டத்தின், சமுதாயத்தின் போக்குகள் கட்டாயமாக இருந்தே தீரும்.

இதை எண்ணித்தான் 'வக்ரோக்தி ஜீவிதம்' ஆசிரியர் ''எந்தக் கலையும் யதார்த்தம் என்பதில்லாமல் சாத்தியமில்லை'' என்றும் ''எந்தக் கலையிலும் யதார்த்தம் இடம் பெறாதிருக்க இயலாது'' என்றும் சொல்லுகிறார்.

உலகின் மகா அழகியாகிய ஹெலனைப்பற்றிப் பாடிய ஹோமரைக் குருடு என்று சொல்வார்கள்.

அதேபோலக் கலையும், இலக்கியமும் பிறருக்கு வெளிச்சம், அறிவு, ஞானம் தரலாமே தவிர தன்னளவில் ''குருடு'' தானே? ★

**- க. நா. சுப்பிரமணியம் -**

## தமிழ்ப் பயிர் வளர்ப்பீர்!

தாய்மொழி தன்னில் மேலாம்
தனிக்கவி சொல்லி வாழ்வீர்
வாய்மொழிக் கவிதை எல்லாம்
வண்டமிழ் மணந்தே வீசும்
செய்மொழி கண்டு நீவிர்
செய்திடும் கவிதை எல்லாம்
ஆய்மொழி அமைதி கொண்டே
ஆண்மையை ஊட்டும் அன்றோ!

முத்தமிழ்ப் புலவர் நீங்கள்
முதுபெருங் கவிஞர் அன்றோ
இத்தமிழ் எங்கே கற்றீர்
இயற்றமிழ் நாட்டி என்றோ
வித்தகர் எல்லாம் உங்கள்
வீறுடைக் கவிதை கேட்டே
நித்தமும் களிப்பர் அன்றோ
நிகரிலாப் புதுமை என்னே!


சிந்தையிற் கோயில்கொண்டே
திகழ்ந்திடும் தமிழின் தெய்வம்
விந்தையில் விந்தையாக விளங்கிடும்
வியத்தகு கவிதை எல்லாம்
சொந்தையில் கள்ளைப் போன்றே
மோகன ராகம் பாடும்
தந்தையில் தந்தை என்னனத்
தனையனைக் காத்து நிற்பாள்!

எண்ணரும் பிறவி தோறும்
எந்தமிழ் மொழியைக் கற்றே
பண்ணருந் தொண்டு செய்தே
தமிழ்ப்பயிர் வளர்ப்பீர் நீவிர்
கண்ணருந் தமிழின் சாயல்
தக்கதோர் புலமை எல்லாம்
விண்ணரும் மழையைப் போன்றே
விருந்தென விளங்கும் நன்றே!

— சிங்கையாழியான் —

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதயக் கீறலின் வெளிப்பாடு



அயலூர் சென்று அலுவல் ஒன்றை முடித்துவிட்டு, வழக்கம்போல் 'பஸ் ஸ்ராண்டில்' இருந்து வீடு செல்வதற்காகச் சொந்தக்காலில் நின்று பழகிய அருளம்பல மாஸ்ரரின் மனம் இன்றும் தன் சொந்தக் கால்களையே நாடியது.

ஊர்வம்புகள் - எல்லைத் தகராறுகள் - சமூகப்பிரச்சினைகள் போன்ற பொது விடயங்களில் நடுநிலை வகித்துப் பழகிய அவரால் தன் பொருளாதார நிலையிலும் நடுநிலையையே வகிக்க முடிந்தது.

எடுத்ததற்கெல்லாம் கருவிகளையும் இயந்திரங்களையும் பாவித்துப்பழகி, அதிலே சொகுசு காணும் இன்றைய கால மனிதரிடையே பஸ் ஸ்ராண்டில் இருந்து தன்வீடு வரை உள்ள இரண்டு கிலோ மீற்றர் தூரம் நடப்பதை ஒரு சாதாரண விடயமாக எடுத்துக் கொண்டு, தாளலயம் மாறாமல் நடந்து கொண்டிருக்கும் அருளம்பல மாஸ்ரர் மற்றவர்களைக் காட்டிலும் சற்று வித்தியாசமானவர்தான்.

என்றாலும் சற்றுமுன் அவருக்கு முன்னால் தெருவின் ஒரு ஓரத்தில் இருந்து மறு ஓரத்திற்கு ஓடிய அந்த வெள்ளைப் பூனையைக் கண்டதிலிருந்து அவருடைய நினைவுகளும் கனவுகளும் குழம்பிடவே மனது சிறிது சஞ்சலப்பட்டது.

சிலகணம் ஆவதற்கு முன்பாக,

அவர் எதிரே அசுரகதியில் சைக்கிளில் வந்து நின்றவனின் இதழ்கள் அவரைப் பார்த்தபடி பலமுறை மூடித்திறந்தன. கிஞ்சித்தும் எதிர பாராத விதமாக வந்த அந்தத் திடுக்கிடும் செய்தி அவரின் இதயத்தைச் சிலகணம் ஸ்தம்பிக்கச் செய்துவிட்டது.

ஆ...... அப்படியா........? எனக் கேள்வி கேட்டவரின் நாக்கும் மேல்அண்ணத்தோடு கேள்விக்குறிபோல் தொங்கி விட்டது.

விடயத்தைத் தெளிவாகப் புரிந்துகொண்டு விரைவாகச் 'சைக்கிள் கரியறில்' தொத்திக் கொண்டாலும் சைக்கிள் ஓடுவது போல் அவருக்குத் தெரியவே இல்லை.

'மகள் கிணற்றுக் கட்டில் ஏறி மாதாளங்காய் பிடுங்கும் வரை என்ரை மனுஷி என்ன தான் செய்து கொண்டிருந்தாளோ எனக்குத் தெரியவில்லை. நான் இல்லை என்றால் இன்னும் எத்தனை விசித்திரங்கள்தான் அந்த விட்டிலை நடக்காது...?'

அதற்குள் சைக்கிள் தெருவில் இருந்த ஒரு குழியில் விழ, நாவில் ஜலம் ஊறியதால் தொண்டைக்குழியில் இருந்த அடைப்பு ஏற்படுகிறது ....

'இறுக்கி உழக்கு தம்பி, அங்கை என்ரை மகள் என்ன பாடு படுகிறாளோ தெரியாது. நீ இப்ப தான் உன்ரை சேட்டைகளைக் காட்டிக் கொண்டிருக்கிறாய். ஆர் இருக்கினை என்ரை குழந்தையைக் கிணற்றுக்குள்ளாலை தூக்கிறதுக்கு? ஆரும் போனதைக் கண்டனியே தம்பி......?

'ஓம் மாஸ்ரர். கூக்குரல் கேட்டுக் கனசனம் விழுந்தடிச்சோடிக்கொண்டிருந்தது... எப்பிடியும் குழந்தையைக் காப்பாற்றி போடுவினை... நீங்க எதுக்கும் பயப்படாமத் தைரியமாய் இருங்கோ மாஸ்ரர் ...'

பையனின் சமாதானம் ஓரளவு ஆறுதலைக் கொடுத்தாலும் ஊர்ச்சனத்துக்சென்ன ஓடிப்போய் நிண்டு விடுப்புப் பாக்குங்கள். எங்க ஊர்ச்சனத்தைப் பற்றி எனக்குத் தெரியாதா? பிள்ளையைப் பெற்ற தகப்பன் என்ற முறையில் எனக்கல்லவோ தெரியும் மனது படும் தவிப்பையும் வேதனையையும்......

சைக்கிளில் ஏற்பட்ட திடீர் வேக அதிகரிப்பு மாஸ்ரரின் மனநிலையைச் சைக்கிளோட்டி புரிந்து கொண்டதை ஊர்ஜிதப்படுத்தியது.

★ ★ ★

ஆனால்,

வேகமாகச் சைக்கிள் சக்சரங்கள் முன்னோக்கிச் செல்லும் அதே வேளையில் மாஸ்ரரின் மனச் சக்கரம் ஏனோ பின்னோக்கிச் சுழன்று கொண்டிருந்தது.

அத்தனை ஊர்ச்சனங்களிடையேயும் பக்கத்துவீட்டுக் கூலிக்காரக் கறுப்பையாவினுடையமகன் மாயவனின் முகம் அவரது மனக்கண்ணில் நிலாவெனப் பிரகாசித்தது.

எனது வீட்டுச் சுற்றாடலைப் பொறுத்தவரை இந்த மாயவன் என்கிற ஒருவன் தான் விரல்விட்டு எண்ணக் கூடிய ஒரே ஒரு ஆம்பிளை. படிப்பறிவு கொண்டவர்களால்கூட முடியாத சில காரியங்களைத் தானே தனித்து நின்று வெற்றிகரமாய் முடித்துவைக்கக்கூடிய துடிப்புமிக்க இளைஞன். தன்னுடைய வேலையிலும் பார்க்க மற்றவர்களின் வேலைகளில் கூடிய கவனமெடுக்கும் உத்தமனும்கூட.

இவனுடைய உதவி கிடைத்திருந்தால் நிச்சயமாக எனது மகள் சரோஜாவை உயிரோடு நான் பார்க்கமுடியும். இல்லாவிட்டால் அவளது பூதவுடலை மட்டும்தான் என் கண்களால் தரிசிக்கமுடியும்.

ஆனால் அந்த மாயவன்

**- செ. பஞ்சநாதன் -**

இன்று வீட்டில் இருப்பானோ? அல்லது பின்நேரக் கூலி என்று எங்கேனும் மாயமாய் மறைந்திருப்பானோ என்பதும் காத்தற் கடவுளாகிய அந்த மாயவனுக்குத் தான் வெளிச்சம்.

வீட்டில் இருந்தாலும்கூட ஓடிவந்து எனது மகள் சரோஜாவைக் காப்பாற்ற வேணும் என்ற வாஞ்சை அவனுக்கு வருமோ என்பதும் சந்தேகமே. இதை நினைத்த போது மனதில் இருந்த சந்தேகத்தோடு பீதியும் வந்து பின்னிக்கொண்டது. அதற்குக்காரணம்.........?

★ ★ ★

மூன்று ஆண்டுகளுக்கு முன் இந்தக் கூலிக்காரக் கறுப்பையாவின் மகன் மாயவனுக்கும் எனது மகன் உதய சங்கருக்கும் இடையில் பள்ளிக்கூடப் பழக்கம். பக்கத்து வீடு என்ற முறையில் சிறு சிநேகம் இருந்தது என்னவோ உண்மைதான்.

இதற்காகக் கறுப்பையாவின் மகனோடை உனக்கென்னடா கதை? அப்படி என்னடா சிநேகம்......? — என்று மகனை வைது - இதை நாலு பேருக்குச்சொல்லி — ஊராரைக் கூட்டி வீண் வம்புகளை விலைக்கு வாங்கிக் கொள்ள - நான் அப்படி ஒன்றும் படிக்காத முட்டாள் இல்லை.

படிக்கும் பிள்ளையின் மனதில் ஏன் விபரீதமான கருத்துக்களைப் புகுத்தி மனநிலையைப் பாழடிப்பான் என்று தெரிந்தும் தெரியாதவர் போல் அறிந்தும் அறியாதவர் போல் இருந்து விட்டேன்.

அவர்களும் கதைப்புத்தகங்கள் சில மாற்றிக்கொள்வது; மண்வெட்டி, அலவாங்கு போன்ற வீட்டுப்பாவனைக்கேற்ற பொருள்களைக் கேட்டு வாங்கிக்கொள்வது; ஊர்ப்புதினங்களைப் பற்றி அலசி ஆராய்வது போன்றவற்றோடு 'கேற்' எல்லை வரை கட்டுப்பாடாகவே பழகிக்கொண்டார்கள். மகனின் இந்த விதமான போக்கு எனக்கும் வெகுவாகப் பிடித்திருந்தது.

அன்றொருநாள், பாடசாலைகளுக்கிடையே வருடாந்த உடற்பயிற்சிப் போட்டி நடக்க இருந்த சமயம்.

எனது மகன் 'ட்றில் டிஸ்பிளேய்க்குத்' தன்னைப் போட்டிருக்கு என்றும், தான் அதில் கட்டாயம் பங்குகொள்ளவேண்டும் என்றும், அதற்கு 'வைற் யூனிபோமோடு' 'வைற் ஷூவும்' தேவை என்று என்னிடம் வந்து கேட்டான்.

ஓர் ஆசிரியரான நான் இதை எப்படி மறுப்பது என நினைத்துவிட்டு, மாத 'பட்ஜெட்' இதற்கு இடமளிக்காததாலும், மற்றவர்களிடம் இரவல் கேட்பது மனதிற்குப் பிடிக்காததாலும், அந்த ஐந்நூறுரூபாவுக்காகப் பலரிடம் பல்இளிக்கவேண்டியதாய்ப் போய் விட்டது.

நம்ம பிள்ளைக்குத்தானே என்றதால் இதைக் கூட அவ்வளவு கௌரவக்குறைவாக நான் கருதவில்லை. ஆனால் அவன் செய்த அடுத்த காரியம் என் மனதை ஆழமாகப் பாதித்துவிட்டது.

என்னிடம் ஒரு வார்த்தை கூடச் சொல்லாமல், நான் எத்தனையோ கஷ்டப்பட்டு வாங்கிக் கொடுத்த, ட்றில் டிஸ்பிளேய்க்குத்தேவையான அத்தனையையும், சிநேகிதன் கேட்டு விட்டான் என்ற ஒரே ஒரு காரணத்துக்காகப், பக்கத்து வீட்டுக் கூலிக்காரக் கறுப்பையாவின் மகன் மாயவனுக்குத் தூக்கிக் கொடுத்து விட்டான் இந்த சங்கர் பயல்.

எவர் மூலமோ எனக்கு தெரியத் தொடங்கியபோது, அங்கு ஒரு புயலே வீசத் தொடங்கி விட்டது.

'கொடுத்ததுதான் கொடுத்தாய் என்றால், எனக்குத் தெரியாமல் ஏன் கொடுத்தாய்......? - என்று நான் மகனைக் கேட்க —

'உதவி என்று வந்து கேட்டான். இருந்ததைக் கொடுத்தேன். இதில் என்ன தவறு?— என்று மகன் எனக்குச் சொல்ல,

'அப்படி என்றால் அவன் உடுத்த உடுப்புகளை நீ திரும்பவும் போடுவியா?' — என்று நான் தொடர

'அதிலை என்ன இருக்கு? போட்டால் நாங்கள் என்ன குறைந்தாபோய்விடுவம்...? என்று விடாமல் மகன் தொடர,

'அதற்கு உனக்குச் சந்தர்ப்பம் இருக்காது. நீ அப்படிச் செய்துபோடுவாய் என்று தெரிந்துதான், நேரத்தோடேயே அவற்றை நான் எரித்துவிட்டேன். இன்னொன்று, இதுபோல எதுவும் இங்கு எனக்குத் தெரியாமல் எதுவும் நடக்கக்கூடாது' என நான் மகனை எச்சரிக்கைசெய்திருந்தேன்.

இதற்குப்பின்—

க. பொ. த. சாதாரணப் பரீட்சைமூட்டம் ஒருநாள். விளங்காதபகுதிகள் சிலவற்றைக் கேட்டுப்படிக்க விரும்பிய மாயவன் புத்தகமும் கையுமாக வீட்டுமுற்றத்தில் வந்துநின்றகோலம்என்னைத் திகைக்கவைத்துவிட்டது.

கறுப்பையா மகன் கையில் பாடப்புத்தகமா ...? இந்நிலை தொடர்ந்துபோனால்...... நாளைக்கு எனக்கும் பாடஞ் சொல்லித்தர வெளிக்கிடுவான் என நினைத்ததனால், இதைப் [illegible] வாங்க வந்தனீ? என்று முன்னைய கொடுக்கல் வாங்கல் விடயம் தெரியுமாப்போல, உரத்த சத்தத்தில் உறுக்கினேன் அவனை.

கையும் மெய்யுமாய்ப் பிடிபட்ட கள்வனைப் போல் மெய் முழுதும் நடுநடுங்க நின்ற மாயவன்,

'தெரியாததைக் கேட்டுப் படிக்கச் சங்கர்தான் வரச் சொன்னவர், அதுதான் வந்தனான்' என்றபடி வீட்டினுள் நுழைய முற்பட்ட வேளை, எழுந்த கோபத்தில்,

'ஆரைக் கேட்டடா வீட்டுக்கை நுழைஞ்சனி? ... வெளிக்கிடடா வெளியிலை இப்ப படிப்புத்தேவைதானோ இதுக்கு இடம்கொடுத்தால் இனிக் கலியாணமும் பேசிக் கொண்டுவருவாய் நீ போடா போய் உன்ரை பரம்பரைத் தொழிலைப் பாரடா!

இப்படி ஆக்ரோஷமாய்ப் பேசிய நாளில் இருந்து எமக்கும் கறுப்பையா குடும்பத்துக்கும் இடையே இருந்த உறவுக் கயிறு அறுந்துவிட்டது.

★ ★ ★

நான் சொன்னபடியே இதுவரை என் வீட்டு முற்றம் மிதிக்காமல் பரீட்சைக்கும் படிப்புக்கும் முற்றுப்புள்ளி வைத்துவிட்டு, தகப்பனோடு சேர்ந்து கூலிவேலை செய்து கொண்டிருக்கும் மாயவன் இத்தனைக்கும் பிறகு அங்கு வருவானா எனச் சந்தேகிப்பதில் என்ன தவறு இருக்கிறது?

வழக்கமாக யாழ்ப்பாணத்தில் நடைபெறும் உயர்தர வகுப்புகளுக்கான 'ரியூசன் கிளாஸ்களை' முடித்துக் கொண்டு, இரவு ஏழு மணிக்குப்பின் வீடு திரும்பும் எனது ஒரே மகன் சங்கரும், அங்கு வந்திருப்பான் என நினைப்பதில் நியாயம் இருக்காது.

ஊரில் இருந்த இளஞ்சிட்டுகளும் பணமரம்தேடி வெளிநாடு பறந்தபின் அந்தரம், ஆபத்து என்று குளறினால் ஆர் இருக்கினை உதவிசெய்ய?

இந்த நேரத்தில் மனைவியும் பிள்ளையும் என்ன செய்வார்களோ என்றேங்கி உள்ளம் பதைபதைக்க, உடல் விறுவிறுக்கப் பரபரப்புடன் கேற் வாசலில் சைக்கிள் நிற்கு முதலே தாவிப்பாய்ந்துசென்றவர்—

கிணற்றைச் சுற்றி ஈபோல் மொய்த்திருக்கும் சனக்கூட்டத்தை முண்டியத்துக் கொண்டு போய்ப் பார்த்த போது மாயவனின் ஒருகை, தோளில் கொடிபோல் துவண்டுகிடந்த சரோஜாவைக் கெட்டியாகப் பிடித்திருக்க, மறுகை ஏணிச்சட்டத்தைப் பிடித்துக்கொண்டு நகர அவனது ஈரமான கால்கள் ஒவ்வொரு படியையும் பவ்வியமாக மிதித்துக் கொண்டு மேல்நோக்கி வருவது தெரிந்தது.

ஏணியைவிட்டு மேலே ஏறி வந்ததும் வராததுமாக, மாயவனையும் மகள் சரோஜாவையும் ஓடிச்சென்று நெஞ்சாரக் கட்டித்தழுவி முத்தமிட்டபடி,

'ஐயோ தெய்வமே! நமக்கு இப்படி ஒரு சோதனையா?

சஞ்சீவி சிறுகதை

எனத் தம் நெஞ்சு குலுங்கக் குழந்தையைப்போல் விக்கலெடுத்து அழத்தொடங்கி விட்டார்அருளம்பலமாஸ்ரர்.

அவர் கண்களினின்றும் நீர் அருவியாய் வழிந்து கொண்டிருந்தது.

திரண்டிருந்தோர் எல்லோரும் நினைப்பதைப்போல் அதுதன் மகள் சரோஜா உயிரோடு காப்பாற்றப்பட்டதற்காக வந்த ஆனந்தக்கண்ணீர் அல்ல.

இத்தனை உயர்ந்த குணமும் உள்ளத் தூய்மையும் இரக்க சிந்தையும்கொண்ட மாயவனை - படித்தவனான நானும் மற்றவர்களைப் போல் சாதி என்கிற போலிச் சமூகக் கௌரவத்திற்கு அடிமையாகி அன்று படிக்க வந்தவனுக்குப் படிப்பைச் சொல்லிக்கொடாமல் விரட்டிக் கலைத்து, அநியாயமாக அவனை ஒரு கூலிக்காரனாக்கிவிட்டேனே!

இத்தகைய சிறந்த பண்பாளனை, கண்ணியமானவனை, சமூக சேவையாளனைப் படிப்பித்திருந்தால், இந்த ஊர் மட்டுமல்ல இந்த உலகமே நன்மைபெற்றிருக்கும் என்பதை நினைத்தபோது வந்த இதயக்கீறலின் வெளிப்பாடுதான் அது.

(யாவும் கற்பனை)

## பொது அறிவுப்போட்டி இல. 40

1. உலகிலேயே ஒரே ஒரு இந்து நாடு எது ? .. ... ... இந்தியா / நேபாளம்
2. ''தான் கற்ற நூலளவேயாகுமாம் நுண்ணறிவு'' என்று பாடியவர் யார்...? ... ... ... ... ... ஔவையார் / திருவள்ளுவர்
3. உலகப் புகழ்பெற்ற அரசிகளில் இவரும் ஒருவர்...? ... ... ... ஜான்சிராணி / கிளியோப்பாட்ரா
4. தாக்குப் பிடிக்கமுடியாத படை எது...? ... ... விமானப்படை / மக்கள்படை
5. ஏழு குன்றுகளின் மீது அமைந்த நாடு எது...? ... ... ரோம் / சுவிஸ்சலண்ட்
6. மஞ்சள் கொடி எதனுடைய அடையாளச் சின்னம் ..? புரட்சி / தொற்றுநோய்
7. PIA எந்த நாட்டு விமான நிறுவனம்...? ... ... ... பாகிஸ்தான் / இந்தியா
8. பனித்துளியை உண்டு வாழும் பறவை எது...? வானம்பாடி / சக்கரவாகம்
9. கிரிக்கெட் எந்த நாட்டின் தேசிய விளையாட்டு...? அவுஸ்ரேலியா / இங்கிலாந்து
10. முஸோலினி எந்தநாட்டின் சர்வாதிகாரியாக இருந்தார்...? ... ... ... ... ... இத்தாலி / பிரான்ஸ்
11. மனிதமேம்பாட்டுக்கு உதவுவது எது...? ... ... ... விஞ்ஞானம் / சமயம்
12. ''பண்டிதமணி'' எனப் போற்றப்படுபவர் யார்...? ... ... ... சி. கணபதிப்பிள்ளை / பெரியதம்பிப்பிள்ளை

பெயர்:- ..........................................

விலாசம்:- ..........................................

..........................................

பொது அறிவுப்போட்டி இல: 40
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

——— இங்கே வெட்டுக ———

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர்கள் குலுக்கல்கள் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 30 - 05 - 1990 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

# மனச்சிதைவு நோய் ஏற்படுவது ஏன்?

உளநோயினால் பாதிக்கப்பட்டுள்ளவர்களில் பெரும்பாலோர் ஸ்கிசோபேர்னியா (Schizophrenia) எனும் மனநோயாளிகளேயாவர். மக்கள் தொகையில் ஒரு சதம் பேர் இந்நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

கிரெப்ளின் என்பவர் 1896 ஆம் ஆண்டு ஸ்கிசோபெரேனியா நோய்க்கு 'டிமென்சியா பிரேகாக்ஸ்' என்று பெயரிட்டார்.

இது பூப்பெய்தும் பருவத்தில் ஆரம்பமாகி, இறுதியில் மிக்க சீர்கேடான நிலையை அடைகிறது என அவர் கருதினார்.

ஆனால் இந்நோய் பூப்பெய்தும் காலத்திற்கு முன் அதற்குப் பின்பும் தோன்றக்கூடும் என்ற காரணத்தாலும் பலவகையான அறிகுறிகளைக் கொண்டுள்ளதாலும், இதனைப் புளூலர் என்பார் (1950) 'ஸ்கிசோபெரேனியா' என்றழைத்தார்.

இதற்கு மனச்சிதைவு, 'ஆளுமைச் சிதைவு' எனப் பொருளாகும்.

இந்நோய் குணமாகப் பல வருஷம் ஆவதாலும், மற்ற உளப் பிணியாளர்களைவிட இந்நோயாளிகளின் இறப்பு விகிதம் குறைவாக இருப்பதாலும், மருத்துவமனைகளில் உளநோயாளிகளாக உள்ளோரில் அதிகமானவர்கள் இவர்களே.

### அறிகுறிகள்

உளச்செயலில் இணைபற்ற தன்மை, மனவெழுச்சியின்மை, எண்ணச் சீர்கேடு, சமூகத்தோடு ஒட்டிவாழும் தன்மை இல்லாமை, திரிபுணர்ச்சி, இல்பொருள் உணர்வு, சிறுபிள்ளைத்தனமான நடத்தை ஆகியவை இந்நோயின் அறிகுறிகளாகும்.

மனவெழுச்சியற்ற தன்மையின் காரணமாக இவர்களுக்கு காதல், இரக்கம், அன்பு, மென்மையான உணர்வுகள் இருப்பதில்லை. குடும்பத்தில்ஏற்படும் இன்ப-துன்ப நிகழ்ச்சிகள் இவர்களை பாதிப்பதில்லை.

ஆர்வமின்மையால் யாதொரு தூண்டுதலுமின்றி வெறித்து நோக்கிய வண்ணம் இருப்பர். தனது ஆடை சுத்தம், அடிப்படை ஊக்கங்களுக்குத் தேவையானவற்றைக் கூட இவர்கள் கவனிப்பதில்லை.

பிறரோடு பேசாமல், பழகாமல், தனித்து வாழவே விரும்புவர்.

முரண்பாடான மனவெழுச்சிகளை வெளிக்காட்டும் இவர்கள், எவ்வித காரணமுமின்றி சிரிப்பதும், சினமுறுவதும், அலறிப்புடைப்பதும், பிறரை அடிப்பதும் வாடிக்கையான செயலாகும்.

பிறர் இவர்கள் மீது கொள்ளும் இரக்கத்தை இவர்களால் புரிந்துகொள்ள முடியாது.

தனது குழந்தையைக் கொன்றுவிட்ட தாய், தனது அன்பான குழந்தையைக் கொன்றுவிட்டதற்காக வருந்தும் அதே நேரம், தனக்கு பிடிக்காத கணவனின் குழந்தை என்று கூறி மகிழ்வாள்.

இவ்வாறான இரட்டைநிலை மனவெழுச்சி வெளிப்பாட்டை இவர்களிடம் காணலாம்.

### நான்கு வகை

இந்நோயைப் பொதுவாக நான்கு வகையாகப் பிரிக்கலாம்.

சாதாரண வகை,

ஹெபிபிரனிக் வகை, (குழந்தைத்தனமும், மடமையும் கொண்டவகை),

காட்டடோனிக் வகை (உணர்ச்சியற்ற, புதுமையான வகைகளில் உடல் உறுப்புகளை வைத்துக்கொள்வது போன்ற அறிகுறிகளையுடைய வகை),

பரனோயா வகை (எண்ணக்கோளாறுகள், சந்தேகம் ஆகிய அறிகுறிகள் நிறைந்த

**உளவியல்**

வகை) என்பனவாகும்.

### சிகிச்சை முறைகள்

ஒரு சிலரை வீட்டில்வைத்து சிகிச்சை அளிக்க முடியும்.

சிலரை மருத்துவமனையில் சேர்த்தே சிகிச்சை அளிக்க முடியும்.

இந்நோய்க்கு பலவகையான சிகிச்சை முறைகள் உள்ளன.

மின்தூண்டல் மூலமான அதிர்ச்சியை உண்டுபண்ணி சிகிச்சையளிக்கலாம்.

மருந்துகள் மூலமும், உளச்சிகிச்சை மூலமும், தொழில் சார்ந்த சிகிச்சை தற்சமயம் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

சில வகை நோயாளிகள் மருத்துவமனையில் சேர்ந்து ஒன்றிரண்டு ஆண்டுகளில் எவ்விதமான சிறப்பான சிகிச்சையுமின்றியும் குணமடைகின்றனர்.

நீண்டகால சிகிச்சையின் மூலம் இம்மனநோயாளிகளைக் கட்டுக்குள் வைக்க முடியும். ★

# காளமேகப் புலவரின் அகம்பாவக் கவிதை!

● காளமேகம் போன்ற உயர்ந்த கவிஞனுக்கு அகம்பாவம் இருந்ததில் வியப்பேதுமில்லை.

அப்படியானதோர் அகம்பாவம் கொள்ள அவன் தகுதி உள்ளவன்.

அந்த அகம்பாவம் அனுமதிக்கத்தக்கது.

அதற்குப் பின்னணிஉண்டு; பொருள் உண்டு.

'கவிஞரே, அரசர்' இன்று அவைக்கு வருவாரா? யாரோ ஒருவர் காளமேகத்திடம் கேட்கிறார்.

'வருவர்', இது காளமேகத்தின் பதில்.

'அரசியும் வருவாளோ?

'வருவள்.'

'அமைச்சர் இவ்வழியாகப்

**இலக்கியம்**

போனாரா?'

'போனர்.'

'என்ன கவிஞரே! கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் இலக்கணப் பிழையுடன், 'வருவர்', 'வருவள்', 'போனர்' என்று கூறுகிறீர்களே, இது உங்களுக்கு அழகா? வருவார், வருவாள், போனார் என்றல்லவா கூறி இருக்கவேண்டும்?' என்று அவர் கேட்கிறார்.

கேட்டவரைக் கவி காளமேகம் அலட்சியமாக நோக்குகிறார்.

'உனக்கு என்னய்யா தெரியும்? என்பதான பார்வை.

கேட்டவர் கவியிடம் பதிலுக்காகக் காத்திருக்கிறார்.

'உனக்குக் கம்பனைத் தெரியுமா? காளமேகம் கேட்கிறார்.

'தெரியும். தமிழில் இராமாயணம் பாடியவர்.'

'அந்தக் கம்பனே தன் இராம காவியத்தில் பாடல் ஒன்றில் 'நாராயணன்' என்று சொல்வதற்குப் பதிலாக 'நராயணன்' எனக் குறிப்பிடுகிறான்.'

'அப்படியா?'

'ஆமாம். அந்நக் கம்பன் இலக்கண வழுவுடன் பாடல் எழுதியபோது, நான் ஏன், 'வருவர்', 'வருவள்', 'போனர்' எனச் சொல்லக் கூடாது?'

இது கவி காளமேகத்தின் பாடல்,

'நாராயணனை நராயணன்
என்றே கம்பன்,
ஓராமல் சொன்ன உறுதி
யால் நேராக,
வார் என்றால் வர் என்
பேன்,
வாள் என்றால் வள் என்
பேன்,
நார் என்றால் நர் என்
பேன் நான்.'

(ஓராமல்: ஆராயாமல்)

★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 500 கோடி ரூபாவுக்கு ஏலம் போன கார்!

உலகிலேயே மிக விலை உயர்ந்த கார் 'புஹார்ட்டி ரோயல்' என்ற ரக கார் ஆகும்.

3 தொன் எடையுள்ள இந்த ஆடம்பரக் கார் 1931 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்டது.

இதே போன்ற ஆறு கார்கள் மட்டுமே இன்று உலகில் உள்ளன.

இதில் ஒரு கார் கடந்த வாரம் லண்டனில் ஏலத்தில் விடப்பட்டது.

ஜப்பானைச் சேர்ந்த வர்த்தகர் குழு ஒன்று இக்காரை 50 கோடி ரூபாவுக்கு ஏலத்தில் வாங்கியது.

உலகிலேயே அதிக விலைக்கு ஏலம் போன கார் இதுவே.

இந்தக் கார் தயாரிக்கப்பட்டபோது அதன் விலை ஆக 4 லட்சம் ரூபா தான்.

இதனைக் கடைசியாக சுவீடன் நாட்டு வர்த்தகர் ஒருவர் வைத்திருந்தார். ★

## அற்பமான பொருள் எது?

ஒரு புலவரை நோக்கி அரசன் கேட்டான்.

'பஞ்சு, துரும்பு இவற்றை விட அற்பமான ஒன்று உண்டா?

'உண்டு மன்னவா!' —என்றார் புலவர்.

'என்ன அது?'—

'யாசிப்பது!'

'என்ன யாசிப்பதா? அப்படியானால் யாசிப்பது யாசகனே! அவனா அற்பமானவன்?'

'ஆம்'

'புலவரே யாசகன் மிக அற்பமானவன் என்றால், அவன் ஏன் பஞ்சுபோலவோ, துரும்புபோலவோ காற்றில் பறப்பதில்லை?'

'மன்னா! யாசகனை நெருங்கினால், அவன் நம்மிடமும் ஏதாவது யாசித்து விடுவானோ என்று காற்று அவனைக் கண்டு ஒதுங்கிப் போய்விடுகிறது... அதனால் தான்' — என்றார் புலவர் ★

## வானிலை கொம்பியூட்டர்

மழை பெய்யுமா? சூறாவளி வீசுமா?

இவற்றை ஏழுதினங்களுக்கு முன்னரே மிகவும் துல்லியமாகத் தெரிவிக்கும் சக்தி வாய்ந்த புதிய கொம்பியூட்டர் ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்கத் தேசிய வானிலையம் வாங்கியுள்ள இதன் பெயர் 'கிரே வை.எம் பி-8'– ஆகும்.

இந்தக் கொம்பியூட்டரின் விலை 85 கோடி ரூபாவாகும். ★

## 'சோர்வை'க் காட்டும் நவீன கடிகாரம்!

ஜப்பானில் ஒரு நூதன கைக்கடிகாரம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

உடலில் ஏற்படும் சோர்வின் அளவை இந்தக் கைக்கடிகாரம் காட்டும்.

உடல் தசைகளுக்கு பிராண வாயு தடைப்படுவதால் சோர்வு ஏற்படுகிறது.

இதை, கைக்கடிகாரம் கட்டியிருப்பவர் உணர்ந்து உஷாராகி விடமுடியும்.

வாகனங்களை ஓட்டுபவர்களுக்கு இது மிகவும் பயன்படும் என்று ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். ★

## பறக்கும் தட்டு கண்காட்சி!

விண்வெளியில் தெரியும் பறக்கும் தட்டுகள் பற்றிச் சோவியத் தலைநகர் மாஸ்கோவில் ஒரு கண்காட்சி அண்மையில் நடந்தது.

முன்பு கிடைக்கப்பெற்ற பறக்கும் தட்டுகள் சில அக் கண்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

இப்போது விண்வெளியில் 'மிர்' விண்கலத்தில் இருந்து ஆராய்ச்சிகள் நடத்தும் ரஷ்ய விஞ்ஞானிகள் வானொலி மூலம் அக் கண்காட்சியில் இருந்தவர்களுடன் பேசினர்.

இனங்காண முடியாத வகையில் பறக்கும் பொருள்கள் விண்வெளியில் தெரிவதாக 'மிர்' விஞ்ஞானிகள் அப்போது தெரிவித்தனர். ★

பஞ்சாமிர்தம் [illegible]

# தொலைபேசித்துறையில் ஒரு புரட்சி!

தொலைபேசிகள் ஒழுங்காக வேலைசெய்வது இல்லை என்று குறைப்பட்டுக்கொண்டாலும் அவற்றின் பயனைக் குறைத்து மதிப்பிடுவதற்கு இல்லை.

மேலைநாடுகளில் தொலைபேசித்துறையில் பல புதிய வசதிகளைப் புகுத்தியிருக்கிறார்கள்.

பேஜிங் (Paging) என்பது அவற்றில் ஒன்று.

தொலைபேசியின் அருகில் இல்லாதவரையும் அழைப்பதற்கான ஏற்பாடு இது.

தொலைபேசி வசதியுள்ள ஒரு நண்பரை உடனே தொடர்புகொள்ள விரும்புகிறீர்கள்.

தொலைபேசியில் அவரை அழைக்கிறீர்கள். மணி அடித்துக்கொண்டே இருக்கிறது. மறுமுனையில் பதில் இல்லை.

கவலைப்பட வேண்டாம். தொலைபேசியில் ஒரு தனிப் பொத்தானை அமுக்கி, அந்த நண்பருக்குக் கொடுக்கப்பட்டுள்ள 'பேஜிங்' எண்ணையும் அதன்பிறகு உங்கள் எண்ணையும் இயக்கினால் போதும்.

அவர் எங்கிருந்தாலும் சட்டைப்பையில் அவர் வைத்துக்கொண்டுள்ள தீப்பெட்டி அளவிலான சிறு கருவியில் மெலிதான ஒலி எழும்பும்.

அழைக்கும் எண்ணும் அதில் பதிவாகி விடும். நண்பர் உடனே அருகில் உள்ள தொலைபேசிக்குச் சென்று உங்களைத் தொடர்புகொள்வார்.

இந்தச் சிறு கருவி வைத்திருப்பவர்களுக்குத் தனி எண்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

கைக் கடிகாரத்துடன் பொருந்தியதாக புதிய (Paging) பேஜிங் கருவி வடிவமைக்கப்பட்டுள்ளது.

விரைவிலேயே இந்தமுறை அமெரிக்காவிலும் வேறு சில நாடுகளிலும் அறிமுகமாகப் போகிறது.

'ரேடியோ பேஜிங்' என்ற இந்தமுறை நகரங்களுக்குள் மட்டும் இயங்கவல்லது என்பதனால் விஞ்ஞானிகள் 'ஸ்கை பேஜிங்' (Sky Paging) என்ற முறையை உருவாக்கினர்.

விண்கோளுடன் இயங்கும் இந்த முறையில் நாடெங்கிலும் உள்ளவர்களுடன் அரை நிமிஷ நேரத்தில் தொடர்புகொள்ள முடியும்.

இந்தமுறையில் அழைப்புக் குரல் கொடுப்பது மட்டுமல்லாமல், சொல்லவேண்டிய செய்தியை அப்படியே பதிவு செய்துவிடலாம்.

இதற்கு 'ஸ்கை ரோக்' (Sky-Talk) என்று பெயர்.

இந்த பேஜிங் முறையில் எப்போது வேண்டுமானாலும் எவரையும் அரைநிமிடப்பொழுதில் அழைத்துவிடலாம். ★

# எய்ட்ஸ் நோய்க்கு மூலிகை மருந்து

மனித இனத்துக்கு சவால் விடும் எய்ட்ஸ் நோயைக் குணப்படுத்துவதற்கான மருந்துகளைக் கண்டுபிடிப்பதில் உலகம் முழுவதும் உள்ள விஞ்ஞானிகள் தீவிரமாக ஈடுபட்டு இருப்பது தெரிந்தே.

இப்போது மரபு வழியிலான மூலிகை மருந்துகள் மூலம் இந்த நோயைக் குணப்படுத்தலாமா என்பது குறித்தும் ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன.

பல்வேறு செடிகள் மற்றும் மூலிகைகள் இதற்குப் பயன்படுமா என்பது குறித்து சீனா, ஜப்பான், அமெரிக்கா உள்பட பல நாடுகளில் விஞ்ஞானிகள் ஆராய்ந்து வருகின்றனர்.

சீனாவில் இப்படி நாட்டு மருந்துகளுக்கு பயன்படுத்தப்படும் 27 மூலிகைகளில் 11 இல் எய்ட்ஸ் நோய்க் கிருமியை அழிக்கும் சக்தி இருப்பது பரிசோதனையில் தெரிய வந்தது.

அமெரிக்காவில் தேசிய புற்றுநோய்க் கழகங்கள் ஒவ்வொரு ஆண்டும் 4 ஆயிரத்து 500க்கு மேற்பட்ட மூலிகைகள் பற்றிப் பரிசோதனை நடத்துவதில் தீவிரமாக ஈடுபட்டு உள்ளன. ★

## மழைக் கடவுள் இரங்க என்ன செய்ய வேண்டும்?

செயற்கை மழைத் திட்டத்தை தமிழக அரசு கைவிட்டுவிட்டது.

வரட்சிகாலத்தில் மழை பொழியவைக்க இத்திட்டத்தை அரசு கொண்டு வந்தது.



கருணாநிதி

செயற்கை மழைத்திட்டம் தோல்வி அடைந்த காரணத்திற்காகவே அது கைவிடப்படுவதாக முதலமைச்சர் கருணாநிதி சட்டசபையில் அறிவித்தார்.

அப்போது சுவையான வாக்குவாதங்கள் எழுந்தன.

ஒரு கட்டத்தில்...

தி. மு. க. எம். எல். ஏ. பரித் இளம் வழுதி: கழுத்தளவு நீரில் நின்று வழிபட்டால் மழைக்கடவுள் இரங்குவார் என்று கூறப்படுகிறதே!

கலைஞர்: நீங்களே அதனைச் செய்து பார்த்துச் சொல்லுங்கள்.

''ஏன் அந்தப் பரிசோதனையை கூவம் ஆற்றில் வைக்கக்கூடாதா?— கேட்டார் சபாநாயகர் தமிழ்க்குடிமகன்.

(கூவம் ஆறு அசுத்தமானது என்பது தெரிந்ததே!)

கலைஞர்: வயலின் வித்வான் குன்னக்குடி வைத்தியநாதன் கழுத்தளவு நீரில் நின்று வயலின் வாசித்தும் மழைக்கடவுள் இரங்கவில்லையே! ★

## சாக்கடை நீரைச் சுத்தம் செய்ய நவீன வழி!

சாக்கடை நீரைக் குறைந்த செலவில் சுத்தப் படுத்தித் தரமான தண்ணீராக மாற்றுவதற்குப் புதுமையான திட்டம் ஒன்றை அமெரிக்க வேளாண்மைத் துறையைச் சேர்ந்த பொறியியல் வல்லுனர்கள் உருவாக்கியுள்ளனர்.

சாக்கடை நீரில் உள்ள, கேடு விளைவிக்கும் கழிவுப் பொருள்களை வடிகட்டி அகற்றுவதற்கு நுண்ணுயிரிகள் (பாக்டீரியாக்கள்) பயன்படுத்தப்படுகின்றன.

இவ்வாறு சுத்தம் செய்யப்பட்ட நீரில் தாவரங்களை வளர்க்கிறார்கள். இதனால் அந்த நீர் மேலும் தூய்மை அடைகிறது.

இந்த நவீன முறையின் கீழ் வேறு சில துணைப் பயன்களும் ஏற்படுகின்றன.

அன்றியும் இந்த நீரில் வளர்க்கப்படும் செடிகளைத் தோட்டங்களுக்கான நாற்றுகளாகப் பயன்படுத்தலாம்.

மண்ணில் விளையும் தாவரங்களைக் காட்டிலும், சத்து நிறைந்த கழிவு நீரில் வளரும் செடிகள், இவ்வாறு நாற்றுகளாகப் பயன்படுத்த உகந்தவை ஆகும். தவிரவும், மூலிகைகள் கூட இவ்வாறு பயிரிடப்படலாம். ★

## 'கிளிப்'புக்கு ஒரு விழா!

மறைந்த தலைவர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும் சிலை எடுத்து நினைவு விழா நடத்துவதுதான் உலக வழக்கம்.

நோர்வே நாட்டில் வித்தியாசமான முறையில் நினைவு விழா ஒன்று நடத்தப்பட்டுள்ளது.

நாம் சாதாரணமாக உபயோகிக்கும் பேப்பர் கிளிப் இருக்கிறதே, அது கண்டுபிடிக்கப்பட்ட 90 ஆவது ஆண்டை ஒரு விழாவை நோர்வே தலைநகர் ஒஸ்லோவில் கொண்டாடியிருக்கிறார்கள்.

ஏறக்குறைய 20 அடி உயர கிளிப் ஒன்றைச் செய்து அதனை நகரின் மத்தியில் மக்களின் பார்வைக்காக அரசு நிறுத்தி வைத்துள்ளது. ★

## தத்துவஞானியை மடக்கிய முல்லா நஸாருதீன்!

தத்துவ ஞானி ஒருவரோடு ஏதோ ஒரு பொருள் பற்றி வாக்குவாதம் புரிய முல்லா நஸ்ருதீன் ஒப்புக்கொண்டார்.

தர்க்கத்துக்குக் குறித்த நாள், குறித்த நேரத்தில் தத்துவஞானி முல்லாவின் வீட்டுக்கு வந்தார்.

ஆனால் முல்லா வீட்டில் இல்லை.

நெடுநேரம் முல்லாவின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்தார் தத்துவஞானி.

ஆனால் முல்லா வேண்டுமென்றே எங்கேயோ போய் மறைந்துகொண்டார்.

தாங்கமுடியாத கோபம் கொண்ட தத்துவஞானி, ஒரு சுண்ணாம்புக் கட்டியை எடுத்து முல்லாவின் வீட்டுக் கதவில் 'முட்டாள் கழுதை' என்று எழுதிவிட்டுப் போய் விட்டார்.

சற்று நேரம் கழித்து வீட்டுக்குத் திரும்பிய முல்லா, வாசற்கதவில் எழுதப்பட்டதைப் படித்தார். தம்மோடு வாக்குவாதம் புரியவிருந்த தத்துவஞானிதான் அதை எழுதியிருக்க வேண்டுமென்று ஊகித்து உணர்ந்தார்.

பின்னர் முல்லா, தத்துவ ஞானியின் வீட்டுக்கு நேராகச் சென்றார்.

அங்கே அவரிடம், 'தத்துவ மேதையே தாங்கள் என்னை மன்னிக்க வேண்டும். உங்களோடு இன்று நான் வாக்குவாதம் புரிவதற்கு ஒப்புக்கொண்டதை மறந்து விட்டுக் கடை வீதிக்குப் போய் விட்டேன். அதற்காக என்னை மன்னித்து விடுங்கள்!

'வெளியே சென்றுவிட்டு வீடு திரும்பியதும், தாங்கள் வந்ததைத் தெரிவிக்கும்வகையில் வாசற்கதவில் தங்கள் பெயரை எழுதியிருந்தீர்களே. அதைக் கண்டேன். அப்போதுதான் தங்கள் நினைவு வந்தது. உடனே உங்களிடம் மன்னிப்புக் கேட்பதற்காக ஓடோடி வந்தேன்' என்று அடக்கத்தோடு பேசினார் முல்லா.

தத்துவ ஞானியோ எதிர்த்தேதும் பேசாமல் சிலையாகத் திகைத்து நின்றார். ★

## விழிப்புலனற்றவர் சிறந்த ஆசிரியர்!

இந்தியாவில் பாரதிய வித்யாபவன் சிறந்த ஆசிரியருக்கு ஆண்டுதோறும் விருது வழங்கிவருகின்றது.

சென்ற ஆண்டும் ஆசிரியராகச் சிறந்த சேவையாற்றியவர்களை தெரிவுசெய்து விருதுகளை இந்த அமைப்பு வழங்கி கௌரவித்துள்ளது.

இந்தியாவிலேயே மிகச் சிறந்த ஆசிரியராக விழிப்புலனற்ற ஒருவரை பாரதிய வித்யாபவன் இம்முறை தெரிவு செய்துள்ளது.

அவரின் பெயர் ஆனந்தி சந்திரா முக்கர்ஜி.

அவருக்கு இந்தியப் பணத்தில் 25 ஆயிரம் ரூபா பரிசும் ஒரு சான்றிதழும் வழங்கப்பட்டது.

சிறந்த ஆரம்பப்பள்ளி ஆசிரியருக்கான விருது பம்பாய் அக்ரிபாத செவிப்புலனற்ற பாடசாலையைச் சேர்ந்த ஆசிரியை திருமதி [illegible] வருக்கு வழங்கப்பட்டது. ★

## பிளாஸ்டிக் பிறந்த கதை!

காய்கறிகள், மிருகங்களின் கொழுப்பு போன்ற பொருள்களிலிருந்து இயற்கைவகை 'பிளாஸ்டிக்ஸ்' தயாரிக்கும் முறை அமெரிக்காவில் 1845 இல் தொடங்கியது.

1869 இல் நியூயார்க் மாநில அச்சக அதிபர் ஜான் ஹயாட் 'செல்லுலோய்டு' வகையைக் கண்டுபிடித்தார்.

செயற்கை 'பிளாஸ்டிக்ஸ்' தயாரிப்பில் அது ஒரு முன்னோடி.

சீப்புகள், கடிகாரக்கூண்டுகள், செயற்கை பல்புகள் முதல் புகைப்பட பிலிம்கள் வரை பல பொருள்களைத் தயாரிக்க செல்லுலோய்டு பயன்பட்டாலும், அதன் மூலம் பொருட்களை வடிவமைப்பது சிரமமாக இருந்தது.

அது எளிதில் தீப்பிடிக்கக் கூடியதால் ஆபத்தானதாகவும் கருதப்பட்டது.

அடுத்த சில ஆண்டுகளில் மார்பாலிக் அமிலமும் ஃபார்மால்டிஹைடு என்ற திரவமும் கலந்த 'ரெசின்' என்ற இரசாயனக் கலவையை ஆங்கிலேய-அமெரிக்க விஞ்ஞானிகள் கூட்டாகத் தயாரித்தனர்.

பிளாஸ்டிக்ஸ் வரலாற்றில் இது ஒரு திருப்புமுனை.

1909இல் 'ரெசின்' தயாரிப்பை ஆபத்தில்லாததாக மாற்றினார் அமெரிக்க விஞ்ஞானி லியோ பேக்லண்ட்.

அதுவே 'பேக்லைட்'என்று பெயர்பெற்ற செயற்கை 'பிளாஸ்டிக்ஸ்' மூலப்பொருள்.

1920-30 களில் பிளாஸ்டிக்ஸ்' ஒரு இரசாயனத் தொழிலாகவே வளர்ந்து வந்தது.

இரண்டாம் உலகப்போரில் சில உலோக மூலப்பொருள்களுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டவுடன் 'பிளாஸ்டிக்ஸ்' தொழில்துறையின் பிற களங்களில் அறிமுகமாகியது.

'பிளாஸ்டிக்ஸ்' பரவலாகப் பல துறைகளில் புழக்கத்துக்கு வந்தது. 1950-60 களில் தான்.

உயர் அழுத்த வகை 'பிளாஸ்டிக்ஸ்' 1960 க்குப் பிறகுதான் கண்டுபிடிக்கப்பட்டது.

அதன்பிறகே 'பிளாஸ்டிக்ஸ்' தொழிலகங்களில் இடம் பெறலாயிற்று. ★

## 'ஆயுர்வேத' பீடி!

புகைப்பிரியர்களுக்கு ஒரு செய்தி!

ஆயுர்வேத பீடி ஒன்றை சோலாப்பூர் டாக்டர் ஒருவர் தயாரித்திருக்கிறார்.

புகையிலைக்குப் பதிலாகப் பத்து மூலிகைகளைக் கொண்டு இந்த பீடி தயாரிக்கப்பட்டுள்ளது.

அந்த டாக்டரின் பெயர் எம். வி. பாட்கே.

இந்த பீடி, புகைப்பவர்களின் உடல் நிலையைச் சரியாக வைத்துக் கொள்ள உதவுவதுடன், ஏனைய பீடிகளைப் புகைத்ததனால் உடலில் தங்கியுள்ள நிகோடின் என்ற விஷப்பொருளின் கடுமையையும் அகற்றுகிறது என்று அந்த டாக்டர் கூறுகிறார். ★

## 'தங்க' விடுமுறை!

ஜப்பான் நாட்டில் ஆண்டுதோறும் ஏப்ரல் மாத இறுதியில் 'கோல்டன் வீக்' என்ற விடுமுறை அனைத்துத் துறையினருக்கும் விடப்படுகிறது.

இந்த 9 நாள் விடுமுறைக் காலம் கடந்த ஆறாம் திகதியோடு முடிவடைந்தது.

இந்த விடுமுறை நாட்களில் 334 பேர் உயிரிழந்தனர். மூன்றுபேரைக் காணவில்லை.

சாலை விபத்துக்களில் 307 பேரும், நீரில் மூழ்கி 12 பேரும், 'அல்ப்ஸ்' மலையில் ஏறும் முயற்சியில் 12 பேரும் இறந்தனர். ★

## மெல்லிய ஆடை அணிந்தால் கடுமையான தண்டனை!

ஈரானின் மெல்லிய ஆடைகளை அணிந்து திரியும் பெண்களுக்குக் கடுமையான தண்டனை வழங்கும் சட்டம் பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வாறு அணிவது இஸ்லாமிய கோட்பாடுகளுக்கு எதிரானது என்று அரசு அறிவித்து உள்ளது.

மெல்லிய ஆடை, மேக்கப் ஆகியவற்றுடன் பொது இடங்களில் காட்சியளிக்கும் பெண்களைக் கைது செய்ய இராணுவத்துக்கு உத்தரவு பிறப்பிக்கப்படுகிறது. ★




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு - 5
## புலமைப் பரிசில் பரீட்சை
### மாதிரி வினாத்தாள்
# கணிதம்

பாடம் பயில்வோம்

தொகுப்பு:
செல்வி.
-எஸ். எஸ். ஐயர்-

### பகுதி (I)

இலக்கம் 1 முதல் 9 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன, அவற்றுள் மிகச்சரியான விடையைத் தெரிவுசெய்து அதன் கீழ்க்கோடிடுக.

1. ஆண்டு 5 இல் கற்கும் ஒரு பிள்ளையின் முழங்கையிலிருந்து நடுவிரல் வரை நீளம் கிட்டிய மீற்றரில்
   1. 1 ஆகும் 2. $\frac{1}{2}$ ஆகும் 3. $\frac{3}{4}$ ஆகும் 4. $\frac{1}{4}$ ஆகும்.
2. கூம்பு ஒன்றின் விளிம்புகளின் எண்ணிக்கை,
   1. 0 2. 1 3. 2 3. 4
3. 99 ஐ உரோமன் இலக்கங்களில் சரியாக எழுதும் முறை,
   1. LXXXXIX 2. XCIX 3. IXIX 4. IXXC
4. $0.75 + \frac{1}{4}$ என்பதைச் சுருக்கினால் விடை,
   1. 0.79 2. $0.75\frac{1}{4}$ 3. 0.119 4. 1
5. ஐந்து ரூபாவை 5 நாணயங்களில் சில்லறையாக கொடுக்கக்கூடிய சரியான விதம்,
   1. 2 ரூபா, 1 ரூபா, 50 சதம் 50 சதம், 50 சதம், 50 சதம்.
   2. 1 ரூபா, 1 ரூபா, 1 ரூபா, 50 சதம், 25 சதம், 25 சதம்.
   3. 2 ரூபா, 2 ரூபா, 25 சதம், 25 சதம், 25 சதம், 25 சதம்.
   4. 2 ரூபா, 1 ரூபா, 1 ரூபா, 50 சதம், 50 சதம்.
6. வடக்கிற்கும், மேற்கிற்கும் இடையே சரிநடுவில் அமைந்துள்ள திசைக்கு எதிர்த்திசை,
   1. வடமேற்கு 2. தென்கிழக்கு 3. தென்மேற்கு 4. வடகிழக்கு
7. இவ்வுருவில் இருந்து பெறக்கூடிய முக்கோணிகளின் மிகக்கூடிய எண்ணிக்கை,
   1. 4 2. 6 3. 8 4 10
8. குறித்த ஒரு வேலையைச் செய்துமுடிப்பதற்கு சுதாவிற்கு $\frac{3}{4}$ மணித்தியாலமும், சுபாவிற்கு 45 நிமிடமும் எடுக்கின்றது. இதற்கேற்ப பின்வரும் கூற்றுக்களுள் சரியான கூற்று எது?
   1. மிகக்கூடிய நேரத்தை எடுப்பவர் சுதா ஆவார்.
   2. மிகக்கூடிய நேரத்தை எடுப்பவர் சுபா ஆவார்.
   3. மிகக் குறைந்த நேரத்தை எடுப்பவர் சுதா ஆவார்.
   4. சுதா, சுபா ஆகிய இருவருக்கும் சமநேரம் எடுக்கும்.
9. குறித்த ஓர் தொழிற்சாலையில் 2 நாட்களில் உற்பத்திசெய்யப்பட்ட சீமெந்துப் பக்கெற்றுக்களின் எண்ணிக்கையை கீழே உள்ள படவரைவு காட்டுகிறது.

| | |
|---|---|
| வியாழன் | ● ● ● ● ● ● ● ● ● ● ● |
| வெள்ளி | ● ● ● ● ● ● ● ● ● ● ◖ |

வியாழக்கிழமை உற்பத்திசெய்யப்பட்ட சீமெந்து பக்கெற்றுகளின் எண்ணிக்கை 1650 எனின், வெள்ளிக்கிழமை உற்பத்திசெய்யப்பட்ட சீமெந்து பக்கெற்றுகளின் எண்ணிக்கை,
1. $10\frac{1}{2}$ ஆகும் 2. 1050 ஆகும் 3. 1575 ஆகும் 4. 825 ஆகும்

### பகுதி (II)

இலக்கம் 10 முதல் 24 வரையுள்ள வினாக்களுக்கான விடைகளை அவற்றுக்கு உரிய வெற்றிடங்களில் எழுதுங்கள்.

(10) 5367 + 939 + 4785 = ______ (11) 9010 − 457 = ______ (12) 2304 X 5 = ______ (13) 8004 ÷ 4 = ______

(14) 605 — 985 + 874 (15) $3\frac{3}{7} + 5\frac{5}{7}$ (16) $5\frac{1}{8} - \frac{3}{8}$

(17) $5\frac{3}{7} - 2\frac{2}{3} + 1\frac{4}{7}$

18. வெற்றுக் கூட்டினுள் இடவேண்டிய பொருத்தமான எண்ணைப் புள்ளிக்கோட்டின்மீது எழுதுங்கள். 907 — □ = 898 ............
19. வெற்றுக்கூட்டினுள் இடவேண்டிய பொருத்தமான எண்ணைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுங்கள் 48 X □ = 8 X 3 ............
20. தொண்ணூறாயிரத்துஒன்பதினாயிரத்துஒன்பதுஎன்பதை இலக்கங்களில் எழுதுங்கள்.
21. இவ்வெண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுங்கள்.
    6.5, 5.6, 6.3, 3.6 ..... .....
22. < எனும் குறியீட்டைப் பயன்படுத்திக் கீழ்வரும் மூன்று எண்களையும் சரியாக ஒழுங்குபடுத்தி எழுதுங்கள்.
    28, 82, 18 ............
23. ஒன்று ரூபா 4.25 விதம் 15 பேனைகளின் விலை யாது? ............
24. ஞாயிற்றுக்கிழமை பி.ப 6.30 இலிருந்து, அடுத்தநாள் திங்கட்கிழமை மு.ப 9.45 வரை உள்ள காலம் எவ்வளவு? ............

### பகுதி (III)

இலக்கம் 25 முதல் 34 வரை உள்ள வினாக்களுக்கான விடைகளை அவ்வினாக்களுக்கு எதிரேயுள்ள புள்ளிக்கோட்டின்மீது எழுதுங்கள்.

25. 2 வாரம் 5 நாள் 8 மணித்தியாலங்களை மணித்தியாலங்களிற் குறிப்பிடுங்கள் ............
26. 500555 C.m ஐ கிலோமீற்றர், மீற்றர், சென்ரி மீற்றர் ஆகியவற்றில் காட்டுங்கள் ............
27. 7.3 கிலோகிராமை கிராமில் காட்டுக? ............
28. 1 லீற்றர் நிறத்தீந்தையின் விலை 120 ரூபா 40 சதம் எனின், 250 மில்லி லீற்றரின் விலை யாது? ............
29. 1 கிலோகிராம் உருளைக்கிழங்கு 28 ரூபா விதம் 350g உருளைக்கிழங்கின் விலை யாது? ............
30. 4.25 மீற்றர் நாடாவை 25 சென்ரி மீற்றர் துண்டுகளாக எத்தனை துண்டுகள் வெட்டலாம்? ..... .....
31. செவ்வக வடிவ காணி ஒன்றின் நீளம் அதன் அகலத்திலும் 3 மடங்கு ஆகும். நீளம் 45 மீற்றர் எனின், அதன் சுற்றளவு யாது? ..... .....
32. சதுரமொன்றின் பரப்பளவு 144 சதுர சென்ரி மீற்றர் எனின், அதன் ஒரு பக்க நீளம் யாது? ... ... ..
33. இக்கோலத்தில் வெற்றுக்கூட்டினுள் வரவேண்டிய பொருத்தமான எண் யாது?
    1, 3, 9, 27, □, 243.
34. இக்கோலத்தில் வெற்றுக் கூட்டினுள் வரவேண்டிய பொருத்தமான எண் யாது?

3 → 7 → 15 → 31 → 63 → 127 → □

### பகுதி (IV)

இலக்கம் 35 முதல் 39 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றினதும் விடைகளை அவற்றுக்குரிய வெற்றிடங்களில் எழுதுங்கள்.

35. ஒரு குவியலில் 650 தேங்காய்கள் உள்ளன. இரண்டாவது குவியலில் அதனிலும் 325 தேங்காய்கள் கூடுதலாக உள்ளன. மூன்றாவது குவியலில் இரண்டாவது குவியலிலும் 125 தேங்காய்கள் குறைவாக உள்ளன. மூன்று குவியல்களிலும் எத்தனை தேங்காய்கள் உள்ளன? ............
36. மூன்று பெட்டிகளில் அடுக்கப்பட்டுள்ள குளிர்பானப் போத்தல்களின் எண்ணிக்கைகள் முறையே 75, 125, 175 ஆகும். அவை, ஒவ்வொரு நிரையிலும் 25 போத்தல்கள் விதம் நிரைகளில் அடுக்கிவைக்கப்பட்டன. அந்நிரைகளின் எண்ணிக்கையைக் காணுங்கள்?
37. மோகனிடம் 15 பத்து ரூபா நாணயங்கள் உள்ளன. அதன் 5 மடங்கிலும் 10 குறைவான ஐந்து ரூபா நாணயங்கள் சுதாவிடம் இருக்கின்றன. யாருடைய பணம் கூட எவ்வளவால் கூட? ............
38. ஒரே பெறுமானம்கொண்ட 5 பயணச் சீட்டுக்களை வாங்கிய ஒருவர், பேருந்து நடத்துநரிடம் 40 ரூபா கொடுத்தார். நடத்துநர் அவருக்கு ரூபா 10ஐக் கொடுத்து 2 ரூபா 50 சதம் கேட்டு வாங்கினார். இதற்கேற்பப் பயணச்சீட்டு ஒன்றிற்கான கட்டணம் யாது? ............
39. தந்தை ஒருவரின் வயது அவரது மகனின் வயதிலும் $2\frac{1}{2}$ மடங்காகும். அவரது மகளின் வயது அம்மகனின் வயதின் 3/1 ஐ விட 2 ஆண்டுகள் கூடியதாகும். மகளின் வயது 10 வயதெனின் தந்தையின் வயது யாது?

(விடைகள் அடுத்த வாரம்)

# விவேகம் தோன்ற வேகமாக வாசியுங்கள்!

வாசிப்பு; இது ஒரு சிறந்த கலை. வாசிப்புக் கலையை அதற்குரிய கலை நுணுக்கங்களுடன் எம்மிடத்தில் பேணி வளர்த்துக் கொள்ளவேண்டும்.

இந்தக் கலை மூலம் எதிர் காலத்தில் பெரிய சாதனையையே எம்மால் நிலை நாட்டமுடியும். இந்த நம்பிக்கையின் அத்திவாரத்தில் நாம் வாசிப்புக் கலையை எம்மிடத்தில் கட்டிவளர்க்க வேண்டும்.

வாசிக்கும் பழக்கத்தில் உள்ள சில குறைபாடுகள் காரணமாகப் பலர் தமது காலத்தையும், சக்தியையும், பாழடித்து விடுகிறார்கள்.

வாசிப்பு என்பது மிக வேகமாக வாசித்துமுடித்து, விடயத்தையும் கிரகித்துக் கொள்ளவேண்டும்.

முக்கியமாக, வாசித்ததை நினைவில் வைத்துக்கொள்ள வேண்டும். இம் மூன்றும் வாசிப்பவர்களுடைய தலையாய பிரச்சினைகளாகும்.

எழுத்தெழுத்தாக ஆறுதலாக வாசிப்பது, வார்த்தைக்கு வார்த்தை எழுத்துக் கூட்டி வாசிப்பது, உரத்த தொனியில் வாசிப்பது போன்ற பழக்கங்கள் வாசிக்கும் விடயத்தைப் புரிந்து கொள்ள முட்டுக்கட்டையாக அமைகின்றன.

இது வாசித்ததை மீண்டும் மீண்டும் வாசிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளிவிடுகிறது.

சிலர் வாசிக்கும்பொழுது தலையை அங்குமிங்குமாக அசைத்துக்கொண்டும், சிலர் ஒரு வகை இராகத்துடனும் வாசிப்பதைக் காணலாம்.

#### திறமை வளர...

இவை வாசிப்புக் கலைக்கு விரோதமானவை. கூடிய வரையில் வேகமாக வாசிக்கும் திறமையை நம்மிடத்தே வளர்த்துக்கொள்ளவேண்டும்.

நாம் வாசிக்கும்போது ஒவ்வொருவரும் பலதரப்பட்ட விடயங்களைப் பல்வேறு சந்தர்ப்பங்களில் வாசிக்கிறோம்.

வாசிக்கும் விடயம், அதனால் பெறவேண்டிய பயன் இவற்றைப் பொறுத்து வாசிக்கும் வேகத்தை அமைத்துக்கொள்வது சிறந்தது.

விரைவாக வாசிக்கும் திறமையையும், கிரகிக்கும் சக்தியையும் ஒருவர் தனது சுயப்பயிற்சியின் மூலம் நன்கு வளர்த்துக்கொள்ள முடியும். ஆனால் அதில் ஆர்வம் இருத்தல் அவசியம்.

தொடர்ந்து வாசிக்கும் பொழுது ஒவ்வொரு தடவையும் முன்னைவிட இத்தடவை மிக வேகமாக வாசிக்கவேண்டும் என்ற திடசங்கற்பத்துடன் வாசிப்பை ஆரம்பிக்கவேண்டும்.

இது நாளடைவில் வாசிக்கும் வேகத்தையும், விடயத்தைக் கிரகிக்கும் சக்தியையும் பன்மடங்கு வளர்த்துவிடும்.

வாசிக்க ஆரம்பிக்கும் பொழுதே வேகமாக வாசிக்கத் தொடங்குங்கள்.

முதலில் விடயத்தைப் புரிந்துகொள்வது கடினமாக இருப்பதுபோல் தோன்றலாம். ஆனால் அதையிட்டு கவலையோ, மனத்தளர்ச்சியோ அடைய வேண்டாம்.

விடாமுயற்சியுடன் இப்படி வேகமாக வாசிக்கும் பழக்கத்தைத் தொடரவேண்டும்.

#### விவேகம் ஏற்பட...

வேகமாக வாசிப்பதால், வேகமாக வாசிக்க முடிவதோடு, வேகமாகவே கருத்தைப் புரிந்துகொள்ளும் விவேகமும், சக்தியும் உங்களிடம் வளர்ந்திருப்பதை நீங்களே உணர்ந்து ஆச்சரியத்தில் மூழ்கிவிடுவீர்கள்.

இது உண்மை.

வேகமாக வாசிக்கும் அதே வேளையில் இன்னும் ஒரு விடயத்தை சிந்தித்துக் கொள்ளுங்கள். நீங்கள் வாசிக்கும் புத்தகத்தை எழுதியவர் எதைச் சொல்ல முயல்கிறார் என்பதை ஊகித்து அறியும் சக்தியைப் பெருக்கிக்கொள்ளுங்கள்.

ஆர்வமுடன் வாசிக்கும் போதுகூட அந்த விடயம் பற்றியும் மனதில் ஓரளவுக்கு ஊகிக்கும் சக்தியும் வேண்டும்.

அப்படி அக்கருத்தையும் கிரகித்துக்கொண்டால் நீங்கள் வாசித்துக்கொண்ட கருத்து மனதில் பசுமையாக இருக்கும். அது உங்களுக்கு நன்மை தரும்.

- செல்வி பூங்கொடி அருளம்பலம் -

★

# நன்றி கெட்ட ஆடு...

மாலை நேரம் அமைதியைக் கலைத்துக் கொண்டு ஆட்டுக்குட்டியின் முனகல் ஒலி கோழிக்குஞ்சின் காதில் கேட்டது.

'எதற்காக முனகுகிறாய்?' கோழிக்குஞ்சு கேட்டது.

'இந்தத் தெள்ளு என் இரத்தத்தை உறிஞ்சி வேதனையை உண்டாக்குகிறது. அதனால் வேதனை மிகுதியால் முனகினேன்' என்றது ஆட்டுக்குட்டி.

கோழிக்குஞ்சு இரங்கித் தனது அலகினால் தெள்ளுகளைக் கொத்தி அதன் வேதனையைப் போக்கியது.

மறுநாள் நண்பகல் கோழிக்குஞ்சு பசியால் அலைந்து திரிந்தது. அப்போது ஆட்டுக்குட்டி கஞ்சியைக் குடித்துக் கொண்டிருந்தது.

அதன் அருகில் நெருங்கிய கோழிக்குஞ்சு கஞ்சியினுள் போடப்பட்ட பழஞ் சோற்றை உண்ணத் தொடங்கியது.

ஆத்திரமடைந்த ஆட்டுக்குட்டி தனது சிறிய கொம்புகளால் இடித்தது.

'உனக்கு நான் செய்த நன்றியை மறந்து இப்படிச் செய்கிறாயே?' வருத்தத்துடன் கேட்டது கோழிக்குஞ்சு.

'இல்லை நான் தான் உனக்கு உதவினேன். அந்தத் தெள்ளுகளை நீ கொத்திச் சாப்பிட்டாய் தானே'

கோழிக்குஞ்சு செய்த நன்றியை மறந்து சொல்லியது ஆட்டுக்குட்டி.

கோழிக்குஞ்சு ஞானோதயம் பெற்றவாறு அவ்விடத்தை விட்டு விலகியது.

க. பிரபாகரன்

# அணுவிஞ்ஞானிஒப்பன்ஹீமரின்
## வாழ்விலே ஒரு நாள்...

முதல் அணுகுண்டுப் படைப்பை மேற்பார்வையிட்டு வந்த விஞ்ஞானி ராபர்ட் ஒப்பன் ஹீமர் என்பவர் அமெரிக்க காங்கிரஸ்குழு முன்பு அணுக்குண்டைப்பற்றி விவரங்களை விளக்குவதற்காக இருந்தார்.

இந்தச் செய்தியைக் கேட்க அறிஞர்களும் பெருமக்களும் கூட்டமாகத் திரண்டிருந்தனர்.

ஹீமர் அணுக்குண்டின் அழிவுச் சாதனங்களைக் குறித்து விளக்கிக் கொண்டு வந்த போது,

'இதிலிருந்து தப்பித்து மீட்சி பெற ஏதேனும் வழி இருக்கிறதா...?' என்று ஒருவர் கேட்டார். அதற்கு விஞ்ஞானி,

'இல்லாமல் இருக்குமா? நிச்சயமாக அதுவும் இருக்கிறது' என்றார்.

'அது என்ன தெரிவியுங்கள்' என்று விஞ்ஞானியிடம் மீண்டும் கேட்கப்பட்டது.

விஞ்ஞானி தெரிவிக்கும் பதிலைக் கேட்கக் கூட்டத்தினர் அவரது முகத்தையே பார்த்துக் கொண்டு இருந்தார்கள்.

ஹீமர் தமது முன்னே இருந்த ஒலிபெருக்கியில்,

'அதுதான் சமாதானம்'

என்று மெல்லக் கூறிவிட்டு அங்கே கிடந்த ஆசனம் ஒன்றில் அமர்ந்து கொண்டார்.

★




## "என்ன வண்டி"

அக்கரைச் சீமையில் — செய்த
சக்கர வண்டியாம்
சிக்கனமானதாம் — அதற்கு
சக்கரம் இரண்டேதானாம்
கிண்கிணி ஒலிக்கப் போகுமாம் — சில்லில்
காற்றடித்தால் மட்டும் போதுமாம்
எத்தனை தூரமும் போகுமாம் — காலால்
எட்டி உதைக்க ஓடுமாம்
இத்தனையும் சொன்னேனே — தம்பி
இது என்ன வண்டி சொல்வாய்
தெரியவில்லையா!
சக்கரங்கள் இரண்டேதான் — இது
சைக்கிள் வண்டி தெரியுதா!

— ந. செந்தூரன்

# பற்கள் நிறம் மாறாமல் இருக்க...

நிறம் மாறிய பற்கள் முகத்தின் அழகைப் பாதிப்பதோடு உள்ளத்து உவகையையும் பாதிப்பதுண்டு.

பண்டைய தமிழர்களும் பல் மருத்துவம் பற்றியும், பல்லின் அழகும், நலமும் முக அழகிற்கு இன்றியமையாதது என்றும் அறிந்திருந்தார்கள்.

'அமுதத் துளிகள், வெண்ணிலத்துண்டுகள், மயில் இறகின் வெள்ளிய அடிப்புறம்'— என்றெல்லாம் கம்பன் பற்களைப் பற்றி கன்னித்தமிழெடுத்துக் கூறுகிறான்.

பிரபுலிங்க லீலையில் நல்லாற்றூர் சிவப்பிரகாசசுவாமிகள் கற்பனைக் கடலில் மூழ்கி எடுத்த முத்தான பாடலொன்றைத் தருகிறார்.

தன்னை நிந்தை செய்
வெண்ணகை மேற்பழி கார
மன்னியங்காது நிகரற்ற
வாழ்மனை வாய்தன்
முன்னிறந் திடுவேனென
ஞான்று கொள் முறைமை
யென்ன வெண்மணி மூக்கணி
ஒருத்தி நின்றிட்டாள்.

பாடலின் நாயகி பெயர் மாயை. அவள் ஒளிவீசம் முத்துக் கோர்த்த 'புல்லாக்கு' என்னும் மூக்கணி அணிந்திருக்கிறாள்.

வாய்முன் அம்முத்து புல்லாக்கு தொங்கிக் கொண்டிருக்கிறது.

ஒளியில், வடிவில், அழகில் உயர்ந்தது முத்து.

பற்கள் முத்துப்போல் அமைய வேண்டும் என்றே அனைவரும் விரும்புவர்.

மாயையின் பற்கள் முத்தை விட அழகு...! இதுவரை முத்தே சிறந்தது என்றநிலை. ஆனால் இன்றோ முத்து ஒப்புக்குக் கூட பக்கத்திலே வரமுடியவில்லை! மாயையின் பல்லழகு அப்படி!

அவமானம் தாங்காமல் பல்லுக்குப் பழிவரவேண்டும் என்பதற்காக அப்பற்கள் குடியிருக்கும் வீடாகிய வாய் முன்னால் தூக்குப் போட்டுத் தொங்குகிறதாம் முத்து.

மேற்கண்ட பாடலில் இருந்து பல்லின் அழகிலும் நலத்திலும் பழந்தமிழர் கொண்டிருந்த ஈடுபாடு புரிகிறதல்லவா...?

பற்கள் இயற்கையாகவே இளம் மஞ்சள் நிறம் கலந்து வெண்மையாகக் காணப்படும்.

#### பால்போல...

பால்போல தூய வெண்ணிறமாக எல்லோருக்கும் இருப்பதில்லை.

வாயிலுள்ள எல்லாப் பற்களுமே ஒரே விதமான நிறத்துடன் தென்படுவதில்லை.

பற்களின் நிறம் அவைகளின் சரியான வளர்ச்சியையும், பாதிக்கப்படாத பற்கூழ் குழியின் தன்மையையும் பொறுத்துள்ளது.

பற்களை நன்றாகத் துலக்கி சீராக வைத்துக் கொண்டால் அவைகளின் இயற்கை நிறம் சிறப்பாகவே இருக்கும்.

பற்களின் நிறம் மாறுவதற்கு அதன் மேல் கறைபடிவதே காரணம். இந்தக் கறையை துலக்கிகள் மூலம் எளிதில் எடுத்து விடலாம். வாய் கொப்பளிப்பு மருந்துகள் மூலமாக சுலபமாகக் கரைத்தும் விடலாம்.

Extrinsic Stains எனப்படும் இவை வெளிக் கறைகள் பற்கள் வளரும்போது வளர்ச்சிக் குறைபாடுகள் ஏற்படுவது உண்டு. அதனால் நிறப் பொருட்கள் பல பற்களின் உட்பகுதியில் நிரந்தரமாகத் தங்கி பற்களின் நிறத்தை மாற்றி விடும்.

Intrinsic Stains எனப்படும் உட்கறையை கருவிகளாலோ மருந்துகளாலோ எடுக்கவோ கரைக்கவோ இயலாது என்கின்றனர் பல் மருத்துவர்கள்.



புகையிலை போடுவதும், புகை பிடிப்பதும் மக்கள் சுறுசுறுப்புக்கென்று தேடிக்கண்டு பிடித்த பழக்கங்கள். இப்பழக்கத்தினால் பற்கள் கறுப்பு நிறமாகவோ, காவி கலந்த கறுப்பு நிறமாகவோ மாறிவிடுகிறது.

புகை பிடிப்பவர்களுக்கு பற்களின் நாக்குப் பக்கத்தில் அதிக அளவு கருமை படர்ந்து அருவருப்பான தோற்றத்தை தருவதுடன், நிரந்தர துர்நாற்றத்தையும் தருகிறது.

#### வெற்றிலை போடுவது...

பெண்கள் வெற்றிலை பாக்கு போடுவதினால் சீரணம் ஆகிறது என்றும், கல்சியம் உடலுக்குச் சேருகிறது என்றும், தாம்பத்திய உறவுக்கு முன்னும் வாசனைப் பொருட்கள் கலந்து தாம்பூலம் தரிப்பதும் பழக்கத்தில் கொண்டுள்ளனர்.

இதில் தவறேதும் இல்லை. தொடர்ந்து வெற்றிலை போடுவதினால் நாக்கு மரத்துப்போய் ருசியை இழக்க ஆரம்பிப்பதுடன் பற்களின் இடையில் கனத்த கறை படிகிறது.

அழகான தோற்றம் வேண்டும் என்பவர்கள் இதனைக் குறைத்துக் கொள்வது நலம்.

செம்பினாலான இசைக் கருவிகளை உபயோகிக்கும் இசைவாணர்களுக்கும் பற்களில் பச்சை நிறக் கறை தென்படும்.

இரும்பு கலந்த ஊட்டச் சத்து மருந்துகளை தொடர்ந்து குடித்து வருபவர்களுக்கும் கறுப்புக்கறை ஏற்படலாம்.

ஆகவே பற்கள் அழகாகவும் ஆரோக்கியமாகவும் இருக்க அவற்றை தினம் காலையிலும் இரவிலும் நன்றாகத் துலக்க வேண்டும்.

எந்த ஒரு மாறுதல் தென்பட்டாலும் உடனே பல் மருத்துவரை அணுக வேண்டும். ★

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# நினைப்பது எல்லாம் நடந்துவிட்டால்...!

குறுக்கதை

அன்று- சீதனப் பிரச்சினையில் ராசம்மா கொஞ்சம் கடுமையாகவே இருந்தாள்.

பணத்தாசையால் பந்தபாசங்களையெல்லாம் ஒதுக்கித் தள்ளிவிட்டு படாடோபமான வாழ்க்கைக்கு தன்னை அர்ப்பணித்துவிட்ட ராசம்மாவின் சுயநலத்தன்மையை நினைத்து தமையன் இலங்கேசர் தனக்குள்ளேயே வேதனைப்பட்டாலும் அதை வெளிக்காட்ட விரும்பவில்லை.

தற்போது அவருடைய சிந்தனையெல்லாம் மகள் வனஜாவின் எதிர்காலத்தைப் பற்றித்தான் இருந்தது.

இலங்கேசர் திடநம்பிக்கையோடு மனோவலிமையுடன் திகழ்ந்தாலும் தனது இயலாமையை எண்ணும்போது, ராசம்மாவின் வரட்டுக் கெளரவத்திற்கும் கொஞ்சம் கட்டுப்பட்டவராகவே காணப்பட்டார்.

இருப்பினும் தனக்கும் சகோதரிக்கும் இடையில் கொள்கைரீதியான வித்தியாசம் இருப்பதை இலங்கேசர் ஏற்கனவே உணர்ந்திருந்ததால் முறைப்படி வரன் கேட்கும் விஷயத்தை ராசம்மாவிற்கு தரகர் மூலமாகத் தெரியப்படுத்தியிருந்தார்.

தரகரும் எவ்வளவோ சொல்லிப்பார்த்தார். ஆனால் அவளோ இந்த விஷயத்தில் இம்மியளவும் இளகியதாகத் தெரியவில்லை!

மகன் தினேஷிற்கு கைநிறைய சீதனம் வாங்கி வசதியான இடத்தில் கலியாணம் செய்துவைக்க வேண்டும் என்பதில் அவள் மிகவும் கரிசனையோடு இருந்தாள்.

எமது சமுதாயத்தில் புரையோடிக்கிடக்கின்ற 'சீதனம்' என்ற கொடிய நோயினால் எத்தனையோ இளம் பெண்கள் வாழா வெட்டியாகி அவஸ்தைப்பட்டுக் கொண்டிருக்கும் இன்றைய காலகட்டத்திலும் கூட ஒரு தாயுள்ளத்தின் 'கல்நெஞ்சம்' இன்னும் கனியாது இருப்பதைக் காணும் போது, தரகருக்கு வியப்பாக இருந்தது.

தான் கட்டிய மனக்கோட்டைக்கும், தனது சந்ததி மகிழ்ச்சியோடு வாழ்ந்து கொண்டிருக்கும் காட்சியை கற்பனையிலே கண்டு புளங்காகிதம் அடைந்துகொண்டிருக்கும் ராசம்மாவிடம் இனியும் கதைத்துப் பயனில்லை என்பதை உணர்ந்த தரகர் அவ்விடத்தைவிட்டு மெதுவாக நழுவினார்.

ராசம்மாவின் வரட்டுக் கெளரவம் நீண்டநாள் நிலைக்கவில்லை.

நினைப்பதற்குத் மட்டும் தான் மனிதனுக்கு உரிமையுண்டு என்பது நிரூபிக்கப்பட்டது.

மோட்டார்சைக்கிள் விபத்தொன்றைச் சந்திக்கவைத்த காலன், தினேஷின் கால் ஒன்றைக் கைப்பற்றினான்.

ராசம்மா தாளாத வேதனையால் தவித்தாள்... துடித்தாள்... துவண்டாள்...!

இன்று அயல்நாடு ஒன்றில் பொருத்திய பொய்க்காலின் உதவியோடு சுயமாக நடக்கக் கற்றுக்கொண்டான் தினேஷ்.

சூரியனது பிரகாசமான ஒளியைக்கூட சிலவேளை ஆங்காங்கே காணப்படும் கருமுகில் கூட்டங்கள் மறைத்துவிடலாம். ஆனால் அதுவே ஆதவனுக்கு நிரந்தரத் திரையாகிவிட முடியாது.

அதுபோன்று ராசம்மாவின் தூய்மையான உள்ளத்தை திரைபோட்டு மறைந்திருந்த வரட்டுக் கெளரவமும் படிப்படியாக செயலிழந்துபோக அவளது உள்ளத்து உணர்வுகளும் நிதர்சனமான வாழ்க்கையைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கின.

என்றும் இல்லாத ஓர் பாச உணர்வு அவளது உள்ளத்திலே துளிர்விட ஆரம்பித்தது. சில மைல்களுக்கு அப்பால் இருக்கும் இளங்கேசர் வீடு நோக்கி அவளது கால்கள் அவளை அறியாது நகர்ந்தன.

பணத்திற்காக பந்தபாசங்களையே உதறித்தள்ளிய அவள், இன்று உண்மையான உணர்வுகளோடும் தூய்மையான உள்ளத்தோடும் சென்றாள் வனஜாவைப் பெண் கேட்பதற்கு சென்றாள்.

ஆனால் அங்கே மாங்கல்யத்தோடு மணவறையில் அவன் அவளுக்காய்க் காத்திருந்தான்.

(யாவும் கற்பனை)

- நயினையூர் இ. சிவனேஸ்வரன் -

## நகைச்சுவை

ராமு: காலை, நண்பகல், இரவு மூன்று வேளைகளிலும் சாப்பிடுவதற்கு முன்னர் நாங்கள் இறைவனை வழிபடுகிறோம். உங்கள் வீட்டில் எப்படி?

சோமு: நாம் வழிபடுவது இல்லை! என் அம்மா நன்றாகச் சமைப்பார்.

★ ★ ★

லிப்ட் இயக்குநர்: சரி, மகனே! இனி நீர் லிப்டில் இருந்து வெளியேறலாம்.

பையன்: என்னை உமது மகன் என்று கூற உமக்கு என்ன துணிச்சல்?

லிப்ட் இயக்குநர்: நான் தானே உம்மை மேலே கொண்டுவந்தேன்.

★

# விடியோவின் பாதிப்பு ஏற்படாது திரைப்படங்கள் தயாரிப்பது எப்படி?

ஒரு சினிமாவை விடியோவில் பார்ப்பதற்கும் திரையரங்கில் பார்ப்பதற்கும் அதிக வேறுபாடுகள் உண்டு.

திரையரங்கில் பார்க்கின்றபோது ஏற்படுகிற திருப்தி நிச்சயமாக விடியோவில் பார்க்கின்றபோது ஏற்படாது.

விடியோவால் பாதிப்பே ஏற்படாத அளவில் திரைப்படங்களைத் தயாரிக்க முடியாதா?

முடியும் என்றே சில தயாரிப்பாளர்கள் கருதுகின்றனர்.

எப்படி?

இப்போது கிடைத்துள்ள தொழில்நுட்ப வசதிகளைப் பயன்படுத்திப் படங்களின் பரிமாணம் பெரிதாகவும், காட்சி ஜோடனைகளை பிரமிக்கும் வகையிலும் எடுக்க முன்வர வேண்டும்.

பெரிய அளவில் அரங்கு அமைத்து பிரமிப்பூட்டும் வகையில் படங்களை எடுத்தால் விடியோ பிரச்சினையைக் கட்டுப்படுத்தலாம் என்று கருதப்படுகிறது.

பொதுவாக வெளிநாடுகளில் விடியோவை ஒரு சாம்பிளாகவே பயன்படுத்துகிறார்கள்.

அதாவது, புதிதாக அறிமுகமாகும் சோப் போன்ற பொருள்களுக்கு மக்கள் ஆதரவு தேட சிறிய அளவில் சாம்பிள் அனுப்பி ஆதரவு திரட்டுகிறார்களே அப்படி.

'சாம்பிள் நன்றாக இருந்தால் பெரிய அளவு சோப்பை மக்கள் பயன்படுத்துவது போல, விடியோ மூலம் படம் பார்த்துப் படத்தின் தரத்தை அறிந்து தியேட்டருக்குச் சென்று படம் பார்க்கும் வழக்கம் மேலைநாடுகளில் வழக்கமாக உள்ளது.

அதுபோன்ற ஆரோக்கிய நிலை இங்கும் வரவேண்டும்.

— இப்படித் தமிழ் சினிமாவின் பழம்பெரும் இயக்குநர் ஏ. ஸி. திருலோகசந்தர் கூறுகிறார். ★

# வாழ்க்கையே சினிமா!

சினிமாப்படம் எடுக்கும் கமரா கண்டுபிடிக்கப்பட்ட காலத்தில் ரஷ்யாவில் போராட்டம் நடந்துகொண்டிருந்தது.

அந்தப் போராட்டக்காட்சிகளையே படம் பிடிக்கக் கமராவை அன்று அவர்கள் பயன்படுத்தினார்கள்.

இரண்டாம் உலக மகாயுத்தத்திற்கு ஜேர்மனியை இரண்டாகப் பிரித்து நடுவில் பேர்லின் சுவர் எழுப்பினார்கள்.

அந்த சுவரில் ஜேர்மனியன் ஒருவன் ஏறி நிற்கிறான். சுவரின் ஒரு புறத்தில் அவனது தாயார். மறுபுறத்தில் அவனது காதலி.

இதில் எந்தப்பக்கம் குதிப்பது என்று தெரியாமல் சுவர் மீது நின்றபடியே அவன் மனப் போராட்டம் நடத்துகிற நிலை.

இவ்வாறு அன்றாட வாழ்க்கைப் பிரச்சினைகளையே படங்களாக மேல்நாட்டினர் எடுக்கிறார்கள்.

ஆனால் தமிழ் சினிமா... வாழ்க்கையைச் சினிமாவாகக் காட்டாமல் இன்னும் கதைகளைத் தான் சினிமாவில் சொல்லிக்கொண்டு போகிறார்கள்.

தமிழ் சினிமா இன்னும் இருட்டுக்குள்தான் இருக்கிறது. ஒரு நாள் உதயத்துக்கு வராதா என்று கவலைப்பட்டு தமிழக சினிமாவில் புதுமை டைரக்டராக பிரகாசிக்கும் உதய குமார் கூறுகிறார்.

## மூன்று லட்சம் 'எக்ஸ்ட்ராக்'கள் நடித்த படம்

□ 1982 இல் சேர் ரிச்சர்ட் அட்டன்பரோ எடுத்த 'காந்தி' படம் உலகப்புகழ் பெற்றது.

பலவிருதுகளைப் பெற்ற இப்படம் உலக சாதனை ஒன்றையும் நிலைநாட்டியுள்ளது.

காந்தியின் இறுதி ஊர்வலக் காட்சியில் 3 லட்சத்துக்கு அதிகமான எக்ஸ்ட்ரா நடிகர், நடிகைகள் நடித்தனர் என்று நம்பப்படுவதாக 1990 ஆம் ஆண்டு உலக கின்னஸ் புத்தகம் கூறுகிறது. ★

## அதிக படங்களில் நடித்த ஹோர்ஸ்!

சினிமாக்களில் ஷெர்லோக் ஹோம்ஸ் என்ற துப்பறியும் நிபுணர் பாத்திரம் தான் கூடுதலாக நடிக்கப்பட்டது.

இப்பாத்திரத்தில் எழுபது நடிகர்கள் நடித்திருக்கின்றனர்.

1900 இல் இருந்து 1988 க்கு இடையில் இத்துப்பறியும் நிபுணரை வைத்து 197 படங்கள் தயாரிக்கப்பட்டன.

புகழ்பெற்ற துப்பறியும் நாவலாசிரியர் சேர் ஆதர் கொனன் டொயில் (1859 - 1930) இத்துப்பறியும் பாத்திரத்தைப் படைத்தார். ★

## கலைவாணரின் நகைச்சுவை

ஒரு சமயம் திருவனந்தபுரத்தில் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணனின் நாடக குழுவினர் 'சந்திரஹரி' என்ற நாடகத்தை நடத்தினார்கள்.

சந்திரஹரி மன்னனாக நடித்த கலைவாணர், அவை



கலைவாணர்

யில் வந்து அமர்ந்ததும் உடனே நாட்டியம் ஆரம்பமாவதாக ஒரு காட்சி அமைக்கப்பட்டிருந்தது.

நடன மணிகளாக பெண் வேடத்தில் இரு சிறுவர்கள் நாட்டியமாடத் தொடங்கினார்கள்.

அவர்களுக்குப் போதுமான பயிற்சி இல்லையோ என்னவோ, பாட்டும் தாளமும் ஒரு பக்கமும், அவர்கள் ஆட்டம் ஒரு பக்கமுமாக நாட்டியம் தமாஷாகிவிட்டது. உடனே ரசிகர்கள் கூச்சல் போட்டார்கள்.

கலைவாணர் நிலைமையைப் புரிந்துகொண்டவர் நடனத்தை நிறுத்துமாறு சைகை செய்தபடி அவர் சமயோசிதமாக ஒரு சொந்த வசனம் பேசினார்.

'மதி மந்திரியே! இந்த மங்கையர்களுக்கு உரிய பரிசை உடனே கொடுத்து இவர்களை உள்ளே அனுப்பி, மீதமுள்ள கலையையாவது காப்பாற்றுங்கள்'

இவ்வாறு கலைவாணர் சொன்னதும் அவையில் எழுந்த குபீர் சிரிப்பில் அந்த அபத்தமான நடனத்தையே ரசிகர்கள் மறந்துபோனார்கள். ★

## உலக சினிமாத் தந்தை கிரிபத்

உலகில் 'திரையுலகத் தந்தை' என்று வர்ணிக்கப்பட்டவர் டேவிட்வேர்க் கிரிபித் என்பவர்.

ஹொலிவூட் படவுலகத்துக்குப் பல எண்ணற்ற கலைஞர்கள் உருவானாலும், தனது திறமையாலும், சாமர்த்தியத்தாலும் திரையுலகில் பல அற்புதங்களைச் செய்தவர் இவர்.

1897 இல் சினிமாத்துறையில் அவர் இறங்கினார்.

சிறு வேடங்களில் நடித்த இவர் கதை, கவிதைகளை எழுதுவதிலும் ஆர்வம் காட்டி வந்தார்.

இவரது முதல் படம் 'தி அட்வென்சர்ஸ் ஒப் டோலி' 14. 7. 1908 இல் திரையிடப்பட்டது.

தனது முயற்சியால் அவர் ஹொலிவூட்டில் அற்புதமான மனிதராக விளங்கினார்.

இவருக்குத் திரைப்படக் கலையின் சகல அம்சங்களும் கை வந்த கலையாகியது. திரைக்கதை, வசனம், எடிட்டங், கமரா ஒளிப்பதிவு, நிர்வாகம், டைரக்ஷன் ஆகிய துறைகளில் அவர் சாதனை புரிந்தார்.

1903 முதல் 1914 வரையான காலத்தில் 400 படங்கள் தயாரித்தார்.

அதிலும் ஒரு ரீல், இரண்டு ரீல் படங்களாகத் தயாரித்து பெரும் சாதனை படைத்தவர் கிரிபித் ஒருவரே ஆவார்.

இவர் முழு நீளப்படம் எடுக்க ஆரம்பித்தது 1914 இல்

பிரிட்டிஷ் அரசின் ஒத்துழைப்புடன் முதல் உலக மகாயுத்தத்தை அடிப்படையாகக் கொண்டு 'ஹார்ட் ஒப்தவோல்ட்' படத்தைத் தயாரித்தார். இங்கிலாந்து, பிரான்ஸ் ஆகிய இடங்களில் படப்பிடிப்பை நடத்தினார். அப்படம் பெரிய வெற்றியீட்டியது.

தனது 73 ஆவது வயதில் 1948 ஆம் ஆண்டு மறைந்தார். ★

## ஒரு படத்திற்கு 32 ஆயிரம் உடைகள்

□ 1951இல் 'குவோவாடிஸ்' படம் தயாரிக்கப்பட்டது.

இப்படத்திற்காக மட்டும் 32 ஆயிரம் உடைகள் பாவிக்கப்பட்டன.

இச்சாதனை இன்னும் முறியடிக்கப்படவில்லை என்று உலக கின்னஸ் திறுவனம் அறிவித்திருக்கிறது. ★


# நீங்களும் பஜாஜ் ஒன்றை வாங்கலாம்.




விரும்பிய நேரத்தில் விரும்பிய இடத்திற்கு இலகுவாகப் பயணம் செய்ய நவீன காலத்திற்கு உகந்த வாகனம்......பஜாஜ். நீங்களும் இந்த அற்புதமான பஜாஜ் வாகனம் ஒன்றைச் சொந்தமாக வாங்கி மாதாமாதம் நல்ல இலாபம் சம்பாதிக்க இதுவே சிறந்த வாய்ப்பு.

றிச்சர்ட் பீரிஸ் நிறுவனமும் வங்கிச் சேவையும் இணைந்து வகுத்திருக்கும் சுயதொழில் வாய்ப்பு ஆதாரத் திட்டத்தின் கீழ் பஜாஜ் வாகனம் ஒன்றை வாங்குங்கள். சாரதி அனுமதிப் பத்திரம் கொண்டுள்ள 21 வயதிற்கு மேற்பட்ட அனைவருக்கும் பஜாஜ் வாகனத்தின் விலையில் 60 சதவீதம் கடனாக வழங்கப்படும்.

எனவே, குறைந்தபட்சம் உங்களுக்கு ரூ 35,000 செலவிட முடியுமானல் புத்தம் புதிய பஜாஜ் வாகனம் ஒன்றை உரிமையாக்கிக் கொள்ள முடியும். கடனைத் திருப்பிச் செலுத்துவதற்கு 4 வருடகால அவகாசம் வழங்கப்படும்

பஜாஜ் வாகனம் உங்கள் தொழிலுக்கு மட்டுமல்ல உங்கள் குடும்பத்தினரின் தனிப்பட்ட பயணங்களுக்கும் உகந்தது.

சந்தை... பாடசாலே... கோவில்... உறவினர் இல்லம் ...இப்படி எங்கு வேண்டுமானலும் பஜாஜில் உல்லாசமாகக் சவாரி செய்யலாம்.

இந்த அரிய வாய்ப்பைப் பயன்படுத்தி பஜாஜ் ஒன்றை வாங்குங்கள். நிச்சயமாக நீங்கள் நன்மையடைவீர்கள்.

**றிச்சர்ட் பீரிஸ் மோட்டோர் கம்பனி லிமிட்டெட்**
60, ஹைட்பார்க் கோர்னர்
கொழும்பு 2
தொலேபேசி: 25701/2, 422149, 549480




**பஜாஜ் பயணம் கோடி பெறும்**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாம்பு கடித்தால் செய்ய வேண்டிய முதலுதவிகள் எவை?

வைத்திய சஞ்சீவி

□ சில வகையான பாம்புகளே விஷமிக்கவை. பெரும்பாலான பாம்புகள் விஷமற்றவைதான்.

இருப்பினும் பாம்பைக் கண்டால் படையும் நடுங்கும் என்பர். அத்தகைய பயமே பெரும்பாலான பாம்புக்கடிகளில் எமனாகின்றது.

பாம்புக்கடியினால் கடிபட்ட இடத்தில் இரண்டு கூரியபல் குத்திய இடம்தெரியும். பக்கவாட்டில் கடித்திருந்தால் ஒரு பல்லினால் ஏற்பட்ட கடிவாய் தெரியும்.

U வடிவத்தில் இருப்பின் விஷமற்ற பாம்பின் கடியாக இருக்கும் என அறியலாம்.

**அறிகுறிகள்**

கடிபட்ட இடத்தில் வலி, மரத்துப்போவது, ஊசிகளால் குத்துவதுபோன்ற உணர்ச்சி, வீக்கம், தோல் சிவந்தும் வெதுவெதுப்பாகவும் இருக்கும். கடிவாயில் இருந்து இரத்தம் கசிவதும் தோன்றும்

விஷம் இரத்தத்தில் கலந்த பிறகு குமட்டல், வாந்தி, தலைவலி, ஜுரம், ஒவ்வாமை அறிகுறிகள், அரிப்பு ஆகிய அறிகுறிகளும், பின்னர் நரம்பு மண்டலம் தாக்கப்பட்டதற்கான அறிகுறிகளும் தோன்றத்தொடங்கும்.

**அச்சம் வேண்டாம்**

பலர் பெரும்பாலும் பயத்தின் காரணமாகவே இறந்துவிடுகிறார்கள் என்பது மிகவும் உண்மையாகும். விஷப்பாம்பு கடித்தாலும் கூட, அது அவ்வளவு வேகமாக, ஆழமாகக் கடித்து விஷத்தைப் (நஞ்சை) பாய்ச்சுவதில்லை.

எனவே அச்சத்தின் காரணமாக ஏற்படும் பதற்ற நிலையும், அங்கும் இங்கும் ஓடுவதும் இரத்த ஓட்டத்தை அதிகப்படுத்துவதன் காரணமாகவும் விஷம் அதிக அளவில் இரத்தத்தில் கலந்திட வாய்ப்புண்டாகும். எனவே கடிபட்டவரை அமைதிப்படுத்துவதும், பயத்தைப் போக்குவதும் முதலில் செய்யும் உதவியாகும்.

கடிபட்ட இடத்தை அசையாமல் வைப்பதற்கான நடவடிக்கையை எடுக்கவேண்டும். காலில் கடித்திருந்தால் அவரைப் படுக்கவைக்கலாம். கையில் கடித்திருந்தால் எலும்பு முறிவுகளில் போடுவதுபோல கழுத்திலிருந்து ஒரு துணியைக் கட்டி தொட்டில்போல செய்து கையை அதில் ஆடாது அசையாது வைத்திருக்கச் செய்யலாம்.

முன்பெல்லாம் பாம்பு கடித்த இடத்தில் வலியைக் குறைக்க ஐஸ்கட்டியை வைப்பார்கள்.

அது தவறு எனவும், இதனால் தசையில் சேதம் உண்டாகிறது என்றும் தற்போது கூறுகின்றனர்.



கடிபட்ட இடத்திற்கு 2 அங்குலத்திற்கு மேல்புறம் துணியால் ஒரு கட்டுப் போடலாம். கட்டினை மிகவும் அழுத்தமாக போடக்கூடாது.

ஒரு விரல் நுழையும் அளவிற்குக் கட்டு இருக்கலாம். இறுக்கமான கட்டும், தமனி மீது போடப்படும் கட்டும் இரத்த ஓட்டத்தைத் தடைப்படுத்தி சதை அழிவை உண்டாக்கிவிடும்.

அரை மணிக்கு ஒருமுறை கட்டை தளர்த்தி பின் இறுக்கமாக போடலாம்.

**விஷத்தை உறிஞ்சி எடுப்பது தவறா?**

கடிவாயை தூய நீரால் கழுவலாம். அல்லது கிருமி நாசினி மருந்துகளால் கழுவலாம்.

முன்பு கடிபட்ட இடத்தை தூய்மையான ஆயுதத்தால் கிழித்துவிட்டு இரத்தத்தை பால் உறிஞ்சும் கருவி மூலமோ அல்லது வாய் மூலமாகவோ உறிஞ்சி வெளியேற்றுமாறு அறிவுறுத்துவர்.

ஆனால் அவ்வாறு செய்யும் காயம் விஷம் இரத்தத்தில் கலப்பதைத் தடுப்பதற்கு மாறாக இரத்தக் கசிவை அதிகரிக்கச் செய்துவிடும் என்கின்றனர்.

பாம்புக் கடியால் இரத்தம் உறையும் தன்மை நீங்கிவிட்டிருப்பதால் இரத்தக்கசிவு அதிகமாகும்.

இதனால் நோயாளி இறக்க நேரிடும் என்கிறார்கள்.

கடித்து நேரமாகியிருந்தால் கடித்த இடத்தில் ஏற்பட்டுள்ள வீக்கத்தையும், அழற்சியையும் குறைக்க கடிபட்ட இடத்தை மேலே உயர்த்திவைக்கலாம்.

மக்னீசியம் சல்பேட் ஒத்தடம் பயன்தரும். பாம்பு விஷ முறிவுக்கான ஊசி மருந்துகளைப் பெறுவதற்கும், மருத்துவரை அழைத்து வரவும் ஏற்பாடு செய்ய வேண்டும். ★

# கர்த்தரைத் தேடுங்கள்!

பரலோக ராஜ்யம் என்பது, தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு, மணவாளனை எதிர்கொண்டு அழைக்கப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாகும்.

கன்னிகைகளில் ஐந்து பேர் புத்தியுள்ளவர்களும், மிகுதி ஐந்து பேர் புத்தி இல்லாதவர்களுமாக இருந்தார்கள்.

புத்தியிலாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக் கொண்டு போனார்கள். அதற்கான எண்ணையை எடுத்துச் செல்லவில்லை.

புத்தியுள்ளவர்களோ தங்கள் தீவட்டிகளோடு எண்ணெயையும் கொண்டு போனார்கள்.

மணவாளன் வரத் தாமதித்தபோது அவர்கள் எல்லோரும் நித்திரை மயக்கம் அடைந்து தூங்கிவிட்டார்கள். நடு இரவில்,

'இதோ மணவாளன் வருகிறார், அவரை எதிர்கொண்டு அழைக்கப் புறப்படுங்கள்'

என்று ஒரு எதிரொலி உண்டாயிற்று. அப்போது எல்லாக் கன்னிகைகளும் எழுந்திருந்து தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.

புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி,

'உங்கள் எண்ணெயில் எங்களுக்குக் கொஞ்சம் கொடுங்கள். எங்கள் தீவட்டிகள்



அணைந்து போகிறதே...! என்று அங்கலாய்த்தார்கள். அதற்கு புத்தியுள்ளவர்கள்,

'எண்ணெயை உங்களுக்குத் தருவதன் மூலம் உங்களுக்கும் எங்களுக்கும் போதாமலிராதபடி நீங்கள் விற்கிறவர்களிடத்தில் போய் உங்களுக்கான எண்ணெயை வாங்கிக்கொள்ளுங்கள்' என்றார்கள்.

அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்து விட்டார். ஆயத்தமாக இருந்த புத்தியுள்ள பெண்கள் அவரோடு கூடக் கலியாண வீட்டுக்குள் பிரவேசித்தார்கள். கதவும் அடைக்கப்பட்டது.

எனவே, மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள். மத்தேயு 25:1-13

நீங்கள் நினையாத நாழிகையிலே மனுஷகுமாரன் வருவார், ஆதலால் நீங்கள் ஆயத்தமாக இருங்கள்.

மத்தேயு 24:14

கர்த்தரைக் கண்டடையத் தக்க சமயத்தில் அவரைத் தேடுங்கள். அவர் சமீபமாயிருக்கையில் அவரை நோக்கிக் கூப்பிடுங்கள். ★

# உண்மையான இறைபக்தி

இறைவன் என்னிடத்திலே கூறியது என்னவெனில் தக்வா என்பது ஒவ்வொரு மனிதனும் தனது உள்ளத்தில் நடவேண்டிய மரமாகும். எந்த நீர் தூயதன்மையை வளர்க்கிறதோ அந்த நீரே வாழ்வெனும் வயல் முழுவதும் பாய்ச்சத்தக்கதாகும்.

தூயதன்மை என்ற ஆணிவேரிலிருந்தே ஒவ்வொன்றும் புறப்படுகிறது. அங்கிருந்தே நீங்கள் ஒவ்வொன்றையும் பெறுகின்றீர்கள். ஆனால் அது இல்லையெனில் எல்லாம் அழிந்ததாகிவிடுகிறது.

தூயதன்மையை பெறத்தக்க வழியில் முயலாத ஒருவன் இறைவனைத் தேடுவதாக நாவால் கூறிக்கொண்டிருப்பதில் எந்த நன்மையும் இல்லை.

கேளுங்கள் உண்மையாகவே நான் கூறுகிறேன். எவன் மார்க்கத்துடனுள்ள பற்றுதலை உலகப்பற்றுதலுடன் கலந்து விடுவானோ அவன் அழிக்கப்பட்டவனே ஆவான்.

எல்லா நோக்கங்களும் இறைவனுக்காக அல்லாமல் சில உலகிற்காகவும், சில இறைவனுக்காகவும் கொண்டுள்ள ஆன்மாவிற்கு, மிக அருகில் நரகம் இருக்கிறது.

உங்களுடைய நோக்கங்களிலும் குறிக்கோள்களிலும் உலகவிருப்பங்களை ஒருசிறுதுளி நீங்கள் கலந்துவிட்டால் உங்களுடைய பிரார்த்தனைகளுங் வேண்டுதல்களும் பயனற்றதாகிவிடும்.

இவ்விஷயத்தில் நீங்கள் இறைவனைப் பற்றிப்பிடிக்கவில்லை; மாறாக ஷெய்த்தானையே பின்பற்றுகிறீர்கள்.

நீங்கள் முழுக்க முழுக்க இறைவனைச் சார்ந்து நிற்கவில்லை. அவன் உங்களுக்கு உதவிடவருவான் என நீங்கள் நம்பவும் இல்லை.

இந்நிலையில் நீங்கள் பூமியில் ஒரு புழுவைப் போன்றே இருக்கிறீர்கள். இறைவன் உங்களுடன் இருக்கமாட்டான். அவன் உங்களை அழித்து விடவிரும்புவான். சிறிது காலத்தில் பூச்சிபுழுக்களைப்போல் நீங்கள் அழிந்து போவீர்கள்.

ஆனால் உங்களைப் பொறுத்தவரை ஒரு இறப்பை நீங்கள் ஏற்பீர்களேயானால், இறைவன் உங்களோடு இருப்பான்.

நீங்கள் வாழும் வீடு வாழ்த்தப்படும். இறைவனின் அன்பும் கருணையும் உங்களுடைய வீட்டின் சுவர்களாக அமையும். இத்தகையவர்கள் வாழும் நகரம் அருள்பெற்றதாக அமைந்துவிடும். ★

— தூதன் நூற்றாண்டு மலரில் இருந்து.

**- ஹஸரத் மிர்ஸா குலாம் அஹ்மத் (அலை) -**

தமிழில்: தாஹிரா



# இஸ்லாம்

□ இஸ்லாம் என்றாலே மனிதனைப் புனிதனாக்கும் பயிற்சிக்கேந்திரம் ஆகும்.

காலை முதல் இரவு வரை— பிறப்பு முதல் இறப்பு வரை— ஒரு மனிதன் வாழ்நாளில் எப்படி வாழவேண்டும்? அவனுக்குள்ள கடமை என்ன? அவனது சமூகப் பொறுப்பென்ன? அவனது ஒவ்வொரு அடியும் எதைநோக்கி வைக்க வேண்டும்? என்று இலக்கணம் செய்திருக்கிறது இஸ்லாம்!

இஸ்லாமின் ஐந்து தூண்களாக கலிமா, தொழுகை, ஸகாத், நோன்பு, ஹஜ் ஆகிய ஐந்தும் கருதப்படுகின்றன.

ஆனால், இவ்வைந்தில் ஹஜ்ஜைத் தவிர நான்கு கடமைகள், ரமழான் மாதத்திலேயே சிறப்பிலும் சிறப்பாகச் சிறந்து விளங்கக் காணுகிறோம். ★



# நூல் வரிசை

| | |
|---|---|
| நூல்: | தர்க்க கௌமுதி |
| பதிப்பாசிரியர்: | கலாநிதி சோ. கிருஷ்ணராஜா |
| வெளியிட்டவர்: | ஆலயமணி வெளியீடு - 1990 |
| விமர்சனம்: | நாகேசு தர்மலிங்கம் |

17 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த லோகாக்ஷ பாஸ்கர் என்பவரின் தர்க்க கௌமுதி என்னும் நூல் வெ. குப்புஸ்வாமிராஜா என்பவரால் மொழி பெயர்க்கப்பட்டு 1890 இல் தமிழில் நூலுருப் பெற்று பலருடைய கைக் கெட்டாப் பொருளாகியது.

இன்று 1990 இல் மீண்டும் நீத்தார் நினைவு நூலாக வெளிவந்துள்ளது.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மெய்யியற்துறை விரிவுரையாளர் கலாநிதி சோ. கிருஷ்ணராஜா இந் நூலைப் பதிப்பித்துள்ளார்.

ஆலயமணி ஆசிரியர் புலவர் ஈழத்துச் சிவானந்தனின் வெளியீட்டுரை கலாநிதி சோ. கிருஷ்ணராஜாவின் பதிப்புரை என்பனவும் இந் நூலில் இடம் பெற்றிருக்கிறது.

தர்க்க, தத்துவார்த்தம் முதலிய துறைகளைக் கற்க, ஆராய விரும்பும் உயர்கல்வி மாணவர்கள், ஆராய்ச்சியாளர்களுக்கு பெரிதும்பயன் அளிப்பதாக சிவக்கொழுந்து சண்முகநாதனின் நினைவாக வெளிவந்திருக்கும் ஆலயமணி வெளியீடான ''தர்க்க கௌமுதி'' என்னும் தர்க்க நூல் அமைந்திருக்கிறது. ★

# காரணம் வேறு

கடற்கரையிலே
அவனும் அவளும்
கை கோர்த்துச் செல்வதை
பார்த்திருந்த
நான் நினைத்தேன்
இருவரும் என்றும்
இணைந்திருப்போம்
என்பதைக்
காட்டத்தானாக்கும் என்று.
இல்லையாம்
அவள் சொன்னாள்
இடையில்
என்னை விட்டுவிட்டு
ஓடி விடாதே
என்பதற்காகத் தானாம்.

சாவ. சண்முகதாசன்.

# குப்பை மேட்டில்...

என் சோதரனே!
உன்னைப் பார்க்க
எனக்கு
வெட்கமாக இருக்கிறது!
சமுதாய விடிவுக்கென்று
புறப்பட்ட நீ
குப்பை மேட்டிலல்லவா
ஏறி நிற்கிறாய்?
வாயில் – மதுவாடையும்
கையில் புகையின்பம்
பேச்சிலும்
மதுவின் தென்பு......
எம்மையல்லவா
அவமானப் படுத்துகிறாய் ?!
நாங்கள்
எதிர்காலத்தின்
வசைமொழிக் கஞ்சியே
திணவெடுத்தவர்கள்
இன்னும்
பழிகாரர்கள் ஆனால்
விடிவுக்குத்தான் அர்த்தமென்ன?

— மாவை - வரோதயன்


# YAMAHA Generators

**Packed With Power**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ET | 600A | Petrol | 450 | watts | 16,750/- |
| ET | 900 | Petrol | 650 | watts | 19,250/- |
| EF | 1400HK | Kerosene | 850 | watts | 23,500/- |
| EF | 2000HK | Kerosene | 1400 | watts | 33,500/- |
| EF | 2800HK | Kerosene | 2000 | watts | 39,500/- |
| EDA | 3000 | Diesel | 2700 | watts | 76,500/- |
| EDY | 5000 | Diesel | 5000 | watts | 91,500/- |
| EDK | 10000TE | Diesel | 10 | KVA 3 Phase | 212,500/- |


Sold & Serviced by Sole Distributor

**Associated Electrical Corporation Ltd.**

140, Vauxhall Street,
Colombo - 2.

Telephone 26211-2-3


# சொற்சிலம்பம்



இங்கே வெட்டுக

சொற்சிலம்பம் இல: 115
சஞ்சீவி,
292/ 2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர் ..............................
விலாசம் ..............................
..............................

## போட்டி இல: 115

**இடமிருந்து வலம்:**

1. கந்தக் கடவுள் 6. கடலில் இருந்து எழுவது குழம்பிவிட்டது. 7. இறைவனிடம் வரம் வேண்டிச் செய்யப்படுவது 8. அளவு மாறி உள்ளது. 9. கண்ணன் லீலை புரிந்த நதிக்கரை 11. உருண்டை 12. சீதையை மயக்கிய மிருகம் 13. ''இலகு'' மாறிவருகிறது 15. உற்பத்தி செய்யப்படும் இடம் 16. ''பாறை'' மாறிவருகிறது 17. எல்லாவற்றுக்கும் அடிப்படை இது 20. தடித்த கயிறு கடைசி எழுத்தை இழந்து விட்டது 21. இரத்தம் 22. இது இல்லாமல் தோசையா......?

**மேலிருந்து கீழ்:**

1. முழுமை 2. வீரிட்டுக் கத்துவது தலைகீழாகவுள்ளது 3. வலது குறைந்த ஒரு சொல், ஓர் எழுத்தை இழந்துள்ளது 4. நாடகத் தந்தை சொர்ணலிங்கத்தின் பட்டப் பெயர் 5. கண்ணனின் மாமன் 7. கரி 10. ரோஜாவின் காவலன் 11. திருநாவுக்கரசு நாயனாரின் தமக்கையார் 12. சூரியன் மறையும் நேரம் 14. இது உறுதியாக ஆலும் வேலும் தேவை 15. இதன் மூலம் எதிர்காலத்தை அறிவர் 18. இராமர் அணை உருவாவதற்கு இதுவும் உதவியது 19. ஒன்று திரட்டு.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் கலந்து கொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

**முடிவு திகதி: 06 - 06 - 1990**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செவ்வாயில் இருந்து வெறுங்கண்ணால் சீனப்பெருஞ் சுவரைப் பார்க்க முடியுமா?

● செவ்வாய்க்கிரகத்தில் இருந்து மானிடரின் கண்களுக்கு நேரடியாகப் புலப்படும் மனிதப் படைப்பு—சீனப்பெருஞ்சுவர் மட்டுமே.

இப்படி 1923 இல் கெல்லி, வால்ஷ் ஆகிய இருவர் தொகுத்து வெளியிட்ட நூலின் 'உலகின் எட்டாவது அதிசயம்' என்ற கட்டுரையில் எல். என். ஹேய்ன்ஸ் எழுதியிருக்கிறார்.

1909இல் 'சீனப் பெருஞ் சுவர்' என்கின்ற ஆங்கிலப் புத்தகத்தில் வில்லியம் எட்கள் கெய்ல் என்பவரும்—

1923 ஆம் ஆண்டின் 'நேஷனல் ஜோகிரபி (National Geography) சஞ்சிகையில் ஆடம் வார்விக் என்பவரும் இதுசம்பந்தமாக நீண்ட கட்டுரைகளை வெளியிட்டனர்.

'வானவியலரைப் பொறுத்தமட்டில் சந்திரனிலிருந்து பார்த்தாலும் வெறுங்கண்ணுக்குத் தெளிவாகத் தென்படும் ஒரேஒரு செயற்கை வஸ்து பூமியில் உள்ள சீனப் பெருஞ்சுவர்தான்' —என் அவர்கள் எழுதினர்.

இதனை 1981 இல் அமெரிக்க 'மக்ரா-ஹில்' பதிப்பகம் வெளியிட்ட 'பெருஞ் சுவர்' என்ற நூலின் அணிந்துரையில் ஜேக்ஸ் கொர்னெட் என்ற அறிஞரும் வழிமொழிந்தார்.

அவ்வளவுதான். அமெரிக்காவில் பத்திரிகைகளில் எல்லாம் பிரமாதமாக அடிபட்டது இச்சீனப் பெருஞ்சுவரின் பெருமை.

கட்டடவியல் பற்றிய சஞ்சிகை ஒன்றின் தலைப்புச் செய்தி இது.

'நீங்கள் சந்திரனில் இருந்து சீனப்பெருஞ் சுவரைக் காணலாம்; அல்லது சீனப்பெருஞ் சுவரில் இருந்து சந்திரனைக் காணலாம்'.

ஆனால் 1968 முதல் 1972 வரை சந்திரன் சென்று திரும்பிய அப்போலோ வீரர்கள் — நீல் ஆம்ஸ்ட்ரோங், எட்வின் ஆல்ரின், ஜேம்ஸ் லோவல், ஆலன்பீன், ஹரிசன் ஸ்மித் போன்றவர்கள் சீனப் பெருஞ்சுவரை சந்திரனில் இருந்து காண்பதரிது என்று கூறினர்.

அவ்வளவு தொலைவில் இருந்து நோக்கினால் பூமியே ஒரு கைப்பந்து அளவாக தோன்றுகிறது என்று அவர்கள் கூறினர்.

'ஸ்கைலாப் - 4' கலத்தில் பயணம்செய்த வில்லியம் போக் தனது பைனாகுலர் மூலம் சீனப் பெருஞ் சுவரைக் கண்டதாகக் கூறுகிறார்.

விண்வெளியில் இருந்து வெறுங்கண்ணால் சீனப் பெருஞ் சுவரைக் கண்டதாக 1985 இல் 'டிஸ்கவரி' ஓடத்தில் சென்ற சென்ஜேக் கார்ன், 1988 அக்டோபரில் 'மிர்' விண்கலத்தில் தங்கியிருந்த அலெக்சாண்டர் ரோவும் கூறுகிறார்கள்.

இது எல்லாம் உண்மை அல்ல என்று அறிஞர்கள் கூறுகின்றனர்.

2020 ஆம் ஆண்டில் செவ்வாயில் மனிதன் காலை ஊன்ற திட்டமிட்டுள்ள இந்த நேரத்தில் இப்படி ஒரு கதையா?

இருபதாம் நூற்றாண்டுத் தொடக்கத்தில் யாரோ கிளப்பிவிட்ட புனைசுருட்டு தான் இந்தக் கதை என்று கூறப்படுகிறது. ★

# ஸ்ரீராமன் சொன்ன கதை

'நானும் உன்கூட வருவேன் காட்டுக்கு' என்று சொல்லும் தன் தாயார் கோசலையைப் பார்த்து இராமன் ஒரு கதை சொல்கிறான்.

ஒருவன் ஒருத்தியைத் திருமணம் செய்துகொள்கிறான்.

அவள் பூஜை, புனஸ்காரங்களில் நம்பிக்கை உடையவள். நற்கதியை அடைய பகவானை ஆராதனை செய்ய வேண்டும் என்று எண்ணுகிறவள்.

அதனால் கணவனுக்கு ஒரு சிசுருஷையும்செய்யாது, எப்பொழுது பார்த்தாலும் சுவாமி படத்தின்முன் உட்கார்ந்துகொண்டு பூஜை செய்வாள், மணி அடிப்பாள், கணவனைக் கவனிப்பதைவிட கடவுளைத் தொழுவது தான் சிறந்தது என்று அவள் நினைக்கிறாள்.

அதனால் அக்கணவன் இன்னொருத்தியைத் திருமணம் செய்துகொள்ளுகிறான்.

இந்த இரண்டாவது மனைவிக்குப் பூஜைகளில் நம்பிக்கை கிடையாது. கணவனுக்கு சிசுருஷை செய்வது தான் அவளுக்குப் பிடித்த விஷயம். தப்பித்தவறி கோயிலுக்குக்கூட போக மாட்டாள்.

ஒரு நாள் இந்த மூவரையும் ஒரு புலி அடித்துக் கொன்றுவிடுகிறது.

அடுத்த கணமே வைகுண்டத்திலிருந்து ஒரு விமானம் இவர்களின் ஆவிகளை நோக்கி வருகிறது.

அது தனக்குத்தான் என்று நினைத்துக்கொண்டு முதல் மனைவி அதில் ஏறப்போகிறாள்.

விமான ஒட்டி தடுக்கிறான்.

''இது உங்களுக்காக அன்று. இரண்டாவது மனைவிக்கு' என்று சொல்லி இரண்டாம் மனைவியைப் பார்த்து, 'நீங்கள் பெரிய புண்ணியசாலி. அதனால் நாராயணன் உங்களை வைகுண்டம் அழைத்துவரச் சொன்னார்' என்கிறான்.

'சரி நான் வருகிறேன், என் கணவர்?'

'அவர் பாவி. அவர் போக வேண்டிய இடம் வேறு'.

'அவரின்றி நான் எங்கும் வர மாட்டேன். அவர் இருக்கும் இடம்தான் எனக்கு சொர்க்கம், வைகுண்டம் எல்லாம்.'

விமான ஒட்டி திரும்பிச் சென்று நடந்ததைச் சொல்லுகிறான்.

'எந்த ஆதாரத்தின் பேரில் அவள் கணவனும்கூட வர வேண்டும் என்று சொல்லுகிறாள் என்று கேட்டு வா' என்கிறார் நாராயணன்.

விமான ஒட்டி திரும்புகிறான்.

அவனைப் பார்த்து 'இரண்டாவது மனைவி' நான் புண்ணியசாலி என்று சொல்லுகிறீர்கள். என்னைத் திருமணம் செய்துகொண்ட அவரும் புண்ணியசாலி தானே'? என்று கேட்கிறாள்.

இந்தப் பதிலைக் கேட்ட நாராயணன் 'இருவரையும் அழைத்து வா' என்கிறார்.

'பார்த்தீர்களா, கணவனுக்கு சிசுருஷை செய்த ஒரு மனைவியின் காரணமாக, இருவருக்கும் நற்கதி கிடைத்ததை!' ★

# பிரெஞ்சுப் புரட்சிக்கு உத்வேகம் ஊட்டிய 'வசன முட்டாள்' வால்டேயர்!

பிரான்சியப் புரட்சி உத்வேகம் அடைவதற்கும், சமுதாயத்தின் நலிந்த மக்களுக்காகவும் எழுதி வெற்றிபெறுவதற்கும் காரணமாக இருந்தவர் கவிஞர் வால்டேயர்.

அவரிடம் இருந்து ஒரு கடிதமாவது எனக்கு வர மாட்டாதா என ஏங்கியவர்கள் ஏராளம். அந்த வரிசையிலே ரஷ்யாவை ஆண்ட மகாகதரின் என்ற அரசி முக்கியமானவள்.

டென்மார்க் மன்னன் ஏழாவது கிறிஸ்டியன் வால்டேயரிடமிருந்து கடிதங்கள் வராது விட்டால் தனக்குத் தூக்கமே வராது எனக் கூறுவான்.

**ஆங்கிலக் கவிஞர் வரிசையில்**

மாக்கியவல்லி என்ற எழுத்தாளர் எழுதிய அரசன் என்ற நூலினை ஹிட்லரும், முசோலினியும் தலையணைக்குள் வைத்துப் படிப்பார்கள்.

அது போன்று சுவீடனை அரசாண்ட மூன்றாவது கஸ்டவஸ், வால்டயரின் நூல்களைப் போகும் இடமெல்லாம் கொண்டு திரிவார். இவ்வளவு சிறப்புக்கும் காரணமாக இருந்தவர் பிரெஞ்சு எழுத்தாளர் வால்டேயர்.

இவர் 1694 ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 21ம் நாள் பிறந்தார். 84 ஆண்டுகள் வாழ்ந்தார். இரண்டு நூற்றாண்டுகள் தனது காலடியை அவர் ஊன்றி இருக்கிறார்.

பிறந்த இந்தக் குழந்தை இறந்துவிடுமோ எனப் பயந்தார்கள் பலர்! ஏனெனில் அந்தக் குழந்தை அவ்வளவு பலவீனமானதாக இருந்தது;

உலகத்தை வென்ற அந்தக் குழந்தை வளர்ந்தபோது பல வசனங்களை முற்போக்காக எழுதிக் காட்டியது. அதற்காக அவரின் தந்தையார் வால்டேயருக்கு இட்டபெயர் ''வசனமுட்டாள்''!

அந்த வசனமுட்டாள் மதபோதகரிடம் பாடம் கேட்டு, சீர்திருத்தக் கருத்துக்களால் அவர்களையே புறமுதுகிட்டு ஓடச் செய்தது.

''எனக்குத் தொழில் எழுத்து'' என்றார் மகாகவி பாரதி. இந்த மாபெரும் எழுத்தாளர் வால்டேயர். தனக்குத்தொழில் இலக்கியம் என எழுதி வைத்தார்.

**மன்னனுடன் முரண்பாடு!**

பதினைந்தாம் லூயி பட்டத்துக்கு வந்த நேரம் அவனுக்கு வயது வராத காரணத்தால் தத்துவகாரர் (கார்டியன்) ஒருவரை நியமித்தார்கள். அவனோ மிகவும் மடையன். அரசனுக்குத் தெரியாமல் அவன் குதிரைகளை விற்றான்: பணத்தைக் கையாடல் செய்தான். இதை வன்மையாக விமர்சனம் செய்தார் வால்டேயர்.

அரச சபையிலே கூடும் கழுதைகள் பாதியை விற்றால் கூட நாடு நன்மையடைந்திருக்கும்'' என்று எழுதினார் வால்டேயர். இதற்குச் சன்மானமாகப் பதினைந்தாம் லூயியின் அரசு இவரை பாஸ்டில் சிறையில் தள்ளியது. ஆயினும் மக்களின் போராட்டத்தால் அவர் வெளியே வந்தார்.

**துன்ப இயல் நாடகங்கள்**

துன்ப இயல் நாடகங்கள் ஷேக்ஸ்பியருக்கு எவ்வாறு கைகொடுத்தனவோ அவ்வாறே வால்டயருக்கும் கை கொடுத்தன!

அவர் எழுதிய ஒடிப்பி என்ற நாடகத்தைப் பார்த்த தந்தை இவன் வசன முட்டாள் அல்ல என்று கூறினாராம்.

வால்டேயரின் படைப்புக்களில் இங்கிலாந்தைப் பற்றி அவர் எழுதிய கடிதங்கள் (Letter on the English) மிகவும் முக்கியம் வாய்ந்தவை.

சொலமன் சக்கரவர்த்தியின் காலத்திலிருந்து பதின்மூன்றாம் லூயியின் காலம் வரை என்ற அவரின் நூல் வரலாற்று ஆய்வாளர்கட்குச் சிறந்த ஒரு விருந்து.

வால்டேயர் சிறந்த எழுத்தாளர் என்பது உலகப் பிரசித்தமானது. அவர் சிறந்த சிறுகதை எழுத்தாளர் என்பது பலருக்கும் புரியாத ஒன்று.

வால்டேயர் தனது தள்ளாத வயதில் இரேனி என்ற நாடகத்தை எழுதினார். அது நடிக்கப்பட்டுப் பாராட்டுப் பெற்றதும் நோய்வாய்ப் பட்டார்.

இதையறிந்து மதகுருமார் அவரைக் காணப் புறப்பட்டார்கள். வால்டேயரைக் காண வந்த மதகுருமார், ''உங்களுக்கு ஆத்ம விடுதலையளிப்பதற்காக நாம் வந்திருக்கிறோம்'' - என்று கூறினார்கள்.

அம் மதகுருமார் தாங்கள் கடவுளிடம் இருந்து வந்திருப்பதாகக் கூறினார்கள்.

அதற்கு அத்தாட்சி காட்டும்படி வால்டேயர் கேட்டார்.

வந்தவர்கள் ஆத்திரத்துடன் திரும்பிச் சென்றுவிட்டார்கள்.

அவர் இறந்தபோது எதுவிதமான மதச்சடங்கும் செய்யப்படவில்லை. பிரெஞ்சு எல்லைக்கப்பால் அவர் அடக்கம் செய்யப்பட்டார். இதுவே அறிஞன் வால்டேயருக்குக் கொடுத்த மரியாதை.

ஆனால் 1791 ஆம் ஆண்டில் பிரான்சிய தேசிய சபை கூடி மாபெரும் அறிஞன் வால்டேயரின் அஸ்தியை பிரான்ஸ் நாட்டுக்குக் கொண்டு வந்தார்கள். அங்கே லட்சோப லட்சம் மக்கள் வால்டேயருக்குத் தமது இறுதி மரியாதையைச் செலுத்தினார்கள். ★

- திக்கவயல் தர்மகுலசிங்கம் -

# கனவு காணும் ஆமைகள்

**- விஞ்ஞானம் -**

பாலூட்டிகளுக்கும் பறவைகளுக்கும் தூக்கத்தில் இரண்டு கட்டங்கள் உண்டு. ஒன்று அமைதியான தூக்கம் (Quite Sleep).

மற்றது சலனத் தூக்கம் (Active Sleep).

சலனத் தூக்கத்தின்போது கனவுகள் உண்டாகின்றன.

ஊர்வன இனத்தைச் சேர்ந்த (Reptiles) பிராணிகள் எப்படித் தூங்குகின்றன, அவை கனவு காண்கின்றனவா என்பதைப்பற்றியெல்லாம் உயிரியல் நிபுணர்களுக்குத் தெரியாது.

ஊர்வனவற்றின் மூளைகள் மற்ற பிராணிகளின் மூளைகளிலிருந்து வேறுபட்டிருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

பாலூட்டிகளிலும் பறவைகளிலும் அவற்றின் மூளைகளில் காணப்படும் மின் செயல்பாட்டு வகையிலிருந்து அவற்றின் தூக்கக் கட்டங்களைப் பிரித்துணர முடிகின்றது.

அமைதியான தூக்கத்தின் போது மின்செயற்பாடுகளின் மெதுவான அலைகள் வெளிப்படுகின்றன.

சலனத் தூக்கத்தின்போது அதிக அதிர்வெண்ணுள்ள அலைகள் தோன்றுகின்றன.

பாலூட்டிகள், பறவைகள் ஆகியவற்றின் மூளைகள் ஊர்வனவற்றினுடையதை அதிகமாக முன்னேற்ற மடைந்தவை.

ஊர்வனவற்றில் பின் மூளைப் புறணி (Neo Cortex) மிகச்சிறியது.

பாலூட்டிகளில் அப்பகுதி தான் தூக்கத்தின்போது அலைகளை உண்டாக்குகிறது. அதில்லாமல் தூக்கத்தின் தனித்தனிக் கட்டங்களை இனம்காண முடியாது.

இப்போது மெக்சிகோ தேசியப் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த ஆய்வாளர்கள் (Gopherus Flavomarginatus) என்ற இனத்தைச் சேர்ந்த பாலைவன ஆமையின் தூக்கத்தில் பல கட்டங்கள் இருப்பதைக் கண்டுபிடித்துள்ளனர்.

அந்த ஆமைகளின் தலையில் மின்வாய்களை அமைத்து 24 மணி நேரத்திற்கு ஆமையின் நடத்தைகளையும் மூளையின் செயற்பாட்டையும் பதிவுசெய்தனர்.



கடலினுள் நீந்தும் ஆமை

உஷார் நிலையில் நான்கு கட்டங்கள் இருந்தன.

நின்றுகொண்டு அல்லது நடந்துகொண்டு முழுமையான விழிப்பில் உள்ள ஆமைகளின் மூளையில் விரைவான உயர் மின்னழுத்தச் செயற்பாடுகள் நடைபெற்றன.

ஓய்வுநிலையில் விழிப்புடன் இருந்தபோது மூளைச்செயற்பாடுகள் சற்றுக் குறைந்த வேகத்தில் நிகழ்ந்தன.

ஆமைகள் தூங்கியபோது பெரும்பகுதி நேரத்தில் அமைதித் தூக்கம் அமைந்திருந்தது.

கண்கள் மூடியிருந்தன. தரை தரையிலோ, கீழ் ஒட்டிலோ படிந்திருந்தது. அவற்றின் மூளையில் உயர் மின்னழுத்தச் செயற்பாடுகள் எதுவுமில்லை.

ஆனால் சலனத் தூக்கத்தின்போது மூளையின் விரைவான செயற்பாடுகள் நிகழ்ந்தன.

ஆமை உடலுறுப்புக்களை அசைத்தது. நீந்துவதைப் போலத் தலையையும் கால்களையும் ஆட்டியது. ஆனால் இந்தக் கனவுக்கட்டம் சிறிது நேரமே நீடித்தது.

ஆமையின் உறக்கநேரத்தில் 71 சத வீதம் அமைதித் தூக்கத்திலும், 2 சத வீதம் சலனத் தூக்கத்திலும் கழிந்தது.

மூளைச் செயற்பாட்டுப் பாணிகள் பாலூட்டிகளில் காணப்படுவதிலிருந்து வேறுபட்டிருந்தன. மெதுவான அலைகள் தோன்றவில்லை. எனினும் ஆமைகளின் தூக்கத்தில் இரண்டு தெளிவான தனிக் கட்டங்களிருப்பது தெரிகிறது.

ஆயினும் அவை காணும் கனவுதான் என்ன என்பது தெரியவில்லை. ★

# உலகக் கிண்ண உதைபந்தாட்டப் போட்டி ஜூன் 8 இல் இத்தாலியில் ஆரம்பம்

இத்தாலியில் உலக கோப்பை கால்பந்து போட்டி வருகிற ஜூன் மாதம் 8-ஆம் திகதி தொடங்குகிறது.

இது ஜூலை 8-ஆம் திகதி வரை நடக்கிறது.

**24 அணிகள்**

இந்தப் போட்டியில் பலம் வாய்ந்த பிரேசில், ஆர்ஜென்டைனா, உருகுவே உள்பட 24 அணிகள் கலந்து கொள்கின்றன. இந்த அணிகள் 6 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு உள்ளன.

**உலகக் கோப்பையை வெல்வது யார்?**

இதில் வெற்றி பெற ஒவ்வொரு அணியும் தீவிர பயிற்சி பெற்று வருகிறது.

இந்த உலகக் கோப்பையை வெல்லும் வாய்ப்பு தற்போதைய சாம்பியனான ஆர்ஜென்டைனா, பிரேசில், ஹொலந்து, மேற்கு ஜேர்மனி, உருகுவே ஆகிய அணிகளுக்கே உள்ளது.

**ஆர்ஜென்டைனா**

தற்போது களத்தில் இறங்கும் ஆர்ஜென்டைனா அணி 1930 ஆம் ஆண்டு முதல் தனது தனித்தன்மையை நிலைநாட்டி வந்துள்ளது.

அந்த அணி 1930 ஆம் ஆண்டு உலகக் கோப்பை இறுதிப் போட்டி வரை முன்னேறியது.

கடந்த 1986 ஆம் ஆண்டு உலகக் கோப்பையை ஆர்ஜென்டைனா அணியே கைப்பற்றியது.

**மேற்கு ஜேர்மனி**

ஆர்ஜென்டைனா அணிக்கு சவால் விடும் அணிகளில் ஒன்று மேற்கு ஜேர்மனி ஆகும். அது 9 முறை உலகக் கோப்பை இறுதிச் சுற்றுப் போட்டிகளில் ஆடத் தகுதி பெற்று இருக்கிறது. இதில் 7 முறை அரைஇறுதிப்போட்டி வரை முன்னேறி உள்ளது.

5 முறை இறுதிப் போட்டிக்குள் நுழைந்தது.

மேற்கு ஜேர்மனி அணி 1954 ஆம் ஆண்டும் 1974 ஆம் ஆண்டும் சாம்பியன் பட்டம் வென்றது.

அதன் பிறகு அந்த அணி சரிவை சந்திக்கத் தொடங்கியது.

1982-ஆம் ஆண்டு இத்தாலி அணியிடமும், 1986-ம் ஆண்டு ஆர்ஜென்டைனா அணியிடமும் இறுதிப் போட்டியில் தோற்றுப்போனது.

இத்தனை திறமை மிக்க மேற்கு ஜேர்மனி அணி உலக கோப்பையை வெல்லும் வாய்ப்பு இருப்பதை யாரும் மறுக்க முடியாது.

**உருகுவே**

உலக கோப்பை உதைபந்தாட்டப் போட்டியில் உருகுவே அணிக்கும் தனி இடம் உண்டு




அது 1924 -ம் ஆண்டிலும் 1928 -ம் ஆண்டிலும் ஒலிம்பிக் சாம்பயன் ஆகி உள்ளது.

பின்னர் 1930 -ம் ஆண்டு 1950 -ஆம் ஆண்டில் உலக கோப்பையை வென்று இருக்கிறது.

உலகப் புகழ்பெற்ற உதை பந்தாட்ட வீரர் டைகோ மரடோனா ஆர்ஜென்டைனாவைச் சேர்ந்தவர்.

அவர் நாபோலி என்கிற கிளப்பிற்கு ஆடி வருகிறார்.

இதற்காக மரடோனாவுக்கு அந்தக் கிளப் ஆண்டு தோறும் ரூ. 3 கோடி சம்பளம் வழங்குகிறது.

இந்தப் போட்டியை டெலிவிஷனில் 25 கோடி பேர் பார்ப்பார்கள் எனச் சர்வதேச உதைபந்தாட்டக் கழகம் தெரிவித்துள்ளது.

இது கடந்த உலக கோப்பை (1986) பார்த்த ரசிகர்களின்

**உலக விளையாட்டு**

எண்ணிக்கையைப்போல் 2 மடங்கு ஆகும்.

1986-ம் ஆண்டு மெக்சிகோ உலக கோப்பை போட்டியை 135 கோடி பேர் டெலிவிஷனில் பார்த்தனர்.

**அதிர்ச்சி மரணங்கள்**

1986-ஆம் ஆண்டு நடந்த போட்டியில் பிரேசில் தோல்வி தாளமுடியாத அதிர்ச்சியை அந்நாட்டினருக்கு ஏற்படுத்தியதில் பலர் மாரடைப்பு ஏற்பட்டு மரணம் அடைந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது. ★

# தொழிற்சாலை விபத்துக்களை தவிர்ப்பது எப்படி?

ஒரு விபத்து என்றால் என்ன?

திட்டமிடப்படாத, தவிர்க்க முடியாத ஒரு சம்பவத்தால் உற்பத்தி பாதிப்படைந்தால் அதை தொழிற்சாலை விபத்து என்கிறோம்.

> தொழிற் புரட்சிக்குரிய காலம் இது. எமது தாயகத்திலும் பல தொழிற்சாலைகள் உருவாகி வருகின்றன.
>
> நூற்றுக்கணக்கானோர் அரசு மற்றும் தனியார் தொழிற்சாலைகளில் பணிபுரிந்து வருகின்றனர்.
>
> தொழிலாளர்கள், மற்றும் நிர்வாகத்தினர் ஆகியோருக்கு உதவுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

பாதுகாப்பற்ற இயந்திரங்களினாலே கணிசமான அளவு தொழிற்சாலை விபத்துக்கள் ஏற்படுகின்றன.

தொழிற்சாலைக் கட்டளைச் சட்டம் பற்றிய அறிவு பெரும்பாலான தொழிலதிபர்கட்கும், தொழிலாளிகட்கும் மிகக் குறைவு.

98% தொழிற்சாலை விபத்துக்களிற்கு பாதுகாப்பு அற்ற சுற்றாடல் மற்றும் பாதுகாப்பற்ற இயந்திரங்களும், பாதுகாப்பற்ற தொழிலாளியின் செயல்களுமே காரணமாக அமைகின்றன.

பாதுகாப்பற்ற சுற்றாடலை பாதுகாப்பானவையாக்குவதால் பெருமளவில் தொழிற்சாலை விபத்துக்களைக் குறைக்கலாம். ஆனால் பாதுகாப்பற்ற தொழிலாளியின் செயல்களை மாற்றி பாதுகாப்பாக வேலை செய்பவனாக்குதல் மிகமிகக் கஷ்டமான செயலாகும்.

தொழிற்சாலை விபத்துக்களைத் தடுப்பதற்கு பாதுகாப்பான சுற்றாடலை ஏற்படுத்த வேண்டும். இயந்திரங்கள் பாதுகாப்பானவையாக்கப்படல் வேண்டும். கருவிகள் காலத்திற்குக் காலம் தகுதிவாய்ந்த அதிகாரிகளால் பரீட்சிக்கப்பட்டு அவை பாதுகாப்பானவை என்று அத்தாட்சிப்படுத்தப்படல் வேண்டும். தொழிலாளரையும் பாதுகாப்பாக வேலைசெய்யக்கூடிய முறையில் பயிற்சி கொடுக்கவேண்டும். கடும் கண்காணிப்பு இருக்கவேண்டும்.

தொழிற்பயிற்சி கொடுப்போர், பயிற்சி கொடுக்கும்போது பாதுகாப்பிற்கும் முக்கியத்துவம் கொடுத்து பாதுகாப்பான முறைகளை கற்பிக்க வேண்டும்.

எப்படிப்பட்ட விபத்து நடந்தாலும் அதை உதாசீனம் செய்யாது தீர விசாரிக்கவேண்டும். விசாரணையுடன் நின்றுவிடாமல் தடுப்பு நடவடிக்கைகளையும் அமுல்படுத்தவேண்டும்.

ஊக்குவிப்பு முறைகள் கொடுக்கப்பட்டால் உற்பத்திக்கு மாத்திரம் முக்கியத்துவம் கொடுக்காமல் பாதுகாப்பிற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்படவேண்டும்.

ஆகவே தொழிற்சாலை விபத்துக்களைத் தடுப்பதற்கு தொழிற்சாலைகளில் வேலை செய்யும் எல்லோரும் கூட்டாக பாதுகாப்பிற்கு முக்கியத்துவம் கொடுத்துவந்தால் நிச்சயம் பெருமளவு விபத்துக்களைத் தடுக்கலாம். ★

- கே. சுப்பிரமணியம் -
(தொழிற்சாலை பரிசோதனை பொறியியலாளர்)

## பழைய புத்தகர்

இளசுகளே......
நாம்
பழசுகள் தான்,
ஆனால்
நாம்
வைத்திருப்பவை
உங்களுக்குப்
புதிசுகள்!
நாம்
மரணதண்டனை
விதிக்கப்பட்டவர்கள்!
சமையலறை
சுடுகாட்டிலும்
பலசரக்குக்கடை
இடு காட்டிலும்
இருந்து கொண்டு
நாம்
கருணை மனு
அனுப்புவது
எமக்காகவல்ல,
எங்கள் அறிவும்
எம்மோடு
உடன்கட்டை -
யேறுவதைக்
தடுப்பதற்கே!

— கோவளை· பாபு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டெல்ரா கல்வி நிலையம்
கே. கே. எஸ். றோட், மல்லாகம்.
ஆண்டு - 11, 10, 9 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
விஞ்ஞானம்
★ J. R சூரி ★
சனி, ஞாயிறு - காலை 7.15
தமிழ்: திரு. கணேஷ்
ஆங்கிலம்: திரு. பிறிட்டோ

சஞ்சீவி
சஞ்சிகை
26 - 05 - 1990 சனிக்கிழமை

டெல்ரா கல்வி நிலையம்
கே. கே. எஸ். றோட், மல்லாகம்.
ஆண்டு 11, 10, 9 வகுப்புக்கள் நடைபெறுகின்றன.
கணிதம்
★ செல்வா - மதி ★
சனி, ஞாயிறு - காலை 6.15 மணி
சமூகக்கல்வி: திரு. திருக்குமார்
வர்த்தகம்: திரு. வரதன்

# தீர்வுக்கான அறிகுறி இன்றி இழுபடும் காஷ்மீர் பிரச்சினை

## இம்முறை காஷ்மீர் மக்களும் சம்பந்தப்பட்டிருப்பதே நெருக்கடி வலுப்பதற்குக் காரணம்

காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக கடந்த 5 மாத காலமாக இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையில் இருந்துவரும் நெருக்கடி தளர்வதற்கான அறிகுறி எதுவும் இதுவரை தென்படவில்லை.

தற்போதைய நெருக்கடியில் முஸ்லிம் நாடுகளின் ஆதரவைத் தேடும் முயற்சியில் பாகிஸ்தான் ஜனாதிபதி பெனாஸிர் பூட்டோ (Benazir Bhutto) இறங்கி உள்ளார்.

இவர் ஆரம்பித்துள்ள வெளிநாட்டுப் பயணம், பிரச்சினையில் அமெரிக்காவும்



வி. பி. சிங்.

சோவியத் யூனியனும் முதல் தடவையாக நேரடியாகத் தலையிட்டிருப்பது ஆகியவை யுத்தம் எந்நேரமும் மூளும் சாத்தியங்கள் இருப்பதையே கோடு காட்டுகின்றன. எனினும் சர்வதேசஅவதானிகளின் மதிப்பீட்டின்படி யுத்தம் மூள்வதற்கான சாத்தியங்கள் 50க்கு 50 வீதமே இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

காஷ்மீரில் இவ்வாரம் முஸ்லிம் பிரிவினைவாதத் தலைவர் ஒருவர் சுட்டுக்கொல்லப்பட்டது நெருக்கடியை மேலும் அதிகரித்துள்ளது. இதனை அடுத்துமூண்ட வன்செயல்களில் 50 க்கும் அதிகமான முஸ்லிம்கள் இந்தியப் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டுள்ளனர்,

### 8 நாள் விஜயம்

பாகிஸ்தான் ஜனாதிபதி பெனாஸிர் பூட்டோ முஸ்லிம் நாடுகளில் எட்டு நாள் விஜயம் ஒன்றை கடந்தவார இறுதியில் ஆரம்பித்திருந்தார். ஈரான், ஜோர்தான், தென்யேமன், லிபியா, துருக்கி, எகிப்து உட்பட்ட இந்த நாடுகளில் காஷ்மீர் பிரச்சினை தொடர்பாக பாகிஸ்தானின் நிலைப்பாட்டை இவர் விளக்கிவருகிறார். இவரது விஜயம் இந்தியாவை மேலும் யுத்த முஸ்திபுகளுக்குத் தூண்டி வருகிறது.

பாகிஸ்தான் யுத்தம் ஒன்றை ஆரம்பிக்கப்போவதாகவும் நட்பு நாடுகளின் ஆதரவைத் திரட்டும் முயற்சியில் பெனாஸிர் பூட்டோ ஈடுபட்டுள்ளார் என்றும் இந்தியா பிரசாரம்செய்ய ஆரம்பித்துள்ளது.

### படைக் குவிப்பு

உபகண்டத்தில் யுத்தபீதி அதிகரித்து வருவதற்கு முக்கிய காரணம் இந்தியா-பாகிஸ்தான் எல்லையில் இடம்பெற்றுவரும் படைக் குவிப்பே. தற்போதைய நெருக்கடி ஆரம்பித்த வருட முற்பகுதியில் சொற்போரில் மாத்திரம் இரு நாடுகளும் ஈடுபட்டிருந்தன. தற்போது இது யுத்தமாக உருவெடுத்து வருகிறது. இரு நாடுகளின் எல்லையிலும் பெரும் அளவில் படைகள் அணி திரண்டிருப்பதாகச் செய்திகள் தெரிவிக்கின்றன.

பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் உள்ள அஸாத் காஷ்மீரில் 10 ஆயிரம் மேலதிக பாகிஸ்தான் துருப்புகள் புதிதாகக் குவிக்கப்பட்டிருப்பதாக இந்தியா தெரிவிக்கிறது. இதனைப் பாகிஸ்தான் மறுத்துள்ளது.

அதேசமயம் பஞ்சாப்-சிந்து எல்லைகளிலும் அஸாத்-காஷ்மீர் எல்லையிலும் இந்தியப் படைகள் குவிக்கப்படுவதாக பாகிஸ்தான் குற்றஞ்சாட்டி வருகிறது. யுத்த நெருக்கடியின் உச்சக்கட்டம் என்றே இதனை அவதானிகள் கருதுகிறார்கள்.

யுத்தம் மூண்டால் இதற்கு முன் நடந்த யுத்தங்களை விட இது மோசமானதாக இருக்கலாம். முதல்தடவையாக அணுஆயுதங்கள் பாவிக்கப்படலாம் என்று அமெரிக்கா அஞ்சுகிறது.

1947 இல் இந்தியாவும் பாகிஸ்தானும் சுதந்திரம் அடைந்தபின்னர் காஷ்மீர் தொடர்பாக இருயுத்தங்களையும், கிழக்குப் பாகிஸ்தான் தொடர்பாக (தற்போது பங்களாதேஷ்) ஒரு யுத்தத்தையும் நடத்தியுள்ளன. தற்போதைய யுத்த முஸ்தீபுகளை நோக்கும்போது இருநாடுகளும் இன்னும் சலிக்கவில்லை என்றே கூறத்தோன்றுகிறது.

காஷ்மீர் தொடர்பாக இதுவரை நடந்த இருயுத்தங்களும் பிரச்சினையைத் தீர்க்க எந்த விதத்திலும் உதவவில்லை. பதிலுக்கு நெருக்கடி மேலும் அதிகரிக்கவே வழிவகுத்திருக்கின்றன.

1949 இல் இஸ்ரவேல் உருவாக்கப்பட்ட பின்னர் 3 யுத்தங்களை இஸ்ரவேலும் அரபுநாடுகளும் நடத்தியிருக்கின்றன. 1973 அக்டோபரில் நடந்த கடைசி யுத்தத்தின் பின்னர் மத்திய கிழக்கில் படிப்படியாக உருவாகிவந்த சுமுகமான சூழ்நிலை தற்போது "அமெரிக்க சமாதானத் திட்டம்" என்ற பெயரில் வந்து நிற்கின்றது. அதுமட்டுமல்ல சமாதானத் திட்டத்தை ஏற்குமாறு சர்வதேச நெருக்கடிக்குள் இஸ்ரவேல் தள்ளப்பட்டிருக்கிறது.

ஆனால் உபகண்டத்தைப் பொறுத்தவரை எந்த ஒரு சமரச முயற்சியும் வெற்றி பெறும் அறிகுறிகள் இல்லை. காஷ்மீர் நெருக்கடி தொடர்பாக தற்போது அமெரிக்கா ஆரம்பித்துள்ள சமரச முயற்சிக்கும் பூரண ஆதரவு இல்லை.

இரு நாடுகளும் பொறுமையைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றும் பிரச்சினைக்கு



பெனாஸிர்

அரசியல் தீர்வு காணப்பட வேண்டும் என்றும் அமெரிக்கா கருதுகிறது.

### அமெரிக்கத்தூது

அமெரிக்காவின் விசேஷ தூதுவராக அமெரிக்கதேசிய பாதுகாப்புக் கவுன்ஸிலின் பிரதி ஆலோசகர் ரொபேர்ட் கேற்ஸ் (Robert Gats) சமீப கிழக்கு, தென் ஆசிய விவகாரங்களுக்கான அமெரிக்க உதவிச் செயலாளர் ஜோன் கெல்லி (John Kelly) இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் விஜயம் ஆரம்பித்துள்ளார்.

இந்திய - பாக். தலைநகரங்களுக்கு அமெரிக்கப் பிரநிதிகள் வருவதற்கு முன் கடந்த சனிக்கிழமை தென்யேமன் தலைநகரான சானாவில் வைத்து பெனாஸிர் பூட்டோவுடன் எதிர் பாராத சந்திப்பு இடம் பெற்றது.

அமெரிக்காவின் சமரச முயற்சிக்கு இந்திய அரச ஆதரவு அளிக்க மாட்டாது. என்று இந்தியா பகிரங்கமாகத் தெரிவித்து விட்டது. அமெரிக்கப் பிரதிநிதிகள் விரும்பினால் வந்து போகட்டும் ஆனால் அமெரிக்க சமரச முயற்சி எதனையும் ஏற்க முடியாது என்று இந்தியா திட்டவட்டமாக அறிவித்து விட்டது,

பிரதமர் வி. பி. சிங்கின் தேசிய முன்னணி அரசுக்கு ஆதரவு அளித்து வரும் வலதுசாரி பாரசீய ஜனதாக்கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) ஆகியவையும் அமெரிக்க சமரச முயற்சியை எதிர்ப்பதாகத் தெரிகிறது. இந்தியா சுதந்திரம் அடைந்த கடந்த 43 வருட காலச் சரித்திரத்தில் அமெரிக்க - இந்திய உறவு எந்தக் கட்டத்திலும் சிறப்பாக இருந்ததில்லை. பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்கிய உதவிகளே இதற்குக் காரணம்.

காஷ்மீர் பிரச்சினை இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான பிரச்சினை. இதில் எந்த ஒரு மூன்றாவது நாட்டின் தலையீடும் பலன் அளிக்காது என்று இந்தியா கருதுகிறது.

அமெரிக்க சமரச முயற்சிகளுக்கு மத்தியில் இந்தியா தன்னை யுத்தத்துக்குத் தயாராக்கிக் கொள்ளும் நோக்கத்துடன் தேசிய பாதுகாப்புக் கவுன்சில் ஒன்றை (National Security Council) உருவாக்கும் முயற்சியில் ஈடுபட்டிருக்கிறது. பிரதமர் வி. பி. சிங். முப்படைகளின் தளபதிகள், முக்கிய மாநிலங்களின் முதலமைச்சர்கள் தேசிய பாதுகாப்புக் கவுன்சிலில் அங்கம் வகிப்பார்கள்.

### ராஜீவ் கண்டனம்

உபகண்டத்தில் உருவாகி உள்ள நெருக்கடி நிலைக்கு முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி தற்போதைய இந்திய அரசையே குற்றம் காட்டி வருகிறார். தனது அரசியல் இயலாத் தன்மையை மூடி மறைப்பதற்காக வி. பி. சிங். நாட்டை யுத்தம் ஒன்றுக்குள் தள்ளுகிறார் என்று ராஜீவ் காந்தி குற்றஞ்சாட்டி வருகிறார். சிறுபான்மை அரசு ஒன்று தன்னையும் தனது கட்சியையும் பாதுகாக்க நாட்டை யுத்தத்துக்குள் தள்ளுவது மிகவும் மோசமான செயல் என்கிறார் ராஜீவ்காந்தி.

1949 ஐ. நா. பாதுகாப்புச் சபையின் தீர்மானத்துக்கு இணங்கக் காஷ்மீரில்சர்வஜன வாக்கெடுப்பு நடத்தப்பட்டு பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்கிறது பாகிஸ்தான்.

காஷ்மீர் முஸ்லிம்களுக்கு ஆயுதப் பயிற்சி அளிப்பதையும், ஆயுத உதவி அளிப்பதையும் பாகிஸ்தான் நிறுத்திக் கொள்ளவேண்டும் என்று இந்தியா கோரி வருகிறது.

1947 இந்திய - பாக். பிரிவினையுடன் பிரசவமானதுதான் இந்தக் காஷ்மீர் பிரச்சினை.

கடந்த காலங்களில் இப்பிரச்சினையில் இந்தியாவும் பாகிஸ்தானுமே நேரடியாகச் சம்பந்தப்பட்டிருந்தன. ஆனால் இம் முறை பிரிவினைப் போராட்டத்தை ஆரம்பித்ததன்மூலம் காஷ்மீர் மக்களும் இதில் நேரடியாகச் சம்பந்தப்பட்டிருக்கிறார்.

ஆகவே இப்பிரச்சினையில் யுத்தத் தீர்வோ அல்லது அரசியல் தீர்வோ வலுக்கட்டாயமாகத் திணிக்கப்பட்டு விட்டது.

★

உலகஉலா
என்.பி.சீலன்

---

### சொற்சிலம்பம் இல: 114

**பரிசுபெற்றவர் விபரம்**

**முதலாவது பரிசு:**
திரு. சு. இராமநாதன்,
பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

**இரண்டாவது பரிசு:**
திரு. ச. மாணிக்கத் தியாகராசா,
கெருடாவில் இ. த. க. பா., தொண்டைமானாறு.

**மூன்றாவது பரிசு:**
ஜெஸீமா - இஸ்மாயில்,
இல: 429, டச்சுவீதி, சாவகச்சேரி.

**சொற்சிலம்பம் இல: 114 சரியான விடைகள்**

**இடமிருந்து வலம்**
1. சுமங்கலி 3. வலை 6. தடாகம் 9. சிந்து 11. ரகம் 12. காதலன் 14. பல்லவி 15. மன் 16. துதி 17. வது 18. சுவளம் 19. சரவணன் 20. புறா.

**மேலிருந்து கீழ்**
1. சுந்தரம் 2. கலம் 4. லைலா 5. குந்தவி 7. கடா 8. கம்பன் 10. சில 12. காலதேவன் 13. திறன் 15. மதுர 16. தும்பு 17. வசதி 18. கண.

---

## தெரிந்த நாடு தெரியாத விவரம் > யேமன் குடியரசு

கிழக்கு ஐரோப்பிய நாடுகளில் ஜனநாயக அலை கடந்த ஆண்டில் வீச ஆரம்பித்தது.

அத்துடன் பிரிந்த நாடுகள் மீண்டும் இணையும் முயற்சிகளும் ஆரம்பித்தன.

இரண்டாம் உலக மகாயுத்தத்தின் போது இரண்டாகப் பிரிந்த கிழக்கு ஜேர்மனியும் மேற்கு ஜேர்மனியும் மீண்டும் ஒரு ஜேர்மனியாகும் பணி நடந்து கொண்டிருக்கிறது.

இதோ ஜேர்மன் இணைப்பு என்று செய்தி ஸ்தாபனங்கள் தினமும் அறிக்கைகளை வெளியிட்டுக்கொண்டிருக்கும் தருணத்தில்—

யேமன் இணைந்து விட்டது; ஒரு நாடாகி விட்டது. புதிய ஜனாதிபதி தெரிவு செய்யப்பட்டு விட்டார் என்று கடந்த வாரம் உலக வானொலிகள் அறிவித்தன.

ஒரு கணம் திகைப்பு. பின்னர்தான் தெரிந்தது, இஸ்லாமிய நாடுகளான வட யேமனும் தென் யேமனும் இணைந்து கொண்டன என்பது.

இரண்டு யேமன்கள் பற்றிய விவரம் வருமாறு;

ஒருபக்கம் செங்கடல் மறுபக்கம் அரபிக்கடல் ஆகிய எல்லைகளும் தரையில் சவூதி அரேபியா, ஓமான் ஆகிய நாடுகளை எல்லைகளாகக் கொண்டு ஒன்றிணைந்த யேமன் அமைகின்றது.

### தென் யேமன்

உத்தியோக பெயர்: மக்கள் ஜனநாயக யேமன் குடியரசு.

அரசாங்கம்: ஒரு கட்சி ஆட்சி.

நாட்டின் தலைவர்: சுப்ரீம் மக்கள் கவுன்ஸில் தலைவர்.

அரசுத் தலைவர்: பிரதம மந்திரி.

தலைநகர்: ஏடன்,

உத்தியோக மதம்: இஸ்லாம்.

உத்தியோகமொழி: அரபு.

கரன்ஸி: யேமெனி டினார். (ஒரு யேமன் டினார் 2.92 அமெரிக்க டொலருக்குச் சமம்.

மக்கள் தொகை: 22 லட்சத்து 78 ஆயிரம் பேர்.

விஸ்தீரணம்; 3 லட்சத்து 36 ஆயிரத்து 869 சதுர கிலோ மீற்றர்.

இன விகிதாசாரம்: அரபு- 95%. இந்திய - பாகிஸ்தானியர் 1.8 வீதம், மற்றும் ஏனையோர்.

மத விகிதாசாரம்: இஸ்லாம் 99.5 வீதம், இந்து 0.2 வீதம்.

உற்பத்திப் பொருட்கள்: விவசாயம், கடற்றொழில், கோதுமை, புகையிலை, கால்நடைவளர்ப்பு.

ஆயுதபடைபலம்: 27 ஆயிரம் பேர் (இராணுவம் - 87.3 வீதம், கடற்படை 3.6 வீதம். விமானப்படை 9.1 வீதம்.

கல்வி: படிப்பறிவற்றவர்கள் தொகை 62 வீதம்.

சுகாதாரம்: 4287 பேருக்கு ஒரு டாக்டர், 629 நோயாளருக்கு ஒரு படுக்கை வீதம் ஆஸ்பத்திரியில் உள்ளது. ஆயிரத்துக்கு 137 குழந்தைகள் பிறந்தவுடன் இறக்கின்றன.

### வட யேமன்

உத்தியோக பெயர்: யேமன் அரபுக் குடியரசு.

அரசு முறை; ஒரு கட்சி ஆட்சி.

நாட்டினதும் அரசினதும் தலைவர்: ஜனாதிபதி.

தலைநகரம்: சனா.

உத்தியோகமொழி: அரபு.

உத்தியோக மதம்: இஸ்லாம்.

கரன்ஸி: யேமன் ரியால். ஒரு யேமன் ரியால் ஒரு அமெரிக்க டாலருக்குச் சமம்.

சனத்தொகை: 83 லட்சத்து 86 ஆயிரம்.

விஸ்தீரணம்; ஒரு லட்சத்து 35 ஆயிரத்து 230 சதுர கிலோ மீற்றர்.

இனவிகிதாசாரம்: அரபுக்கள்.

மதவிகிதாசாரம்: ஷியா முஸ்லிம் 60 வீதம், சுனி முஸ்லிம் 40 சத வீதம்.

உற்பத்திப் பொருட்கள்: சோளம், காய்கறிகள், உருளைக்கிழங்கு, புகையிலை, கோதுமை, கரும்பு, கால்நடைவளர்ப்பு, 5 லட்சம் கழுதைகளும் 60 ஆயிரம் ஒட்டகங்களும் உள்ளன.

ஆயுதபடை பலம்: 36,550 வீரர்கள் (இராணுவம் 95.8 வீதம், கடற்படை 1.5 வீதம், விமானப்படை 2.7 வீதம்.

கல்வி: எழுதத் தெரிந்தோர்- 5.3 வீதம் மட்டுமே. எழுத, வாசிக்கத்தெரிந்தோர் 10.6 வீதம்.

சுகாதாரம்: டாக்டர்கள் 1,234 (6,631 பேருக்கு ஒருவர்) ஆஸ்பத்திரிகளில் படுக்கைகள் - 1,367 நோயாளிகளுக்கு ஒன்று. ஆயிரம் குழந்தைகள் பிறந்தால் 164 குழந்தைகள் இறக்கின்றன. ★

---

## ஓடுவதற்கு உதவும் செயற்கைக்கால்!

□ கால் இழந்தோருக்குப் பொருத்தப்படக்கூடிய புதுமையான 'செயற்கைக் கால்' ஒன்றை கலிபோர்னியாவைச் சேர்ந்த 'பிளெக்ஸ் புட் இன் கோப்பரேட்' என்னும் அமெரிக்க நிறுவனம் தயாரித்து இருக்கிறது.

இயற்கையான காலைப் போலவே இயக்கக்கூடியது என்பதுதான் இந்தப் புதிய செயற்கைக் காலின் தனிச் சிறப்பாகும்.

ஆனால், இப்போது புதிதாக உருவாக்கப்பட்டுள்ள செயற்கைக் காலில் கால், பாதம் ஆகிய இரண்டுமே ஒரு துண்டாகச் செய்யப்பட்டுள்ளது.

கார்பன், கிராபைட் ஆகியவற்றில் செய்யப்பட்டுள்ள இந்தச் செயற்கைக் காலுக்கு 'மொடுலர் II பிளெக்ஸ்புட்' ('Modular II Flex Foot) என்று பெயரிடப்பட்டுள்ளது.

### உலோகத் துண்டு

இதன் உள்ளே உலோகத் துண்டு ஒன்று இணைக்கப்பட்டுள்ளது.

இதனைப் பயன்படுத்திப் பாதத்தையோ அல்லது குதிக்காலையோ தேவையானபடி திருப்பமுடியும்.

இந்தப்புதிய செயற்கைக் கால் மிகவும் உறுதியாகச் செய்யப்பட்டுள்ளது.

இதனைப் பொருத்திக் கொண்டு ஓடவும், மலை யேறவும்கூட இயலும்.

இதன் எடை 226 கிராம்கள்தான்.

இந்தப்புதிய செயற்கைக் காலைத் தயாரித்துள்ளவரும், கால் இழந்த ஒருவர்தான் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ★

---

நாளை இறுதிப் போட்டி

## ஜொலிஸ்ரார்-ஜொனியன்ஸ் மோதல்

## ஷ்றா கிண்ணம் யாருக்கு?

ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகத்தினால் நடத்தப்படும் யாழ்ப்பாணக் கழகங்களுக்கிடையிலான மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கிரிக்கெட் போட்டியின் இறுதிப்போட்டி நாளை(ஞாயிறு) நடைபெறவுள்ளது.

ஷப்றா கிண்ணத்திற்காக வருடாவருடம் நடத்தப்படும் போட்டிகளில் இது நான்காவதாகும்.

யாழ் இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்று வரும் இப்போட்டியில் பதினெட்டுக்கழகங்களைச் சேர்ந்த பத்தொன்பது அணிகள் பங்குபற்றின.

சென்ற ஞாயிறு நடைபெற்ற அரை இறுதிப்போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணியும், ஜொனியன்ஸ் அணியும் வெற்றிபெற்று நாளை நடைபெறவுள்ள இறுதிப் போட்டிக்கு தெரிவாகியுள்ளன.

சென்றலைட்ஸ் (சொக்ஸ்) அணிக்கெதிரான அரையிறுதிப் போட்டியில் ஜொனியன்ஸ் அணி 3 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

முதலில் ஆடிய சென்றலைட்ஸ் அணி 28.3 ஓவர்களில் 162 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

தொடர்ந்து ஆடிய ஜொனியன்ஸ் அணி [illegible] 166 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

'நியூகோல்ஸ்' அணிக்கெதிரான மற்றைய அரை இறுதிப் போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றது. முதலில் ஆடிய 'நியூகோல்ஸ்' அணி 26.4 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 140 ஓட்டங்களைப் பெற்றது.

தொடர்ந்து ஆடிய ஜொலிஸ்ராஸ் அணி 23.4 ஓவர்களில் 6 விக்கெட் இழப்பிற்கு 143 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

ஷப்றா கிண்ணத்திற்கான முதலாவது போட்டியை யாழ்ப்பாணம் மத்தியஸ்தர்கள் சங்கம் ஒழுங்குசெய்து நடத்தியது.

1986 ஆம் ஆண்டு சென் பற்றிக்ஸ் மைதானத்தில் நடைபெற்ற அப்போட்டியில் ஜொலிஸ்ரார்ஸ் அணியை தோற்கடித்து ஜொனியன்ஸ் அணி சாம்பியனாகியது.

ஷப்றா கிண்ணத்திற்கான இரண்டாவது போட்டியை ஜொலிஸ்ரார்ஸ் விளையாட்டுக் கழகம் யாழ் இந்து மைதானத்தில் நடத்தியது.

1988 ஆம் ஆண்டு நடைபெற்ற இப்போட்டியில் கொக்குவில் மத்திய சனசமூக நிலைய அணியை வென்றதன் முலம் ஜொனியன்ஸ் அணி சம்பியனானது.

ஷப்றா கிண்ணத்திற்கான மூன்றாவது போட்டியையும் ஜொலிஸ்ராஸ் கழகம் ஒழுங்குசெய்து சென்பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடத்தியது.

1989 ஆம் ஆண்டு நடைபெற்ற இப்போட்டியில் ஷப்றா அணியைத் தோற்கடித்து சென்றலைட்ஸ் கழக அணி சாம்பியனானது.

நாளை நடைபெறும் இறுதிப்போட்டியில் மோதும் இரு அணிகளிலும் அனுபவம் வாய்ந்த சிறந்த வீரர்களும், உற்சாகமும் துடிப்பும் நிறைந்த இளம் வீரர்களும் உள்ளனர்.

பெருவிருந்தாக அமையவுள்ள இப்போட்டியைக் காண ரசிகர்கள் ஆவலுடன் பெருமளவில் திரளுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. ★

- ஸ்ரீகாந்த் -

விளையாட்டுத் துறை

---

### வாழ்க்கையும் நாங்களும்

இருளைக் கண்டு
அஞ்சுபவர்களல்ல—நாங்கள்
ஏனெனில் இளைஞர்கள்.

இந்த இருளிலும்
நாங்கள் உறங்க
மறுப்பதால் தான்
அடுத்த சந்ததியின்
ஜனனம் என்பதே
சாத்தியப்படுகிறது எனும்
சத்தியத்தை
அறிந்தவர்கள்.

மலர்மாலைகளை
மட்டுமல்ல
மலர்வளையங்களையும்
நேசித்தபடியே
நாமும் வாழ்கிறோம்
பூமிப் பந்தில் – எம்
தேசப்படத்தைக்
குறிப்பதற்காக

ஆதலால்
எமது கல்லறைகள் கூட
கருவறைகளாகி ஆயிரம்
மலர்களைப் புஷ்பிக்கும்

— இளையவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org